# கலைத்தளிர்

இதழ் - 03





**தவத்திரு தனிநாயகம் முத்தமிழ் மன்றம்**

யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

யாழ்ப்பாணம்

2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர் மொழி வாழியவே" – பாரதி

# கலைத்தளிர்

## இதழ் : 3

**தனிநாயகம் முத்தமிழ் மன்றம்**
**யா/ திருக்குடும்ப கன்னியர்மடம்**
**(தேசிய பாடசாலை)**
**யாழ்ப்பாணம்**

2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| **நூல்** | : | கலைத்தளிர் (கலை இலக்கிய இதழ் – 03) |
| **வெளியீடு** | : | தனிநாயகம் முத்தமிழ் மன்றம்<br>யா/திருக்குடும்ப கன்னியர்மடம்<br>யாழ்ப்பாணம் |
| **பதிப்பு** | : | ஆடி 2014 |
| **இதழாசிரியர்** | : | செல்வி.ஆன் மக்ஷிகா |
| **அச்சுப்பதிப்பு** | : | மதி கலர்ஸ் பிறிண்டர்ஸ்<br>முருகேசர் லேன்,<br>நல்லூர்.<br>**021 2229285** |
| **பக்கங்கள்** | : | viii+87 |
| Title | : | "Kalai Thalir" - 03 |
| Published by | : | Thaninayagam Muthamil Manram<br>J/Holy Family Convent<br>Jaffna |
| Published in | : | July 2014 |
| Editor | : | Miss.A.Ann Maxiga |
| Printers | : | Mathi Colours<br>Murugesar Lane,<br>Nallur |


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்



திருக்குடும்ப மென்ற
கல்விக் கருவறையில் உருவாகி
ஆசிரியையாய்
உபஅதிபராய்
அளப்பரிய பணி செய்து
அன்னைத் தமிழை
ஆங்கிலப் பாடசாலையில்
ஆழமாய் அறிவித்த
அமரர் திருமதி மாக்கிரட் சவிரிமுத்துவின்
தாழடிக்கு ...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# SCHOOL ANTHEM

*I*

*With joyfull emotion and loyal devotion*
*United in chorus we honour our school*
*Familians together, supporting each other,*
*To Praise Alma Mater and cherish her rule,*
*We'll ever be faithful dear fostering mother*
*And promise once more to be constant and true.*

*II*

*Bright memories linger, of highest endeavour*
*And noble achievements which past year unfold*
*With true aspiration, let each generation*
*Familian tradions and spirit uphold,*
*"To God alone Glory" sublime salutation,*
*Sure motto inspiring the young and the old.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த்தாய் வாழ்த்து

காதொளிருங் குண்டலத்தாள்
கனிமொழியாள் வாழ்க!
கைக்குவளை யாபதிகொள்
கன்னிகையாள் வாழ்க!
மேதகுமென் மார்பிடைச்சிந்
தாமணியாள் வாழ்க!
சீதமலர்ப் பாதமொலிச்
சிலம்புடையாள் வாழ்க!
சேரசோழ பாண்டியர்தஞ்
செல்வமகள் வாழ்க!
நீதியுறுஞ் செங்கோலாய்த்
தூயகுறள் தாங்கும்
நிகர றியாச் செந்தமிழ்த்தாய்
நீடூழி வாழ்க!!

– யாழ் ஜெயம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு தனிநாயகம் முத்தமிழ் மன்ற நிர்வாகக் குழு 2014

**காப்பாளர்**

அருட்சகோ.தயாநாயகி செபமாலை

**பொறுப்பாசிரியர்**

திருமதி சதாரூபினி ஸ்ரீகந்தராஜா

| | | |
|---|---|---|
| **தலைவர்** | : | செல்வி பவானி செல்வராசா |
| **செயலாளர்** | : | செல்வி சிசிலியா அமிர்தநாதன் |
| **உபதலைவர்** | : | செல்வி கபில்ஸ்ரா ஜெனஸ்ரின்சன் |
| **உபசெயலாளர்** | : | செல்வி பெர்னிக்கா டோமினிக் |
| **பொருளாளர்** | : | செல்வி மேரிசிந்துஜா ஞானசேகரன் |
| **இதழாசிரியர்** | : | செல்வி ஆன்மக்ஷிகா அன்ரன் இம்மானுவல் |
| **நிர்வாகக்குழு** | : | செல்வி சோபிகா சண்முகம் |
| | | செல்வி டிலக்ஷினி புனிதசீலன் |
| | | செல்வி சௌமி டக்ளஸ் |
| | | செல்வி ஜெயமாலினி நோயல் |
| | | செல்வி கொகிலா யோகேஸ்வரன் |
| | | செல்வி மேரி சிந்திஜா ஞானசேகரன் |
| | | செல்வி மாலதி நியூட்டன் |

**கலைத்தளிர்**

| | | |
|---|---|---|
| **பொறுப்பாசிரியர்** | : | திரு.யோ.யோண்சன் ராஜ்குமார் |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவத்திரு தனிநாயகம் முத்தமிழ் மன்றம் - 2014




**இருப்பவர்கள்(இ.வ.)**
திரு.யோ.யோண்சன் ராஜ்குமார் (கலைத்தளிர் பொறுப்பாசிரியர்), செல்வி.மேரி பூபதி பெனடிக்ற் (உப அதிபர்), செல்வி.அ.ஆன்மக்ஷிகா (இதழாசிரியர்), அருட்சகோதரி தயாநாயகி செபமாலை (அதிபர்), செல்வி.செ.பவானி (தலைவர்), திருமதி.ச.ஸ்ரீகந்தராஜா (தமிழ் மன்றப் பொறுப்பாசிரியர்), திரு.இ.ஜெயக்காந்தன்


**நிற்பவர்கள் (முதல் வரிசையில்)**
திரு.மு.தனுஷாந், திருமதி.எஸ்.பி.தேவகிருபாகரன், செல்வி.எஸ்.கீதாஞ்சலி, திருமதி.வி.எட்வேட் றெஜினோல்ட், திருமதி.ரு.பிரதீபன், திருமதி.என்.றொகான், திருமதி.ஆ.ஜோண் பிறிற்றோ, திருமதி.எஸ்.ஜே.தனேந்திரன், திருமதி.கு.ஆனந்தநடராஜா, திரு.நிதாகரன்

**நிற்பவர்கள் (இரண்டாம் வரிசையில்)**
செல்வி.டோ.பெர்னிக்கா (உப செயலாளர்), செல்வி.ஜெ.கபில்ஸ்ரா (உப தலைவர்), செல்வி.ஞா.மேரி சிந்துஜா (பொருளாளர்), செல்வி.அ.சிசிலியா (செயலாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் தமிழ்த்துறை தலைவரின் வாழ்த்துச் செய்தி



யா/ திருக்குடும்ப கன்னியர் மடம் தேசிய பாடசாலை மாணவிகளால் வெளியிடப்படும் "கலைத்தளிர்" சஞ்சிகைக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பெருமகிழ்வு கொள்கின்றேன்.

யாழ் நகரிலே பெண்களுக்கான கல்வியைச் சிறப்பாக வழங்கி வரும் பாடசாலைகளில் இப்பாடசாலையும் ஒன்றாகும். "கலைத்தளிர்" என்னும் இச் சஞ்சிகை மாணவர்கள், துறைசார்ந்த ஆசிரியர்கள் என்போரின் ஆக்கங்களைத் தாங்கி வருகின்றது.

பாடசாலைக் காலங்களில் ஆசிரியர்களின் வழிகாட்டலோடு மாணவர்கள் தங்களின் இலக்கியப் படைப்பாற்றலை மேம்படுத்திக் கொள்ள பல சந்தர்ப்பங்கள் உள்ளன. அந்தவகையில் மாணவர்களின் ஆக்கங்களுக்கு "கலைத்தளிர்" களம் அமைத்துக் கொடுப்பதையிட்டு மகிழ்வடைகின்றேன்.


தமிழ்மொழி தொன்மைச் சிறப்பு வாய்ந்த ஒரு மொழியாகும். இம்மொழியின் மேன்மைகளை உணர்ந்து சீரிய கருத்துக்களைக் கொண்ட படைப்புகள் பலவற்றை எமது மாணவ சமுதாயம் படைக்க வேண்டும் என்பதே பலரின் விருப்பம். இதற்கேற்ப இச்சஞ்சிகைக்கு சிறந்த ஆக்கங்களைப் படைத்த மாணவர்கள் எதிர்காலத்தில் சிறந்த எழுத்தாளர்களாக மிளிர்வார்கள் என்பதில் ஐயமில்லை. "கலைத்தளிர்" சஞ்சிகைக்காக உழைத்த மாணவர்களையும் ஆசிரியர்களையும் வாழ்த்துவதில் மகிழ்வடைகிறேன்.

**பேராசிரியர் சி.சிவலிங்கராஜா**
**முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர்**
**யாழ் பல்கலைக்கழகம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலயக் கல்விப் பணிப்பாளரின் வாழ்த்துரை



யாழ் திருக்குடும்ப கன்னியர்மட தேசிய பாடசாலை மாணவிகளால் வெளியிடப்படும் கலைத்தளிர் சஞ்சிகைக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் மகிழ்வடைகின்றேன்.

யாழ்.திருக்குடும்ப கன்னியர்மடம் தேசியப் பாடசாலையானது, யாழ் நகரின் மத்தியில் மகளிருக்கான கல்வியை சிறப்புடன் வழங்கிவரும் பாடசாலைகளி லொன்றாகும். தேசியப் பாடசாலையாக மாற்றம் பெற்றதன் பின் இப்பாடசாலை மாணவிகள் கல்வியிலும், ஏனைய இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும், முன்னேற்றமடைந்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

இப்பாடசாலை மாணவிகளினது கல்வி முன்னேற்றத்திற்கும், இணைபாட விதான செயற்பாடுகளுக்கு உரமூட்டும் வகையிலும் இப்பாடசாலையின் 'தவத்திரு தனிநாயகம் முத்தமிழ்' மன்றத்தினரால் வெளியிடப்பட்டு வருகின்ற 'கலைத்தளிர்' சஞ்சிகை அமைகின்றது. இதன் மூன்றாவது இதழாகிய இவ்விதழ் மாணவர்களது ஆக்கங்களை தாங்கிவரும் அதேவேளை, அவர்களது வாசிப்பின் மீதான ஆர்வத்தினைத் தூண்டுவதாகவும், அவர்களது படைப்பாக்கத் திறனை மேம்படுத்துவதாகவும் அமைந்துள்ளது.


இந்நூல் வெளிவர உழைத்த, அதிபர், ஆசிரியர்கள் மாணவர்கள் அனைவருக்கும் எனது பாராட்டுக்கள் உரித்தாகுக. இச் சஞ்சிகை தொடர்ந்து வெளிவரவேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

**செ.உதயகுமார்**
**வலயக் கல்விப் பணிப்பாளர்**
**யாழ் கல்விவலயம்**
**யாழ்ப்பாணம்.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்லூரி அதிபரின் ஆசிச்செய்தி



தனிநாயகம் அடிகளார் முத்தமிழ் மன்றத்தினால் வருடம் தோறும் வெளிவரும் "கலைத்தளிர்" என்னும் நூலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் பெரிதும் மகிழ்வடைகின்றேன்.

இனிய தமிழை இன்பமுடன் கற்று வளமுடன் வழிகாட்டிய, தமிழின் பெருமையை உலகிற்கு எடுத்தியம்பிய அறிஞர்களுள் தனிநாயகம் அடிகளாரும் ஒருவராவார். அவருடைய நாமத்தை தாங்கிய முத்தமிழ் மன்றத்தின் வெளியீடாகிய கலைத்தளிரின் உள்ளீடு கவிதை, கட்டுரை, சிறுகதை, நாடகம் போன்ற பல்வேறு முக்கிய அம்சங்களை தாங்கியதாக வெளிவருகின்றது. மாணவர் தமது சுய அறிவையும் ஆற்றலையும், ஆக்கத்திறனையும் வெளிப்படுத்த இத்தகைய நூல் ஆக்கம் நல்லதொரு சந்தர்ப்பமாக அமைகிறது என்றால் மிகையாகாது.

மாணவர்களின் அயராத முயற்சியையும் கூட்டுப்பொறுப்பையும், ஆசிரியர்களின் ஊக்கம், அர்ப்பணம் மாணவர்களைத் தட்டிக்கொடுத்து வழிப்படுத்தி ஒழுங்கமைத்து தரமான கலைத்தளிராக கரங்களில் தவழ வழிவகுத்த அனைவரையும் நன்றியுடன் பாராட்டுகின்றேன். நிச்சயமாக மாணவர் சமூகம் இந்நூலை வாசிப்பதனூடாக பயனடைவார்கள் என்பதில் ஐயமில்லை.

எனவே கலைத்தளிரினூடாக கலையாற்றல் மிளிரவும் படைப்புத்திறன் மென்மேலும் பெருகி, மாண்புடன் வாழ உளமாற வாழ்த்தி இறையாசி நிறைவாக பொழிய வேண்டுகின்றேன்.

**அருட்சகோ.தயாநாயகி செபமாலை**

**அதிபர்**

**யா/திருக்குடும்ப கன்னியர் மடம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது கல்லூரி உப அதிபரின் வாழ்த்துச் செய்தி



காலங்களும் கருத்துக்களும் மாறிவரும் உலகில் மாற்றங் காணா செயல் வாசிப்பு, இணையத் தளங்களில் இடைவிடாப் போட்டியிலும் பத்திரிகைகள், நூல்கள் வெளியாகின்றன. நூலகங்கள் உருவாக்கப்படுகின்றன. புதுப்பிக்கப் படுகின்றன. இது வாசிப்பை மனிதன் நேசிப்பதன் அடையாளம்.

இந்த வாசிப்பு தரும் யோசனைகள் தான் புதியன படைத்தல். இதற்கு ஆரம்ப வித்தாக பாடசாலை படையல்கள் மாணவருக்கு களமாகவும் விருந்தாகவும் அமைகின்றது. இன்று எம் இளம் சமுதாயம் பல்வேறு போதைகளுக்குள் மூழ்கும் நிலையில் பாடசாலைகள் நல்ல வழிகாட்டியாக உற்பத்தி நிறுவனங்களாக பரிணமிக்க வேண்டிய பாரிய பொறுப்புண்டு. மாணவரின் ஆக்கத் திறன்களை ஒன்றிணைத்து தம்மாலும் முடியும் எனும் தன்னம்பிக்கையைத் துளிர்விட வைத்திருக்கும் கலைத்தளிரை வெளியிடும் மாணவரின் செயலுக்கு என் பாராட்டுக்கள்.

உங்களிடம் இருந்தே உங்களுக்கான நல்ல சிந்தனைப் பாதை உருவாகி, தேக்கி வைத்திருக்கும் ஆக்க சக்திகளை வெளிக்கொணரும் நல்ல களம் இது. தொடர்ந்து புதிய துளிர்களை உருவாக்க வாழ்த்தி நிற்கின்றேன்.

**செல்வி.மே.பூ. பெனடிக்ற்**

உப அதிபர்

யா/திருக்குடும்ப கன்னியர் மடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் மன்றப் பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து...



கலைகளின் கூடமாம் எம் கல்விச் சாலையில் முத்தாக மூன்றாவது "கலைத்தளிர்" என்னும் சஞ்சிகை வெளிவருவதைக் கண்டு களி கொள்கின்றோம்.

மாணவர்களின் கலை உள்ளத்தில் ஆழப்பதிந்த சிந்தனைகள் ஆக்கங்களாக இங்கே உருப்பெற்றுள்ளன. சிந்தையைத் தூண்டும் சிறுகதைகள், ஆக்கத்திறன் ஊறும் கட்டுரைகள் கவிநயம் ஊறும் கவிதைகள் என கலைவளம் பொங்கிச் சிறப்பாக மலருகின்றது "கலைத்தளிர்"

மாணவர்களின் ஓயாத கற்றலின் மத்தியில் கடின உழைப்புடன் குறுகிய கால இடைவெளியில் உங்கள் கரங்களில் தவழ்கிறது கலைத்தளிர்

மாணவர்களிடையே ஆக்கத்திறனை முகிழ்க்க வைக்கும் அருஞ்சாதனங்களில் பாடசாலைகளில் வெளிவரும் சஞ்சிகையும் ஒன்றாகும். இச் சஞ்சிகையின் மூலம் மாணவர்களின் எழுத்தாற்றல் சிந்தனைத் திறன் என்பன வளரும் என்பதில் ஐயமில்லை. கலைத்தளிர் தொடர்ந்து வெளிவந்து மாணவர்களின் ஆக்கத்திறனை வளர்க்க வேண்டும். இதற்கு எல்லாம் வல்ல இறைவன் துணை புரிவாராக

**திருமதி.சதாரூபினி சிறீகந்தராஜா**


பொறுப்பாசிரியர்

தனிநாயகம் முத்தமிழ் மன்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைத்தளிர் பொறுப்பாசிரியரின் உள்ளத்திலிருந்து ...



யாழ் திருக்குடும்ப கன்னியர்மடத்தின், 'தவத்திரு தனி நாயகம் முத்தமிழ் மன்றத்தின்" மூன்றாவது கலைத்தளிர் இதழ் வெளிவருவதனையிட்டுப் பெருமகிழ்வடைகின்றேன். இலத்திரனியல் ஊடகம், இன்று பெரும் சக்தியாக வியாபித்து, அச்சூடகங்களின் எதிர்காலமே கேள்விக்குறியாக மாறிவரும் காலச் சூழலில் கலைத்தளிரை விடாமுயற்சியோடு வருடந்தோறும் வெளிக்கொணர முயலுகின்றோம். காரணம், மாணவரின் வாசிப்பார்வமும், படைப்பாற்றலும் குன்றாதிருக்க எம்மால் இயலக்கூடிய வழிகளில் தொடர்ந்து செயலாற்றுவது இன்றைய காலத்தின் கடமையாகும். அந்தவகையில், எமது தமிழ்துறையும் அழகியல் துறையும் இணைந்து வெளியிடுகின்ற 'கலைத்தளிர்' மாணவர்களதும், ஆசிரியர்களதும் ஆக்கங்களை தாங்கி வெளிவருகின்றது.

கடந்த வருடத்தில் இருந்து எமது முத்தமிழ் மன்றம் தவத்திரு தனிநாயகம் அடிகளின் நாமத்தினைத் தரித்துள்ளமை மிகவும் மகிழ்வுக்குரிய விடயமாகும். இந்த இதழானது திருக்குடும்ப கன்னியர் மடத்திலேயே கற்று, ஆசிரியராக, உப அதிபராக பலகாலம் அளப்பரிய பணியாற்றியவரும் தமிழில் புலமையுடன் திகழ்ந்து, பற்றுதியுடன் தமிழைக் கற்றுக்கொடுத்தவருமாகிய திருமதி.மாக்கிரட் சவிரிமுத்துவுக்கு சமர்ப்பணம் செய்யப்படுகின்றது. இது எமக்கு கிடைத்த பெரும்பேறு என்று கருதுகின்றேன்.

கலைத்தளிர் சஞ்சிகையின் பிறப்புக்கு காரணமாக இருந்தது மட்டுமன்றி இந்த மூன்றாவது இதழின் வெளிவருகைக்கும் ஊக்கம் தந்த எமது மதிப்புக்குரிய அதிபர் அருட்சகோதரி தயாநாயகி செபமாலை, அவர்களுக்கும், வாழ்த்துச் செய்தி வழங்கிய முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் சிவலிங்கராஜா அவர்களுக்கும் ஆசிச்செய்தி வழங்கி மலருக்கு மதிப்புத்தந்த, யாழ் வலய கல்விப் பணிப்பாளர் செ.உதயகுமார் அவர்களுக்கும், விளம்பர அன்பளிப்புக்களை நல்கிய வர்த்தகத்துறை அனுசரணையாளர்களுக்கும் எமது நன்றிகள்.

மற்றும் சிறப்புடனும் மிகவும் குறுகிய காலத்திலும் அச்சுப்பதிப்பினை மேற்கொண்டு உதவிய 'மதிகலர்ஸ்' அச்சகத்தாருக்கும், துணை நின்ற ஆசிரியர்களுக்கும் எமது நன்றிகள். அத்துடன் இம்மலர் வெளியீட்டின் இயங்குநர்களாக நின்று செயலாற்றிய 2014ம் ஆண்டின் "தவத்திரு தனிநாயகம் முத்தமிழ் மன்றத்தின்" தலைவர், அங்கத்தவர்களுக்கும், சிறப்பாக இம்மலரின் இதழாசிரியர் செல்வி.அ.ஆன் மக்ஷிக்கா அவர்களுக்கும் முத்தமிழ் மன்ற பொறுப்பாசிரியர் திருமதி.சதாரூபினி ஸ்ரீகந்தராஜா அவர்களுக்கும் எனது இதயபூர்வமான நன்றிகளை தெரிவித்து நிற்கின்றேன்.

**யோ.யோண்சன் ராஜ்குமார்**
**கலைத்தளிர் மலர்ப் பொறுப்பாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் மன்றத் தலைவியின் இதயத்திலிருந்து...



யாழ் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலை முப்பொன் விழாவைக் கொண்டாடி சில ஆண்டுகளைக் கடந்துள்ள நிலையில் தனக்கென ஒரு தனிப்பட்ட கல்விப் பாரம்பரியத்தைப் பேணி 2014ம் ஆண்டிலே வளர்ச்சியை நோக்கி சென்று கொண்டிருக்கும் வேளையில், மாறிவரும் இவ்வுலகில் நிலைத்திருக்கும் பெண் சமூகத்தை உருவாக்குவதற்காக அரும்பாடுபடும் அதிபர், ஆசிரியர்களின் அயராத முயற்சியினாலும் உந்துதலினாலும் மாணவர்கள் கல்வி மேல் கொண்ட ஆர்வத்தை வெளிப்படுத்தி நிற்கும் முகமாக "கலைத்தளிர்" என்னும் சஞ்சிகையை எமது தனிநாயகம் முத்தமிழ் மன்றத்தினால் வெளியிடுவதிலும், அதற்கான வாழ்த்துரையை வழங்குவதிலும் பெருமிதம் கொள்கின்றேன்.

அருகிவரும் தமிழின் உயர் நிலையினை அழியாது பேணிப் பாதுகாக்கும் மாணவர்களாக எம் மாணவர்கள் திகழவும், செம்மொழியாம் தமிழின் பெருமையை உணர்ந்து தமிழுக்கு அழகு சேர்க்கும் பணியாக கலைத்தளிர் என்ற இம்மலர் வெளியீட்டினை மேற்கொள்கின்றோம். மேலும் இச்சஞ்சிகையானது மாணவர்களினதும் ஆசிரியர்களினதும் ஆக்கங்களைத் தன்னகத்தே தாங்கி வெளிவருகின்றது. இச்சஞ்சிகையானது தமிழ்பற்றுள்ள மாணவர்களின் எண்ணங்களுக்கும் சிந்தனைகளுக்கும் ஓர் சிறந்த களத்தை அமைத்துத் தருவதாக அமைகின்றது.

தமிழனென்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா என்ற வாக்கிற்கிணங்க மாணவர்கள் தலைநிமிர்ந்து நிற்கவும், தமிழை நம்மாணவர்கள் சிறப்பாக நேசிக்கவும், கலைத்தளிர் என்னும் இச் சஞ்சிகையானது ஒரு சிறந்த அனுபவக்களமாகவும் மாணவர்கள் தங்களுடைய இயல், இசை நாடக துறைகளில் அவர்களின் வளர்ச்சியை எடுத்துக் காட்டும் ஒரு தளமாகவும் இச் சஞ்சிகை அமைகின்றது.


வெளியீட்டுக்குத் துணை நின்ற அனைவருக்கும் நன்றியை தெரிவித்து நிற்கின்றேன்.

**பவானி செல்வராசா**
**தலைவர்**
**தனிநாயகம் முத்தமிழ் மன்றம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதழாசிரியரின் இதயத்திலிருந்து ...



செம்மொழியாகிச் செழிப்படைந்த செழுந்தமிழின் செம்மைதனை செப்பிட யாழ் திருக்குடும்ப கன்னியர் மட பாடசாலையானது மூன்றாவது தடவையாக கலைத்தளிர் எனும் தளிரை வெளியிடுவது பெருமைக்குரியதாகும். அந்த வகையில் மாணவர்களது தனித்துவமான ஆற்றல்கள், திறமைகள் என்பவற்றை வளர்த்தெடுப்பதற்கு இக் கலைத்தளிர் பெரும் உதவியாக இருக்கிறது. இன்று தமிழ்ப்பண்பாடுகள் கலை கலாசாரங்கள் அனைத்தும் சீர்குலைந்து செல்லும் சூழலில் தேடிக் கற்பவர்களும், புதுவிடயங்களை தெரிந்து எடுப்பவர்களும், அரிதாகவே உள்ளனர்.

இக் கலைத்தளிர் மாணவர்களினது ஆற்றல்களையும், ஆசிரியர்களின் அறிகைகளையும், கவிதை, கட்டுரை, சிறுகதைகள் போன்ற படைப்புக்கள் மூலம் வெளிப்படுத்தி நிற்கின்றது. மேலும் இத்தளிர் கிளைபரப்ப ஒத்துழைத்த அனைவரும் நன்றிக்குரியவர்களே "எந்நன்றி கொண்டார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்நன்றி கொண்ட மகர்க்கு" அதற்கமைய பல்வேறு சவால்களின் மத்தியில் கடவுளின் ஆசீர்வாதத்துடன் இவ்விதழானது பூரணமடைந்துள்ளது. தமது தலைமைத்து வத்திற்குள் இத் தளிரானது தலை சிறக்க வேண்டும் என்ற சிந்தனையோடு எம்மை நெறிப்படுத்திய எம் கல்லூரி அதிபரான அருட் சகோதரி தயாநாயகி செபமாலை அவர்களுக்கும் எம்மை ஊக்குவித்து உற்சாகப்படுத்தி ஆற்றுப்படுத்திய தமிழ் மன்ற பொறுப்பாசிரியரான திருமதி.ச.ஸ்ரீகந்தராஜா அவர்களுக்கும், இத்விதழ் கதிர்வீச தன்னை உருக்கி எமது இதழுக்கு வித்திட்ட பொறுப்பாசிரியரான ஜோ.ஜோண்சன் ராஜ்குமார் அவர்களுக்கும், உறுதுணையாக நின்ற ஏனைய ஆசிரியருக்கும் தமிழ் மன்ற உறுப்பினர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகள். அத்துடன் இவ்விதழுக்கான வாழ்த்துச் செய்தியை வழங்கிய முன்னாள் தமிழ்த்துறை தலைவர், யாழ். வலயக் கல்விப் பணிப்பாளார், அதிபர், ஆசிரியர்களுக்கும் விளம்பர அன்பளிப்பு வழங்கிய வர்த்தக பெருந்தகைகளுக்கும் நன்றிகளைக் கூறுவதில் மகிழ்வடைகின்றேன். இவ் விதழானது பல பயன்தரும் ஆக்கங்களைத் தாங்கி அழகுறதிகழ ஆக்கங்களைப் படைத்த ஒவ்வொருவருக்கும் உள்ளம் கனிந்த நன்றிகள். இவ்விதழ் படைத்த படைப்புகளின் நிறைவை எல்லோருக்கும் கூறும்படியும் குறை இருப்பின் எனக்கு கூறும்படி கேட்டு நிற்கின்றேன்.

தொடர்ந்தும் எமது கல்லூரி இது போன்ற பல தளிர்களுக்கு வித்திடவும் முத்தமிழும் வளர செம்மொழியாம் தமிழ் மொழியின் சிறப்புதனை வளர்த் தெடுக்கும் பணிகளில் மென்மேலும் பங்கேற்று மாணவர்களின் மனங்களிலுள்ள தமிழின் சிறப்புத்தனை வளர்க்கவும் எம் தாய்த் தமிழ் மண்ணிற்கு சிறப்பையும் பெருமையையும் சேர்க்கவும் அனைவரையும் மனமார இறைவனின் ஆசீர் வேண்டி நிற்கின்றேன். இதனால் படைப்பவர்களின் ஆற்றல்கள் வெளிப்படுவதுமன்றி இவற்றைப் படிக்கும் மாணவர்களுக்கான அறிவு மேம்பாட்டிற்கும் உதவுகின்றது அந்தவகையில் கலைத்தளிரின் இதழாசிரியர் என்றவகையில் பெருமையும் மகிழ்வும் அடைகின்றேன்.

**அ.ஆன்மக்ஷிகா**
**இதழாசிரியர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தளிரின் உள்ளே ...

பக்கம்


- உழைப்பும் ஊக்கமும் உலகை மாற்றும் 01
- அறிவொளி தருவன நூல்களே 06
- பெண்களுக்கு எதிரான வன்முறைகள் 09
- சங்கீதம் ஒரு புனிதமான கலை 11
- இலக்கியக் கருத்துரைக்கும் இனிய திரை இசைப் பாடல்கள் 13
- புறநானூறு காட்டும் விழுமியம் 16
- கல்வி கரையில... (சிறுகதை) 18
- கம்பராமாயணத்தில் கைகேயி 21
- பாரம்பரிய கலைகளின் இருப்பும் நவீனத்துவத்தின் பங்களிப்பும் 23
- துறைகளும் தந்தையர்களும் 25
- செந்தமிழ்த் தாய் 27
- பிரதேச இலக்கியங்களும் பிரதேசவாரியான இலக்கியங்களும் 29
- நகைச்சுவை 31
- தடுப்போம் அனர்த்தத்தை பாதுகாப்போம் இலங்கையை 34
- பூவொன்று புயலானது 38
- பொறுமையைப் பேணுவோம் 40
- தலைமைத்துவம் 41
- பழமொழியும் கருத்தும் 44
- நவீன தொழிநுட்ப சாதனங்களும் அவற்றால் ஏற்படும் விளைவுகளும் 46
- “மணிமேகலை” கூறும் அறக்கருத்துக்கள் 49
- இன்றைய உலகில் மொழிபெயர்ப்பின் தேவை 51
- செய்யும் தொழிலே தெய்வம் 53
- “அலங்காரரூபன்” தென்மோடிக்கூத்து – ஒரு பார்வை 55
- யோகாசனமும் அதன் பயன்களும் 64
- பரதநாட்டியம் – ஓர் அறிமுகம் 67
- சுதந்திரம் 69
- ‘நிற்க கற்க’ 70
- கையடக்கத் தொலைபேசியின் முக்கியத்துவமும் அதன் சாதக பாதகங்களும் 72
- ஆறாது எம் துயரம் 74
- மாதா பிதா தெய்வம் 75
- காலங்களும் காயங்களும் 76
- நல்லதோர் வீணை செய்தே .. 77
- நவீன ஓவியகக் கலைக்கொள்கைகள் 82
- தமிழின் சிறப்பு 85



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழைப்பும் ஊக்கமும் உலகை மாற்றும்

ஜி.மேரிவிதுஷா
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

நாம் 21ம் நூற்றாண்டில் ஒரு விஞ்ஞான யுகத்தில் எம் வாழ்வை நடத்திச் செல்கின்றோம். இந்தக் காலத்திலே பல தொழிநுட்ப சாதனங்கள் எல்லாம் வந்து உலகம் நன்றாக முன்னேறி வருகிறது. இதனால் ஒரு மனிதன் தன் சிந்தனை நிறைந்த அறிவைக்கொண்டு பல கண்டுபிடிப்புக் களை படைக்கின்றான். எனவே எழுச்சிமிக்க நடையில் உயிர், உடமைகளைப் பாதுகாப்பதோடு நில்லாது வளர்ச்சி நிலையிலும் ஆக்கபூர்வமான திட்டங்களை மேற்கொண்டு எதிர்கால சந்ததிக ளாகிய நாம் பல பயன்களைப் பெற வேண்டும்.

"என்ன வளம் இல்லை இந்தத் திருநாட்டில்?" என ஒரு பாடல்வரியுண்டு. ஆம்! நம் நாட்டில் எல்லா வளமுமே உண்டு. அதற்கிணங்க அவற்றைப் பயன்படுத்தி படைப்புக்கள் பலவற்றை படைத்து எதிர்கால சந்ததியை நிலையானதாக உருவாக்குவோம். "செல்வத்தில் அழியாத செல்வம் கல்விச் செல்வம்" மட்டும்தான் அதிலும், அந்தக் கல்வி தொழிற்கல்வியாக இருந்தால் மாணவர்கள் பிற்காலத்தில் சுயமாகத் தொழில் தொடங்க உதவியாக இருக்கும் "செய்யும் தொழிலே தெய்வம், அதில் திறமைதான் நமது செல்வம்" என்ற கருத்திற்கேற்ப எந்தத் தொழிலில் ஆர்வம் உள்ளதோ, அந்தத் தொழிலை திறம்பட கற்றுக்கொள்ள வேண்டும். அப்படிக் கற்றுக்கொள் ளும் போது நமது எதிர்காலம் பற்றி அச்சப்படத் தேவையில்லை.

வீதி வீதியாய் வேலைதேடி அலையும் அவலமும் இல்லை. எந்தத் தொழிலும் குறை வானது இல்லை. நமது உழைப்புக்கும் திறமைக் கும் எப்போதும் உரிய மதிப்பு சமுதாயத்தில் கிடைத்தே தீரும் என்பதை மறந்து விடக்கூடாது. பாரதியாரின் கனவுப்படி "தொழிற் புரட்சி" உருவாக வேண்டுமானால் அதற்கு தொழிற்கல்வி ஒன்று தான் வழியாக இருக்கும். வேலையின்றி பெற்றோருக்கு பாரமாய் சும்மா இருப்பதைவிட, ஒழுங்காக முறையான தொழில் பயிற்சி பெற்று, சுயமாகவோ தொழில் வல்லுநராகவோ வேலை செய்வது பல மடங்கு பயனுள்ளதும் பெருமைக் குரிய விஷயமுமாகும். இன்றைய தேவையை யும், எதிர்கால தேவையையும் கருத்தில் கொண்டு ஒவ்வொரு மாணவரும், இளைஞரும் கட்டாயமாக தொழிற் கல்வி கற்றுக்கொள்ள முன்வர வேண்டும். மாநில - மத்திய அரசுகளும் இதற்கான சலுகைகளை அதிகரிக்க வேண்டும். இதன் மூலமாக எதிர்காலத்தில் சிறந்த சமுதாயம் தோற்றம் பெறும்.

"பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள்..." என்றார் பாரதியார் ஆண்களுக்கு இணையாக இன்று அனைத்துத் துறைகளிலும் பெரிய பொறுப்புக்களை ஏற்று பெண்கள் நிர்வாகம் செய்கின்றார். அதற்கு ஆதாரமாக இருப்பது "பெணகல்வி" தான். ஒரு குடும்பம் முன்னேற வேண்டும் என்றால் அந்தக் குடும்பத்தின் ஆணிவேராகத் திகழும் பெண், கல்வியில் தேர்ச்சி பெறவேண்டும். அப்போதுதான் அந்தக்குடும்பம் உண்மையாக சீரான சிறப்பான முன்னேற்றத்தைப் பெறமுடியும். "நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்" என்பர். அப்படி ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பம் உருவாக கல்வியே முக்கியம். இன்று எந்தத்துறையை எடுத்துக்கொண்டாலும் சரி, அதில் முன்னேறியுள்ளது, பெண்களின் வாழ்க்கை. முதலாம் எலிசபெத்மகாராணி புளோரன்ஸ் நைற்றிங்கேள், ஜோண் ஒவ் ஆக் இந்திராகாந்தி, அன்னை தெரசா. இவர்கள் மட்டுமன்றி, சிறந்த வீரன் சிவாஜியை உருவாக்கியதும் ஒரு பொறுப்பான தாய்தான். எனவே பெண் கல்வி பெண்களின் முன்னேற் றத்திற்கு மட்டுமில்லை. ஒரு குடும்பத்தில் நல்ல சந்ததியை உருவாக்கவும் ஒரு நாட்டில் சிறந்த சமுதாயத்தை உருவாக்கவும் பயன்படுகிறது.

ஆண்களைவிட அதிகமான பொறுப்பும் பங்களிப்பும் பெண்களுக்குத்தான் என்பதை உணர முடிகிறது. இன்றைய நிலையில் போட்டி கள் நிறைந்துள்ள நாகரீக இயந்திர உலகில் பெண்கள் தங்களின் உரிமைகளை உணர்ந்து ஆண்களின் சாதனையை முந்திச் சென்று முன்னேறுவதற்கு கல்வியால் மட்டுமே முடிகிறது. ஆணுக்குப் பெண் எந்தவிதத்திலும் குறைந்த வளில்லை ஆணும் பெண்ணும் சமம் என்ற சமத்துவக் கொள்கையை இந்த உலகம் ஏற்றுக் கொண்டது எனில் அது பெண் கல்விக்குக் கிடைத்த வெற்றி என்றே சொல்ல வேண்டும். இன்றும்கூட முழுமையாக ஏற்றத்தாழ்வுகள் நீங்கிவிடவில்லை. இந்தக் குறைகளைக்களைய வேண்டுமெனில் அதற்கு பெண் கல்வியின் அவசியம் பற்றி கிராமப்புறங்களில், விழிப்புணர்வு இன்னும் அதிகரிக்கப்பட வேண்டும். அப்போது தான் பெண் கல்வி என்பது முழுமைபெறும்.

பெண்களுக்கு எதிராக நடக்கும் சமுதாயக் கொடுமைகளை எதிர்த்துப் போராடுகின்ற மனத் துணிவும் பெண்கள் தங்களின் உரிமையை, கடமையை செவ்வனே உணர்ந்திடவும், மூட நம்பிக்கைகளைக் களைந்திடவும் பெண்கல்வி மட்டுமே தீர்வாகும் பெண்கள் முன்னேறாத எந்த நாடும், வீடும் முன்னேறியதாக அர்த்தமில்லை. எனவே பெண்களின் கல்வி முன்னேற்றத்திற்கு தடையாக இருப்பவற்றை நகர்த்தெறிந்து, பெண் கல்விக்கு எல்லோரும் ஒத்துழைப்பு தந்து ஒரு சீரான சமுதாய முன்னேற்றம் பெற உழைப்போம் இவ்வாறாக நாம் அறியாமையை தகர்த்தெறிந்து பெண்கள் கல்வி கற்பதனூடாக எதிர்காலம் சிறந்த கனிகளைக்கொண்ட மரமாக உருவாகும் என்பதில் ஐயமில்லை.

"அருளில்லார்க்கு அவ்வுலகமில்லை பொருளில்லார்க்கு இவ்வுலகம் இல்லாகி யாங்கு" என்பது வள்ளுவர் வாக்கு இவ்வுலகத்தில் பொருள் இல்லாமல் எதையும் சாதிக்க முடியாது. எவ்வளவு தான் சம்பாதித்தாலும் சேமிப்பு என்பது மிக முக்கியமாகும். மழைக்காலத்திற்குத் தேவை யான உணவை எறும்புகள் முன்பே சேமித்து வைத்துக்கொள்கின்றன. அப்படி இருக்கும் போது மனிதர்களாகிய நாம் எமது எதிர் காலத்திற்காக சேமிக்க வேண்டியது காலத்தின் கட்டாயம் என்றே சொல்லலாம். மனிதனுக்கு அவசரப் பணத் தேவை எந்தக் காரணத்தினாலும் எப்போது வேண்டுமானாலும் வரலாம். அப்படி அவசரத் தேவை வரும்போது செய்வதறியாது திகைக்கா மல் முன்பே சேமித்து வைத்திருந்தால் அது கை கொடுக்கும். ஒவ்வொருவரும் சேமிப்பது வீட்டிற் கும் நாட்டிற்கும் மிகத் தேவையான ஒன்று. அது நலம் பயக்கக்கூடியது. மனித வாழ்க்கையில் அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றும் மிக முக்கியமானது இதில் பொருள் இருந்தால் மற்ற இரண்டும் தானே வந்துசேரும்.

நேர்மையான முறையில் கடினமாக உழைத்து பணம் சம்பாதிப்பது மட்டுமல்லாமல் அதைச் சிக்கனமாகச் செலவு செய்து, மிஞ்சியதை சேமிப்பது மிக முக்கியமாகும். நம் வருவாய்க்கு ஏற்றவகையில் திட்டமிட்டுச் செலவிடுதல் வேண்டும். தேவையான செலவுகள், தேவையற்ற ஆடம்பரச் செலவுகள் என செலவுகளை இரு வகையாக சொல்லலாம். சேமிப்பு மட்டும் வட்டியுடன் வளர் ந்து அவசரத் தேவைக்கும், எதிர்காலத் தேவைக் கும் பயன்படுகிறது. இவ்வாறு சேமிப்பதனூடாக எதிர்கால வாழ்வு சிறந்த பயனுடையதாகவும் எந்தப்பிரச்சினையும் இல்லாமல் அமையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமியக் கைத்தொழில்களை நாம் எடுப் போமானால் கிராமிய கைத்தொழில்களை இன்றைய சமுதாயம் கற்றுக்கொண்டால் நன்மை பெறுவர்.

"கைத்தொழில் ஒன்றைக் கற்றுக்கொள் கவலை உனக்கில்லை. ஒத்துக்கொள்" என்ற நாமக்கல் அறிஞரின் கருத்துப்படி எவ்வளவு தான் இயந்திரமயம் ஆனாலும், மனிதனின் உழைப்பிற்கும் திறமைக்கும் அற்புதமான கைத் தொழில் ஈடு ஆகாது எல்லாத் தொழிலையும் இயந்திரம் மட்டுமே சீராக சிறப்பாக செய்யும் என்பது சாத்தியமில்லை. ஆகவே நாம் கிராமியக் கைத்தொழில்களை கற்போமானால் கல்வி எமக்கு ஏறாவிட்டால் இந்தக் கைத்தொழிலைக் கொண்டே எமது எதிர்கால வாழ்வை முன் னேற்றி சிறந்த சமுதாய முத்துக்களாக தோற்றம் பெற முடியும்.

நாம் கணனிக்கல்வியை எடுப்போமானால் கணினி பயன்படாத துறைகளே எதுவும் இல்லை என்ற நிலை உள்ளது. கணினி இல்லாமல் எந்தத் தொழிலும் செய்ய முடியாது என்ற நிலை ஏற்பட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை. அந்த அளவிற்கு கணினி முக்கியத்துவம் எங்கும் பரவி யுள்ளது. வேலைவாய்ப்பு, சுயதொழில், பொருளா தாரம், முன்னேற்றம் இந்த நான்கு அம்சங்களை யும் பூர்த்திசெய்கிற ஓர் அடிப்படை ஆதாரமாக விளங்குகிறது கணினி கல்வி. வெறும் பட்டப் படிப்பை படித்துவிட்டு வேலை கிடைக்காமல் வீட்டில் பெற்றோருக்கு பாரமாய் வேதனையில் நேரத்தைக் கழிப்போர் இன்று நிறைய பேருண்டு. ஆனால் கணினி கல்வியைக் கற்றவருக்கு இந்த நிலையில்லை.

உலகின் எந்த மூலையிலும் வேலைவாய்ப்பு தேடி வருகிறது. அந்த அளவிற்கு கணினி கல்வி இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை அள்ளி வழங்குகிறது. அது மட்டுமா, மற்றப்பணி களில் கிடைக்காத அதிகமான ஊதியத்தையும் இந்த கணினி பணியைச் செய்வோருக்குக் கிடைக்கச் செய்கிறது. ஆண் பெண் என்று பேதமில்லாமல் கணினி கல்வி தகுதி திறமைக் கேற்ப உரிய மதிப்பு மரியாதையை பெற்றுத்தரு கிறது. வெறுமனே கணக்குப்போட மட்டும்தான் கணினி என்ற நிலை இல்லாமல் பொறியியல், மருத்துவம், வாணிபம், வங்கி, வேளாண்மை கல்வி, வானியல் இப்படி பல துறைகளில் கணினி தன் இணையில்லாத பணிகளைச் செய்கிறது.

அறிவியல் கண்டுபிடிப்புக்கள் பலவும் மனிதனின் உடல் வன்மைக்கு வலிமை சேர்ப்பவை. ஆனால் இந்நூற்றாண்டின் கண்டு பிடிப்பான கணினி மனித மூளைக்கு வலுவூட்டும் விந்தை மிகு கருவியாகத் திகழ்கிறது.

இன்றைய போட்டி மிகுந்த நவீன உலகத்தில் ஏற்படும் மாற்றங்கள் தவிர்க்கமுடியாதவை அந்த மாற்றங்களுக்கு நம்மை தயார்படுத்திக் கொள்வது காலத்தின் கட்டாயம். அப்போதுதான் வளர்ச்சி என்பது உறுதியாகவும், பலமானதாகவும் இருக் கும் அந்த வகையில் கணினி கல்வியை ஒவ் வோர் இளைஞனும் கற்றுக்கொண்டு போட்டி யைச் சந்திக்கத் தன்னை தயார்படுத்திக்கொள்ள வேண்டும். இவ்வாறாக கணினி கல்வியைக் கற்பதனூடாக தொழில்நுட்ப கல்வி உலகில் வளர்ச்சியடைந்து அதாவது கணினி கல்வியை கற்பதனூடாக எதிர்காலத்தில் தொழில்நுட்ப கல்வி கொண்ட உலகமாக சமுதாயம் வளர்ச்சியடையும்.

"கூட்டுறவே நாட்டுயர்வு" எனில் அது மிகை யில்லை. கூட்டுறவு இயக்கம் ஒன்றினை உருவாக்குவதன் மூலம் மக்களுக்கும் அரசுக்கும் பல நன்மைகள் கிடைக்கின்றன. தரமான பொருள்களை தேவையறிந்து உற்பத்தி செய்வது இதன் மூலம் நியாயமான விலையில் பொருள் களைப் பெறுவது, கைத்தொழில்கள், சிறு தொழில் கள் செய்தல் இதனால் பலருக்கு வேலைவாய்ப்பு ஏற்படுத்துதல், கிராமப் பொருளாதாரத்தை அதிகரிப்பது, தனி நபர்களின் வருமானத்தைப் பெருக்குவது இப்படிப் பல்வேறுவகையான நன்மைகள் கிடைக்கின்றன. சிறு தொழில்களும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிராமக் கைத்தொழில்களும் மேம்படுவதால் நாட்டின் ஒட்டுமொத்த வளர்ச்சி அதிகரிக்கின்றது. தொழில் துறையின் சிறந்த இயக்கத்திற்கும் மக்கள் ஒற்றுமையுடன் தங்களது தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கும் கூட்டுறவு முக்கிய பங்காற்றுகிறது. இவ்வாறாக மக்களின் எதிர்கால வளர்ச்சிக்கு உதவுகிற ஒரு இயக்கமாக கூட்டுறவு இயக்கம் எதிர்கால சமுதாயத்தை வளர்த்தெடுக் கிறது.

இன்னொரு படைப்பாக நாம் ஊனமுற் றோருக்கு மறுவாழ்வு என்ற செயற்திட்டத்தை மேற்கொள்வதனூடாக சிறந்த எதிர்கால சமுதாயத்தை உருவாக்கலாம். "ஊனம் என்பது உடலில் இல்லை. உள்ளத்தில்தான்" எனும் உண்மையை உணர்ந்தால் மனிதப்பிறவியில் ஏற்படும் அங்க இழப்புக்கள் ஒரு பொருட்டல்ல. கடக்கும் தூரங்களைப் பார்க்காமல் கண்ட துன்பங்களை எண்ணி எண்ணி வாழ்வை முடித் துக்கொள்ளுதல் அறியாமை. பிறக்கின்ற போது ஊனமாய் மனிதர் பிறப்பதில்லை. அல்லது சிறுவயதில் ஏற்படும் இளம்பிள்ளை வாதம் போன்ற நோய்களின் காரணமாக ஏற்படும் ஊனங்கள், பல்வேறு வயதிலும் விபத்தினால் ஏற்படும் ஊனங்கள் என மனிதன் பாதிப்புக்குள் ளாகின்றான். தொழிற்சாலையில் பணிபுரியும் போது ஏற்படும் விபத்துக்களாலும் மனிதன் பாதிக் படுவதுண்டு. ஊனமுற்றோர்கள் தம்முடன் ஒத்த வயதுடையவர்கள் துள்ளி விளையாடும் போது தாம் மட்டும் ஏக்கத்துடன் தனித்து இருப்பதா? என்ற ஏக்கப்பார்வை ஏற்படும். என்றாலும், வெறும் விளையாட்டல்ல வாழ்க்கை அறிவியல் முன்னேற்றம் மனிதனை சுதந்திரமாகச் செயலாற்ற வழிகாட்டும்போது ஊனமுற்றோருக் கும் வழிகாட்டத் தவறுவதில்லை.

துயரங்களை மறந்து, தூக்கங்களை மறந்து ஊனமுற்றோர் பல்வேறு தொழில்கள் புரிகின்றார் கள். பலரை இரக்கப்படச்செய்து பிச்சை எடுத்து உண்ணாது அவர்களுக்கும் உழைத்து வாழும் நோக்கம் இல்லாமலில்லை. பலரும் நெசவுத் தொழிலாளிகளாக கூடை முடைபவர்களாக, பீடி சுற்றுபவர்களாக, தீப்பெட்டித் தொழிற்சாலையில் தீக்குச்சிகளை அடுக்குபவர்களாக, பாய்பின்னு பவர்களாக, கண்பார்வை அற்றாலும் பேரூந்து நிலையங்களில் விற்பனையாளர்களாக பலரும் தங்களால் முடிந்தவரை சுய உழைப்பில் வாழ்வது சிறப்பிற்குரியது.

ஊனமுற்றோர்களில் கை, கால்கள் இழந் தவர்க்கு தற்காலத்தில் அறிவியல் முன்னேற்றம் மூலம் செயற்கை கை, கால்கள் வழங்கப்படுகிறது. செயற்கைக் கால்கள், கைகள் ஜெய்ப்பூர் போன்ற பகுதிகளில் செய்யப்படுகிறது. குட்டையான கால் களைச் சரிசெய்திட பாதிக்கப்பட்ட கால்களில் பட்டை போன்றவை இணைத்து எலும்பு வளர்ச் சியைத் தூண்டி சரி செய்யப்படுகிறது. பிறவி யிலேயே முழுச் செவிடர்கள் ஊமையாகத்தான் இருப்பர். ஓரளவு கேட்கும் தன்மை உள்ளவர் களுக்கு காதுகேட்கும் கருவி பொருத்தப்பட்டு குறை நிவர்த்தி செய்யப்படுகிறது. கண்ணில்லாத வர்களுக்குச் செய்யப்படும் கண்தானமானது மீண் டும் கண்களை ஒளிபெறச்செய்ய வழிகோலுகிறது. இவ்வளவில் இன்றைய விஞ்ஞான உலகானது ஊனமுற்றோருக்கு பல்வேறு வகைகளில் வழிகாட்டுகிறது. ஊனமுற்றோரின் மனத்தளர்வு அவர்களுக்குத் துன்பத்தை தரும் மன ஊக்கம் அவர்களுக்கு இன்பத்தைத்தரும் என்பதில் ஐயமில்லை. ஆகவே ஊனமுற்றோருக்கு மறு வாழ்வு கொடுப்பதனூடாக எதிர்கால சந்ததி சிறந்த சமுதாயமாக தோற்றம்பெறும்.

தொலைவின் காரணமாய் கருத்துப்பரிமாற் றம் இன்மையால் பழங்கால மக்கள் துன்புற்ற போது அவர்கள் பார்வை புறாவின்மேல் பதிந்தது. கடிதமுறை உலகளவில் பரந்த ஒன்று இந்தி யாவில் 1937ல் ஆரம்பிக்கப்பட்டது முதல் தபால் தலை கராச்சியில் 1852ல் தொடங்கப்பட்டது. இவ் வாறாக கடிதமுறை தொடர்பாடல் நடைபெற்றது. ஏழைகளின் நண்பனாய் 50 சதத்திலிருந்து தொடங்கி அதிகமான செலவிலும் தொலை தொடர்பு அமைந்துள்ளது. உள்நாட்டு அஞ்சல்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அஞ்சல்துறை, வெளிநாட்டுத்தபால், பண அஞ்சல் என பலவகையிலும் மக்களுக்கு உதவியாக அமைந்தது. பின் தந்திமுறை காணப்பட்டது. பின் தொலைபேசி கண்டுபிடிக்கப்பட்டு இலகுவான முறை தகவல் பரிமாற்றம் இடம்பெற்றது. அதன் பின் தொலைநகல் முறை மூலம் தகவல்முறையும், மின்னஞ்சல் முறையாலும் தகவல் பரிமாற்றப்பட்டு தொலைத்தொடர்பு வளர்ச்சியடைந்தது அதனோடு இணையத்தின் மூலமாக இன்னும் பல நன்மைகள் கிடைக்கின்றன. இவ்வாறாக தொழிநுட்பம் வளர்ச்சியடைவதால் இயந்திர மயமான உலகத்தால் எதிர்கால சந்ததிக்கு பல பயன்கள் கிடைக்கும்.

அடுத்ததாக ஒலிம்பிக் விளையாட்டை எடுப்போமானால் ஒலிம்பிக்கில் மனிதர் சமுதாயம் பல சாதனைகளை நிகழ்த்தியுள்ளது. இதனால் மனிதர் நல்ல எதிர்காலத்தை நோக்கிப் பயணித்து வருங்கால உலகில் சிறந்த பிரபல்யமான மனிதராக வாழமுடியும். மக்கள் மத்தியில் பத்திரிகை வளர்ச்சியினை ஏற்படுத்துவதனூடாக நாட்டில் என்ன நிலைமைகள் என்பதையும் அறிந்து நாட்டு நடப்புக்கு ஏற்ப வாழமுடியும் அதனோடு பத்திரிகைகளில் கல்வி சம்மந்தமான தகவல்கள் வந்து மாணவர்களுக்கு பெரும் உதவியாக அமைந்து சிறந்த எதிர்கால உலகு உருவாகின்றது.

விண்வெளியில் புதிய அத்தியாயங்களை மனிதன் புரட்டி வருகின்றான். ஆக்கல், அழித்தல் இரண்டிலும் மனிதனின் கைவண்ணங்கள் மிளிர்கின்றன. பல்வேறு செயற்கைக் கோள்களை ஏவுகணைகளை விண்ணிடை செலுத்தியவன் மண்ணுலகக்குடியிருப்பு மறந்து விண்ணுலகில் குடியிருப்பு அமைந்திட முயன்று வருகின்றான். புவியிலிருந்து கிட்டத்தட்ட 36000 கி.மீ தொலைவில் விண்ணில் செயற்கைக் கோளை நிறுத்திச் சாதனை புரிகின்றான். நிலவினைக் காட்டி, சோறூட்டி, பாட்டி வடை சுட்ட கதை பேசி காலம் கழித்ததும், ஜோதிடம் சொல்லி சந்திரனைப் பாம்பு விழுங்கியதாகக்காட்டிய நிலைகள் மாறி இன்று நிலவினில் மனிதன் கால் பதித்து விட்டான். இவ்வாறாக விண்வெளிச் சாதனைகள் மூலம் எதிர்காலச் சந்ததி பல பயன்களைப் பெறும்.


அடுத்த நடவடிக்கையாக சிறந்த கவிதைகள் கட்டுரைகள், பொன்மொழிகளை எடுப்போமானால் சிறந்த கவிதைகளை பாரதி படைத்ததால் தான் அடிமையின் நிலையில் தம் வாழ்வை அனுபவித்த பெண்கள் அடிமை நிலையை உடைத்து பாரதி எதிர்பார்த்த புதுமைப் பெண்களாக உருவெடுத்தனர். அதுபோல் நாம் சிறந்த கவிதைகளை படைப்பதனூடாக இவ்வுலக மானிடர் அனைவரும் விழித்தெழுந்து தற்கால சமூகத்தில் எழும் சவால்களையும், பிரச்சினைகளையும், தோல்விகளையும் எதிர்கொண்டு வாழ்வதன் மூலம் இனிவரும் சமுதாயமும் அதனை எதிர்கொண்டு கலங்கரை விளக்குப்போல் மிளிர்வர். அதனோடு சிறந்த கட்டுரைகளைப் படைப்பதனூடாக அதில் கூறப்பட்டுள்ள நல்ல சிந்தனைகளையும் உள்வாங்குவதோடு பொன்மொழிகளில் கூறப்பட்டுள்ளதைப்போல நாம் எம் வாழ்வில் ஒழுகுவோமானால் வெற்றி எம் கைகளிலேயே.

இவ்வாறாக நாம் கல்வியிலும், சுயதொழிலும் பெண்கல்வியிலும், சேமிப்பிலும், கைத்தொழிலும், கணினி கல்வியிலும், கூட்டுறவு இயக்கத்திலும், ஊனமுற்றோருக்கு மறுவாழ்வு கொடுப்பதிலும், தொலை தொடர்பின் வளர்ச்சியிலும், ஒலிம்பிக், கிரிக்கட் போன்ற விளையாட்டுக்களிலும், விண்வெளி சாதனைகளைப் புரிவதாலும் சிந்தனை நிறைந்த மனதை ஒருநிலைப்படுத்தி படைப்புக்கள் பலவற்றை படைப்பதனூடாகவும் எதிர்கால சந்ததி பயன்கள் பல பெற்று சிறந்த சமுதாயம் ஒன்று உருவாகும்.

படைப்போம்!
உருவாக்குவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அறிவொளி தருவன நூல்களே

இ.ஆன்சிலோஜினி
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

"கண்ணுடையவர் என்பர் கற்றோர் முகத்திரண்டு புண்ணுடையர் கல்லாதவர்"

என்கின்ற வள்ளுவரின் கூற்றிற்கிணங்க இவ் வாய்மொழியானது ஊனக்கண்ணிலும் ஞானக்கண்ணே சிறந்தது எனும் கருத்தை வெளிப்படுத்திக் காட்டுகின்றது. ஊனக் கண்ணின் காட்சிக்கு ஒரு எல்லை உண்டு. ஆனால் ஞானக் கண்ணின் காட்சிக்கு , எல்லையே இல்லை. ஊனக்கண்ணானது நோயாலும், மூப்பாலும் ஒளி இல்லாமல் அதன் பண்பை இழந்துவிடும். ஆனால் ஞானக்கண்ணானது வெவ்வேறு இடங்களில் நடக்கும் நிகழ்வுகளையும் எதிர்காலத்தில் நடக்கும் நிகழ்வுகளையும் காணும் பலம் படைத்தது. இது நோயாலோ அல்லது மூப்பாலோ மங்கிப்போவது அன்று. இதனாலேயே கல்வி கற்று அறிவு படைத்தோர் கண்ணுடையோர் என சிறப்பிக்கப்படுகின்றது. கல்வி கற்காதவர் அறிவில்லாதவராய் முகத்தில் இரண்டு புண்ணுடையவர் என்று இழிவாகக் குறிப்பிடப்படுகின்றனர். இக்குறள் மூலமாக இவ்வுலகில் நாம் அனைவரும் தலைதூக்கி நடப்பதற்கு மிகவும் அவசியமான, இன்றியமையாத கல்வியின் அதி உன்னத சிறப்பை அறியக் கூடியதாகவுள்ளது.

பிறசெல்வங்களோடு கல்வியை ஒப்பிட்டுப் பார்க்கும்போது கல்வியின் நிலுவையே அதிகமாகக் காணப்படும். ஒருவர் பணம், புகழ், கோடிக்கணக்கான சொத்து என்பன உடையவராய் இருந்தாலும் கல்வியறிவு இல்லாதவராய் இருந்தால் அவரை உலகத்தில் எந்த மூலையில் இருப்பவர்களும் மதிக்கமாட்டார்கள் என்பது தான் உலகறிந்த உண்மையாகவுள்ளது. எனவே இவ்வுலகில் கல்வி கற்றவனுக்கே மதிப்பும், மரியாதையும் அதிகமாக வழங்கப்படுகின்றது. ஆனால் கல்வி கற்காமல் சபை நடுவே தம்மை பெரியவராக காட்டிக்கொள்பவர் ஊனக்கண் படைத்தோராய் எண்ணப்படுகின்றனர். ஆனால் கல்வி அறிவு படைத்த ஞானக்கண்ணராய் இருப்பவர்கள் தங்களை காட்டிக்கொள்ளாமல் அமைதியாய் இருப்பார்கள். இதன்மூலம் கற்றறிந்தவர் அனைத்தும் உடையவர் என்று மதிக்கப்படுகின்றனர். இவ்வாறான கல்வியை இவ்வுலகில் பெறுவதற்கு பல சாதனங்கள் காணப்படுகின்றன. அவற்றுள் நூல்கள், வானொலி, பேசும்படக்காட்சி, தொலைக்காட்சி சித்திரம், புராணம் என்பன குறிப்பிடத்தக்கன எனினும் கல்வி என்னும் தீபம் உலகில் அன்றுதொட்டு இன்றுவரை அணையாது நெய்யிட்டு ஒளிகாலச் செய்த பெருமை நூல்களுக்கு மட்டுமே உண்டு. ஆனால் ஏனையவை கல்வியின் அறிவு மேலோங்கிய காலகட்டத்தில் தான் கண்டுபிடிக்கப்பட்டன.

ஆனால் கல்வியின் தாயாக அன்றுதொட்டு இன்றுவரை இருந்து வருவன நூல்கள் மாத்திரமே. இவ்வுலகில் அனைவரும் வசதிவாய்ப்பு படைத்தவர்கள் அல்ல ஆனால் வசதிவாய்ப்பு படைக்கப்பட்ட ஒரு சிலராலே தான் வானொலி, தொலைக்காட்சி என்பன பயன்படுத்தப்பட்டு வருகின்றன. ஆனால் பாமரமக்களின் கைக்கு எட்டியதாக காணப்படுவது நூல்கள் மாத்திரமே. கல்வித்துறையில் காணப்படும் அனைத்தையும் அனைத்துலகுக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவிக்கவல்லன நூல்களே ஆகும். எனவே கடல் எனக்காணப்படும் கல்வியை அனை வருக்கும் வழங்கும் பெருஞ்செல்வம் நூல்களைத் தவிர வேறு எதுவுமன்று.

இவ்வாறு போற்றுதற்குரிய நூல்களை எவராலும் அழித்துவிடமுடியாது. அதற்கான ஒரே ஒரு காரணம் நூல்கள் மக்கள் மத்தியில் ஆற்றிய பங்கு ஒன்றே காரணமாகும். இவ்வாறான நூல் கள் மக்களுடைய வாழ்வுக்கு இன்றியமையாத அறம், பொருள், இன்பம், வீடு என்னும் கருத்தை தெட்டத்தெளிவாக எடுத்துக்கூறுவனவாகவும் உள்ளன. இதில் அறம் என்பது ஒருவனை கெட்ட வழியில் இருந்து நல்லவழிக்கு இட்டுச் செல்வ தாகும். இவ்வாறான அறப்பண்பை ஒருவன் தனக்குள் வளர்த்துக் கொண்டால் அவன் இவ்வுலகில் பெரியவனாக மதிக்கப்படுவான். எனவே ஒரு மனிதனை, நல்வாழ்வுக்கு, நல்ல முறையில் இட்டுச்செல்வது இந்த நூல்களே ஆகும். எனவே ஒரு மனிதனின் பூரண வாழ் வுக்கு வழிகாட்டியாக அமைவதே நூல்களின் முதலாவது பயனும் நெடும் பயனும் ஆகும்.

அன்றைய காலத்தில் நூல்கள் புலவர்கள் வேதமகரிசிகள் போன்றோரால் பாதுகாக்கப்பட்டு பராமரிக்கப்பட்டு வந்தன. ஆனால் பிற்காலத்தில் நூல்கள் ஆக்கப்பட்டும் காக்கப்பட்டும் வந்தன. இவ்வாறான நூல்கள் உலகில் தோன்றிய அறிஞர்களின் சிந்தனைகள், தத்துவங்கள், கோட்பாடுகள் அறிவியல் முடிவுகள் ஆய்வுகள் என்பன பற்றி நாம் அனைவரும் அறியக் கூடியதாய் அமைந்திருந்தன. அது மட்டுமல்லாது பேரிலக்கியங்கள் யாவும் இன்று மக்களால் தெரிந்துகொள்ளக்கூடிய அளவு நூல்கள் மூலம் வெளியிடப்பட்டு வருகின்றன. இவ்வாறு இந்த நூல்கள் காலத்தின் களஞ்சியமாக போற்றப்பட்டு வருகின்றன.

இவ்வாறு உலகுக்கு ஒளியாய் விளங்கும் நூல்கள் நல்ல நண்பர்களைவிட உயர்ந்தன வாகும். ஒருவனுக்கு அவனுக்கு வேண்டிய நேரத் தில் உதவிசெய்து, அவனுக்கு வரும் ஆபத்துக் களில் இருந்து அவனைக் காத்து அவனுக்கு வேண்டிய அறிவுரைகளை எடுத்துக் கூறுபவனே ஒரு நல்ல நண்பன் ஆவான். இவ்வாறான நண்பர்கள் அனைவருக்கும் கிடைப்பது அரி தாகும். இவ்வாறான நல்ல நண்பர்களின் உதவி களை நல்ல நூல்கள் செய்கின்றன. இவ்வாறு இந்த நூல்கள் ஒருவனுக்கு வேண்டிய உதவி களை செய்வதோடு, கலை, கலாசாரம், சமூக, பண்பாடு என்பவற்றையும் எடுத்துக் கூறுகின்றன.

இவ்வாறு ஒரு நூலானது ஒருவனுக்கு இடித் துக் கூறவேண்டியபோது இடித்துக் கூறியும், மிகை படக்கூறியும், சிந்தனைகளுக்கு உரமளித்தும் கூறும் சிறப்புமிக்கனவாகவுள்ளன. அத்தோடு ஓய்வுநேரத்தை இன்பமாகவும் பயன்படதக்க முறையில் கழிப்பதற்கு நூல்கள் போல் சிறந்தது வேறு எதுவும் அன்று. இவ்வாறு பொழுது போக் குக்காக நூல்களை வாசிக்கும்போது அவன் வாசிப்புப் பழக்கமும் கற்கும் ஆர்வமும் பிறக் கின்றது. இப்பண்பு அவனில் பதிந்து அவனை செம்மைப்படுத்துகின்றது.

ஆகவே மனிதன் ஒருவனுடைய நல்வாழ் வுக்கு கல்வி என்னும் செழுஞ்சுடரை உலகின் மூலை முடுக்கெல்லாம் பரவச்செய்யும் ஒப்பற்ற கருவிகளாக நூல்கள் மதிப்புப்பெறுகின்றன. அவை மனிதனின் பூரண வாழ்வுக்கு வழிகாட்டி யாய் அமைகின்றன. அறிவென்னும் பெருநிதியை விரும்பியவர்கள் விரும்பிய அளவு விரும்பிய வேளை பெற்று இன்புறுவதற்கேற்ப அருமருந் தன்ன கருவிகளாய் மிளிர்கின்றன. சுருங்கக் கூறின் இன்றுள்ள நிலையில் நூல்கள் ஆருயிர் போன்று மிக அருமையாய் போற்றி பயன்கொள் ளப்படவேண்டியனவாம்.

ஆகவே நூல்கள் என்பது ஒருவருடைய வாழ் வுக்கு இன்றியமையாத செல்வமாக திகழ்கின்றது. எனவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நவில் தோறும் நூனயம் போலும் பயில்தோறும் பண்புடையாளர் தொடர்பு"

என்னும் இக்குறளுக்கூடாக வள்ளுவர் நூல்கள் பயிலுவதால் அவர்களின் குணங்கள், பண்பு, ஆற்றல் என்பன அந்நூல்களில் செல்வாக்கு செலுத்துகின்றன என்று கூறுகின்றார். எனவே நூல்கள் அறிவொளி தருகின்ற ஒரு தீபச்சுடராக விளங்குகின்றன. இத்தீபச்சுடரை நாமும் எமக்குள் ஏற்றி தீபச்சுடர் எம்மில் ஒளிரும் மாணவர்களாக நூல்கள் பல கற்று இறைவன் எமக்குத் தந்த இவ்வுலகில் ஒளியுள்ளவர்களாக மாறு வோம்.

எனவே அறிவொளி தரக்கூடியன நூல்களே எனும் கருத்தை நினைவில் கொண்டு அதனை எமது இறுதிமுச்சுவரை கற்று அறிவொளி பெற்றவராக திகழ முயற்சிசெய்வோம்.


# தொலைந்த நினைவுகள்

பிறந்தகம் விட்டு தொலை தூரம்
வந்தாலும் - கூட
சுவாசித்த காற்றும் உடன்
வருகிறது

நேற்று உறவுகள் புடைசூழ
இருந்த வீடு
இன்று - புல் பூண்டு முளைத்த காடு

காலம் செய்த கோலம்
கயவர்களின் யுத்தம்
எம்மை எங்கெங்கோ செல்ல வைத்தது
ஏன் எம்மையே எம்மைத்
தேட வைத்தது.

கடவுள்கள் பல கண்ட கலைக்களம்
இங்கே அது கொலைக்களம்
அன்னையின் நெஞ்சினில் சன்னம்
என் மனதின் ஆழத்தில் ஒரு சலனம்.



புத்தகம் ஏந்தும் கைகளில்
துப்பாக்கி
அது அன்றே வாழ்வைத்
தப்பாக்கியது
மனப்பாடக் கறையான்
இதைமட்டும் ஏனோ அரிக்கவில்லை

கல்யாண வீட்டை அலங்கரித்த
பூக்கள் - கல்லறையையும்
அலங்கரித்தன
அம்மாவின் கைபேசி அப்பாவிடம்
கதைபேச முடியாமல்
தவிக்கின்றது

பட்டம் பெற்ற நான்
சட்டத்தின் முன் நிறுத்தப்பட்டேன்
அன்று நானும் என் நினைவுகளும்
தொலைக்கப்பட்டோம் . ஏன்
என் கனவுகளும் கூடத்தான்.

இன்னும் கண்டு பிடிக்கப்படாத
என் நினைவுகள் என் மனச்சிறையில்
இன்னும் நான் கைதிதான்

ச.வனிஸ் டொறிஷா
தரம் 11A



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கு எதிரான வன்முறைகள்

எப்சிபா வாஷிங்ரன் கிளே
தரம் 10D

21ம் நூற்றாண்டில் ஆண்களும், பெண்களும் சமத்துவம் மிக்கவர்களாக விளங்குகின்றனர். பண்டைய காலத்தில் ஆணாதிக்க சமூகமாகவே தமிழர் சமூக அமைப்பு காணப்பட்டது. ஆனால் பாரதி போன்ற புரட்சிக்கவிஞர்கள் உலகத்தில் ஆண், பெண் சமத்துவத்தினை வலியுறுத்தினர். "எட்டும் அறிவினில் ஆணுக்கு பெண் இழைப்பில்லை" என்றும் "வீட்டுக்குள்ளே பெண்ணைப் பூட்டிவைப்போம் என்ற விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்றெல்லாம் பெண்களின் சமத்துவத்தை வலியுறுத்தி வந்தனர். உலக அரங்கில் பெண்ணானவள், ஆண்களுக்கு அனைத்து விதத்திலும் சளைக்காதவளாய் இருந்து வந்துள்ளாள். ஆனால் இன்று அவள் அனைத்து விதத்திலும் முன்னேறிவிட்ட பொழுதிலும் பெண்களுக்கு எதிரான வன்முறைகளும் அதிகரித்துச் செல்கின்றன. இந்தவகையில் பெண்ணானவள் உடல், உளரீதியாக பல வன்முறைகளை எதிர் நோக்கியவளாகவே இருக்கின்றாள். இவ்வன்முறைகள் பற்றி நோக்குவதே இக்கட்டுரையின் நோக்கம்.

இன்று உலகளாவிய ரீதியாக பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துக்கொண்டே செல்கின்றன. அண்மைக்காலமாக வளர்முக நாடுகளில் இவ்வன்முறை குறிப்பிட்டுச் சொல்லக் கூடிய தன்மையுடன் காணப்படுகிறது. இலங்கை போன்ற நாடுகளில் வன்முறைகள் ஏற்படுவதற்கு பின்வரும் சூழல்கள் குறிப்பிடத்தக்கனவாக அமைகின்றன. குடும்பம், தொழிலிடம், பொது இடங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். குடும்பரீதியாக பெண்களுக்கு எதிரான வன்முறையை நோக்குகின்ற பொழுது கணவன் மனைவி கொடுமை, சீதனக்கொடுமை, மாமியார் மருமகள் கொடுமை, பாலியல் ரீதியான கொடுமை எனப் பலவற்றைக் குறிப்பிடலாம். இன்று பாலியல் ரீதியான வன்முறைகள் பெரும்பாலும் குடும்பத்தின் நெருங்கிய உறவினர்களினாலேயே நடைபெறுவதனை அவதானிக்கலாம். இன்று பெண்களுக்கெதிரான வன்முறைகள் அதிகரிப்பதற்கு தரமற்ற சினிமா இணையத்தளங்கள் ஏனைய தொடர்பூடகங்கள் போன்றனவும் காரணமாக அமைகின்றன.

இன்று பெண்களுக்கு எதிராக நடைபெறுகின்ற வன்முறைகளைத் தடுப்பதற்கும் சில வழிமுறைகள் உண்டு. அவற்றைக் கைக்கொள்வதன் மூலம் பெருமளவு வன்முறையைத் தடுக்கமுடியும். இதற்கு மிக முக்கியமானது பெண்களுக்கு வன்முறைகள் தொடர்பாக விழிப்புணர்வுகள் ஏற்படுத்தப்படவேண்டும். அவ்வாறு ஏற்படுத்துவதன் மூலம் பெரும்பாலான வன்முறைச் சம்பவங்களில் இருந்து பெண்கள் தம்மைத் தாமே பாதுகாத்துக்கொள்ள முடியும். அதுமட்டும் அல்லாமல் பெண்களுக்கு எதிராக வன்முறை புரிவோர் மீது அதிகமான தண்டனைகள் வழங்குவதற்கான சட்டமூலம் நிறைவேற்றப்பட்டு தண்டனைகள் வழங்குவதன் மூலம் இவ்வன்முறைகள் இடம் பெற்றால் அதனை மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவதன் மூலம் இதற்கான வாய்ப்புக்கள் குறையலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் ஏற்படுகின்ற போதிலும் அவற்றை தடுத்து நிறுத்து வதில் பெரும் சவால்களும் ஏற்படுகின்றது. அதாவது வன்முறைகள் இடம்பெற்றால் அது தொடர்பான விடயங்களைத் தெரிவிக்காமல் விடு வதன் மூலம் அப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமல் போகும் சந்தர்ப்பம் உண்டு. ஆனால் வன்முறை புரிவோர் தமது பணபலம், அதிகார பலம் என்பவற்றால் அதனை மூடி மறைக்கும் சம் பவங்களும் உண்டு. மேலும் வன்முறைகளுக்கு ஆணிவோர் தமது பிரச்சினைகளை வெளியுலகுக் குக் கொண்டுவருவதன் மூலம் தமது மனப்பிரச் சினையாக அது அமைந்துவிடும் என மூடிமறைப் பதனாலும் இப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமல் போய்விடும் சந்தர்ப்பங்களும் உண்டு.

பெண்களுக்கு எதிரான வன்முறைகள் தொடர்பாக விழிப்புணர்வுகள் ஏற்படுவதன் மூலம் அவர்களுக்கு எதிரான வன்முறைகளைத் தடுத்து நிறுத்த முடியும். ஆனால் இன்று விழிப்புணர்வு கள் ஏற்படுத்துவதில்லை. கிராமங்களில் உள்ள மாதர் அபிவிருத்திச்சங்கம் மகளிர் அமைப்புக்கள், சனசமூக நிலையங்கள், பொலிஸ் நிலையங்கள் இப் பிரச்சினை தொடர்பான விழிப்புணர்வுகளைக் கிராமங்கள் தோறும் ஏற்படுத்துவதன் மூலம் இப்பிரச்சினைகளை ஓரளவுக்கு தடுக்கமுடியும்.

இவ்வாறாக இன்று நாட்டின் பல இடங்களி லும் வன்முறைகள் ஏற்படுகின்றது. எனினும் வன் முறையாளர்கள் ஒவ்வொருவரும் தாம் உணர்ந்து செயற்படுவதன் மூலம் இவ்வன்முறை களைத் தடுக்க முடியும் எனவே ஆண்களும் பெண்களும் சமத்துவத்துடன் வாழும் வன்முறை கள் அற்ற ஒரு சமூகத்தைக் கட்டியெழுப்புவது உலகில் வாழும் ஒவ்வொருவரது கடமையாகும்.

## ஆறாத காயங்கள் ...



கையிழந்து காலிழந்து
கண்ணிழந்து கற்பனையின்
உலகினில் நான்
களையிழந்து

யுத்தத்தின் சத்தத்தால்
வாழ்விழந்து வழியிழந்து
விழலுக்கிறைத்த நீரான
வாழ்க்கையிது

காயங்கள் மாறிய போதும்
காட்சிப் பொருளாய் என் வாழ்க்கை
காலங்கள் கழிந்தாலும்
கடைசிவரை...?

முள்ளிவாய்க்காலின் முள்வேலிகள்
ஓய்ந்து போயினும் என் மனதில்
துன்பத்தின் அலைகள்
சுனாமியாய்

**ஜவன் இக்னேசியஸ் ஆன் ஒலீவியா**
கலைப்பிரிவு உயர்தரம் (2016)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சங்கீதம் ஒரு புனிதமான கலை

நா.கம்ஷாகினி
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

இசையால் வசமாகாத உலகமில்லை. மனிதன் நாகரீகம் அடையும் முன்னரே இசை ஒரு தனிப்பாஷையாக விளங்கியது எனலாம். மொழிமூலம் தனது உணர்ச்சிகளை வெளிப் படுத்த முடியாத காலத்தில் அதாவது சிந்து வெளி நாகரிகத்துக்கு முற்பட்ட காலத்திலேயே மனிதன் தனது உணர்ச்சிகளை ஓசை மூலம் வெளிப்படுத் தினான். பறவைகள், மிருகங்கள் வெளிப்படுத்திய ஓசைகள் மனிதனுக்கு முன்னோடியாக அமைந் தன என்று கூறலாம்.

மகிழ்ச்சியை வெளிப்படுத்த ஆரவாரித்தும் துன்பத்தின் போது ஓலமிட்டும் பயத்தை வெளிப் படுத்த இரைந்தும் தன் வாழ்க்கையை நடத்தினான். பறவைகளின் இனிமையான ஒலி ஆனந்தம் தந்தது. இனிமையான ஓசையில் இருந்து பிறந்தவை எல்லாம் இசையாகின.

செவிக்கும் மனதிற்கும் இன்பத்தைத் தரக் கூடிய முறையில் நாதத்தினாலாக்கிய கலை சங்கீதம் ஆகும். 64 கலைகளிலும் முதன்மை யானது சங்கீதம். சிவனின் உடுக்கு, சரஸ்வதி யின் வீணை, கண்ணனின் புல்லாங்குழல், நந்தியின் மத்தளம் நாரதரின் தம்புரா என்பன இசையின் தொன்மையையும், தெய்வீகத் தன்மையும் உணர்த்துகின்றன. இசையைப் பாலகர்கள் முதல் வயோதிபர் வரை சகலரும் விரும்பிக் கேட்கின்ற னர். மிருகங்களும் இசையை இரசிக்கின் றன.



சங்கீதம் பயிலுவதால் அன்பு, அடக்கம், பக்தி, பணிவு, மனத்திருப்தி, ஒற்றுமை வளர்க்கப்படு கின்றன. கடவுளை அறிவதற்கும் அடைவதற்கும் சங்கீதமார்க்கம் சிறந்ததாகும். பாடல்களை பயிற்சிக்குள்ளாகுவதனால் சுவாசப்பைகளுக்கு வலிவு ஏற்படுகின்றது. சங்கீதம் என்றால் காதால் கேட்டு இன்பம் பெறக்கூடிய கலையாதலால் இது சிரவணக்கலை என அழைக்கப்படுகின்றது.

இசையினால் வசமாகாதோர் இவ் உலகில் யார் உண்டு? மரம், செடி, கொடி, புல், பூண்டு, பறவைகள், மனிதர்கள், தேவர்கள், முனிவர்கள் ஏன் இயற்கையைக் கூட ஆட்டிப்படைக்கும் தன்மை இவ்விசைக்குண்டு. மனச் சாந்தியையும் இன்பத்தையும் மேலோங்கச் செய்யும் ஆற்றலும் ஆறாத துயரத்திலும், மீளாத மன வேதனையிலும் இவ்வுலக நினைவாற்றலை இழந்த மானிடனை யும் ஏன் குழந்தை முதல் ஆண், பெண், அரசன், ஆண்டி, ஏழை பணக்காரர் யாவரையும், கல்லை யும் கனிய வைக்கும் மருத்துவசக்தி இவ்விசை க்கு உண்டு. ஆண்டவனை எம்மனக் கண்ணே நிறுத்தி அவனருகில் உலாவருவதற்குக்கூட இசையின் வலிமை வேண்டும்.

இன்னிசை நின்று போனால் இவ்வுலகம் நின்று போகும். இசையே உலகு. எந்திர வாழ்க்கையின் மத்தியில் நெஞ்சில் ஈரத்தை பொசியவைப்பதும் இசையே. காதல் வந்தால் அங்கும் இசை, கண்ணீர் வந்தால் அங்கும் இசை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உயிர்களின் சுவாசம் காற்று, அந்த காற்றின் சுவாசம் கானம்"

ஒவ்வொரு மனிதனின் செயற்பாடுகளிலும் இசையின் வலிமை அடங்கியுள்ளது. இயற்கை அன்னை எல்லோர்க்கும் ஒவ்வொரு ஆற்றலைக் கொடுத்தாலும் எல்லோராலும் ஜீரணிக்கக் கூடியதும் உள்ளப்புலனுணர்வை தட்டியெழுப்பி உணர்ச்சி, உயிரோட்டம் பாவத்தை உணர்த்துவதும் இந்த இசையே. இசையை இரசிக்கத் தெரியாதவன் உயிர் வாழத் தெரியாதவன்.

நாகரிகம் வளர வளரக் கலைகளும் வளர்ந்தன. வேதகாலத்தில் இறைவனை வழிபட்ட சாமகானம் எமது சுத்த இசைக்கு ஆரம்பம் எனக் கொள்ளலாம். நாதப் பிரமமாய் விளங்கும் இறைவனை அடைவதற்குச் சிறந்த சாதனமானது இசையேயாகும். இறைவனை இசைவிக்கும் தன்மையும் இசைக்கு உண்டு. சங்கீத கலைக்கு வரம்புகள் கிடையாது. இன, மத, மொழி, சாதி எனும் தடைகளும் கிடையாது.

எங்கும் இசை எதிலும் இசை
யாவும் இசை உலகம் ஆகியது
இறைவன் வரமே

இசைக்கலை மென்மேலும் வளர இறையருள் கிடைப்பதாக.

# கானலான வாழ்வு

திருமதி.சதாறூாயினி சிறீகந்தராஜா
ஆசிரியர்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

*அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கையால்*
*உறவுகள் ஊசலாடுகின்றன.*
*பண அரக்கன் தன் கோரப் பற்களைக்*
*காட்டிப் பயமுறுத்துகிறான்.*
*விடையில்லா வினாவான வாழ்க்கை*
*இன்று ஆச்சரியக் குறியாய் இடைநிற்க,*
*சுமை தாங்கி மாந்தர்களின்*
*முதுகுகள் கேள்விக் குறிகளாயின.*
*சிந்தனைச் சிறகுகள் வெட்டப்பட்ட மாந்தர்*
*வட்டத்துள் நின்று விட்டத்தைப் பார்ப்பர்.*
*கையளவு உலகமெனக் கணக்குப்போட்டு*
*கிணற்றுத் தவளையாய் தாளம் போடுவர்.*
*பசித்தவன் பக்கமிருக்கப் பாயாசம் உண்டு*
*'செரிமானம்' ஆக பீடாவைத் தேடும் மாந்தர்*
*கால் தடக்கி விழுந்தவனை தூக்கிவிட ஆளில்லை*
*நூல் தவறி வாழ்ந்தான் எனவே பழித்திடுவர்*
*ஓரடி நிலத்திற்காக ஓராயிரம் சண்டைகள்*
*குத்தல்ப் பேச்சோடு குதறிடும் வார்த்தைகள்*
*செல்வந்தன் என்றால் தோழனாவான்*
*செல்லாக்காசு இன்று ஏழைமகன்*
*காலதேவன் வந்து வாவென்றழைக்கையில்*
*காலமென்ன நேரமென்ன காற்றுப்போன பந்துதான்*
*பாலமென வந்த சொந்தங்கள் அழும்*
*சீலமற்ற செல்வங்கள் உடன் வாராதப்பா!*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியக் கருத்துரைக்கும் இனிய திரை இசைப் பாடல்கள்

**திருமதி. சதாரூபினி சிறீகந்தராஜா**
ஆசிரியர்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

இசையால் வசமாகாத இதயமே இல்லை. இசைக்கு உருகாத மாந்தர்கள் ஒருவருமிலர். அஃறிணை உயிரினங்கள்கூட இசைக்கு மயங்கு வதைக் காண்கிறோம். இறைவனைக் கூட இசையாலே பாடிப்பரவுகின்றோம். தமிழிலக்கி யங்கள் பல வாழ்வியற் கருத்துக்களைக் கூறி நிற்கின்றன. ஏட்டில் வந்த அந்த இலக்கியங்களை இசையால் பரவும் வகையில் திரையிசைப் பாடல்கள் முன்னணிவகிக்கின்றன.

திரைப்படங்கள் வாயிலாக இலக்கியச் சுவை மிகுந்த பாடல்கள் பல வெளிவந்துள்ளன. இயற்கை, அழகு, காதல், இல்வாழ்க்கை, குழந்தை இன்பம், இறைபக்தி, கல்வி மற்றும் ஒழுக்கம் தொடர்பான பல கருத்துக்களை திரை இசைப் பாடல்கள் மூலம் நாம் அடிக்கடி கேட்கின்ற சந்தர்ப்பங்கள் ஏற்படுகின்றன.

ஏட்டிலக்கியங்களில் பெரும்பாலானவை படித்தவர்கள் மத்தியிலேயே உலாவருகின்றன. பாமர மக்களின் பக்கமாக அவை செல்வதே இல்லை. சங்க இலக்கியம் முதல் பன்னிரு திரு முறைகள், ஆழ்வார்களின் பாசுரங்கள், பாரதி யாரின் வீரம் பொங்கும் பாடல்கள், பாரதிதாசனின் ஆவேசப்பாடல்கள் வரை திரைக்கு வந்து பிரசித்தி பெற்ற பாடல்களே அதிகம் எனலாம்.

திரைப்படப் பாடல்கள் என்றால் அவை வெறும் வார்த்தை ஜாலங்கள், மிகைப்படுத் தப்பட்ட வர்ணனைகள், சமூகத்தினைத் திசை திருப்பும் சாதனம் என்றே கருத்துரைக்கின்றவர் களும் எம்மத்தியில் உள்ளனர். நாணயத்திற்கு இரண்டு பக்கம் போல எந்தவொரு விடயத்திற்கும் நன்மையும் உண்டு தீமை உண்டு. நல்ல சிந்தனைகளை நாம் சிரமேற் கொள்வோம்.

இயற்கை மனிதனுக்கு எப்போதும் இன் பத்தை அள்ளித்தரும் கற்பகவிருட்சம்; கற்பனைச் சுரங்கம்; மனதை மயக்கும் மாணிக்க மாலை இவ் இயற்கை பற்றிப் பாடாத புலவனே இல்லை எனலாம். சங்ககால மக்கள் இயற்கையோடு இணைந்த இன்பவாழ்வை மேற்கொண்டனர். புலவர்களும் இயற்கைக் காட்சிகளையே இலக்கியங்களில் முதற்பொருளாகக் கொண்டனர். குறுந்தொகைப் பாடல் ஒன்றில்

"கருங்கால் வேம்பினொண்பூ யாணர்

என்னும் பாடலில் வேப்பம் பூ பற்றிக் கூறி இயற்கை வர்ணிக்கப்படுகின்றது

"வானம் எனக்கொரு போதிமரம்
நாளும் எனக்கது சேதிதரும்" என்னும் திரையிசைப் பாடலும் இயற்கையைப் போற்று கிறது.

இயற்கையைத் தூதாக அனுப்பும் முறை பண்டைய இலக்கியங்களிலே காணப்படுகின்றது. நந்திக்கலம்பகம் என்னும் இலக்கியத்திலே

"ஓடுகின்ற மேகங்களே ஓடாத தேரில்
வெறுங் கூடு வருகுதென்று கூறுங்கள்"

என்று தலைவன் மேகங்களைத் தலைவியிடம் தூதாக அனுப்புகிறான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனையே திரையிசைப் பாடலொன்று

"கண்ணன் மனம் என்னவோ
கண்டு வா தென்றலே"

என்று தென்றலைத் தூதாக்குகிறது.

முத்திரைக் கவிஞர் வைரமுத்து

"முகிலினங்கள் அலைகிறதே
முகவரிகள் தொலைந்தனவோ
முகவரிகள் தொலைந்ததனால்
அழுதிடுமோ அது மழையோ"

என்று சாதாரணமாக முகில்கள் அலைகின்ற விடயத்தை அவை முகவரிகள் தேடி அலைவதாகத் தற்குறிப்பேற்ற அணியில் கூறியுள்ளார்.

இல்லற வாழ்வுக்கு இன்மை சேர்க்கும் விடயம் விட்டுக்கொடுப்பு. இவற்றை இன்றைய சூழலில் நாம் காண்பதே அரிதாகிக் கொண்டு வருகின்றது. திருக்குறளிலே

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல் வாழ்க்கை
பண்பும் பயனும் அது"

என்று திருவள்ளுவர் கூறுகின்றார். அதாவது வாழ்விலே அன்பு, அறம் என்பன இருந்தால் அவையே வாழ்க்கையின் பயனாகக் கிடைக்கும். இதற்கு எதிர்மாறான ஒரு விடயத்தை பின்வரும் பாடல் கூறுகிறது.

"ஏதேதோ எண்ணம் கொண்டு
எந்நாளும் சண்டையிட்டால்
வாதாட நேரம் போதும்
வாழ்வுக்கே நேரம் ஏது" என்று கூறுகிறது.

இந்நிலை இன்று மலிந்திருப்பதைக் காண்கிறோம்.

கவலையின் கண்ணீரால் கலங்கித் தவிக்கும் நெஞ்சம் கூட மழலையின் மொழி கேட்டு மனமிளகி நிற்கும்.

"குழலினிது யாழினிது என்பதம் மக்கள்
மழலைச் சொல் கேளாதவர்"

என்று மழலைச் செல்வமே இனிமையானது என்பதை வள்ளுவர் எடுத்துரைக்கிறார்.

இதனை கண்ணதாசன் தன் காவியத்தில்

"முத்தான முத்தல்லவோ
முதிர்ந்து வந்த முத்தல்லவோ
கட்டான மலரல்லவோ
கடவுள் தந்த பொருள் அல்லவோ"

என்று பாடுகிறார்.

இன்றைய குழந்தைகளே நாளைய தலைவர்கள். அவர்களைச் சிறந்த சிற்பங்களாகச் செதுக்க நல்ல சிந்தனைகளை அவர்களின் மனதிலே விதைக்க வேண்டும்.

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன்மகனைச் சான்றோன்
எனக்கேட்ட தாய்"

என்பது வள்ளுவர் வாக்கன்றோ.

"கல்விக் கண்ணைத் திறந்திடப் பள்ளியிருக்கு
கற்றுக்கொண்டு அன்னை என்று பேரெடுக்க
உன்னைப் பெற்ற அன்னை என்று என்னைப் புகழ
இன்னும் பல ஆசையுண்டு சொல்லி மகிழ"

தன் ஆசையைப் பாடிமகிழும் தாயின் உணர்வுகளை மக்கள் மத்தியில் கொண்டு சென்றது திரையிசைப் பாடல்களே.

சிறுவர்கள் சிரித்து மகிழ்ந்து வாழவேண்டும். அல்லாவிடிலோ வாழ்வு பகலிலும் தொடரும் இருட்டாகும்.

"நகல்வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்
பகலும்பாற் பட்டன்று இருள்"

அதாவது சிரிக்காதவர்களுக்கு பகல்கூட இருட்டாகவே தெரியும் என்று கூறப்படுகிறது. இதனையே வாலி என்னும் கவிஞர்

"கிளிபோல பேசு - இளங்குயில் போல பாடு
மலர்போல சிரித்து - நீ குறள்போல வாழு
மனதோடு கோபம் - நீ வளர்த்தாலே பாவம்
மெய்யான அன்பே - தெய்வீகமாகும்"

என்று இனிய அறிவுரையைப் பகர்கிறார்.

வீட்டுக்கு வீடு வாசற்படி. துன்பமில்லா வாழ்க்கை எங்குமே இல்லை வாழ்விலே தொடரும் துன்பத்தைத் துச்சமென எண்ணியிருந்தால் துன்பங்கள் எல்லாம் வழிகேட்டு ஓடு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்லவா? சங்கப் புலவர் கணியன் பூங்குன்றனார் 'யாதும் ஊரே' என்னும் புறநானூற்றுப் பாடலில் "மின்னல் மின்ன இடி இடித்து வானம் துளித்துளியாய் பொழியும் மழை நீரானது தரையில் பெரிய ஆறாகப் பாய்ந்து ஓடினாலும், நீரில் மிதந்து போகும் மிதவை போல அரிய உயிர் விதியின் வழியே செல்லும்" என்கிறார். கண்ணதாசன் கூட,

"உண்மையைச் சொல்லி நன்மையைச் செய்தால்
உலகம் உன்னிடம் மயங்கும் – நிலை
உயரும் போது பணிவு கொண்டால்
உயிர்கள் உன்னை வணங்கும்"

என்ற வரிகளில் எமக்கு வாழ்வில் பணிவு வேண்டும் என்பதை உணர்த்துகின்றார்.

"எல்லார்க்கும் நன்றாம் பணிதல் அவ ருள்ளும்
செல்வர்க்கே செல்வம் தகைத்து"

என்று வள்ளுவர் பணிவின் அவசியத்தை எடுத்துரைக்கிறார்.

ஆகவே காலங்காலமாக பல்வேறு இலக்கியங்கள் போற்றி அறிவை வளர்த்தன. அவ் வகையில் இலக்கியக் கருத்துக்கள் சகல மக்களிடமும் செல்வதற்குத் திரையிசைப் பாடல்கள் காரணமாக மிளிர்ந்துள்ளன என்றால் மிகையில்லை. நல்ல பாடற் கருத்துக்களை நன்மைக் குப் பயன்படுத்துவோம்.

## பாடசாலை நாட்களில்...

பாடசாலை பருவத்திலே
ஓடித்திரியும் மாணவர் நாம்
பாடங்கள் பல கற்றிருந்தாலும் – நமக்கு
நினைவுகள் என்பது உண்டெல்லோ

வீட்டை விட்டு பிரிந்து – பின்பு
ஒன்று கூடும் கூடம் இது
தாயைவிட்டு பிரிந்தாலும்
அன்பு கிடைக்கும் கோவில் இது

காலையில் பறித்த பூவைப்போல்
தமிழ் ஆசிரியர் வருகையில் – தோழியே



நாம் செந்தமிழ் கூட
பேச தோணுமடி
தோழிகளாய் நீங்கள் அருகில்
இருந்தபோதும் – எனக்கு
பரீட்சைகள் கூட அல்வாவாக
இனித்தடி

சில சில குறும்புத்தனத்தால்
சில சில வலியும் கண்டோம்
எந்த பாடமும் புரியவில்லை என்றாலும்
சிரித்தே மழுப்பிடுவோம்

நாட்கள் எவ்வாறு சென்றனவோ
பாடசாலை நாட்களும் முடிந்ததடி
நினைத்து நினைத்து பார்த்தாலும்
முடியவில்லை இந் நாட்களை மறப்பதற்கு
மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமா – தோழி
நாம் பள்ளி மழையில் நனைய....

கு.குமாரதர்சினி
கலைப்பிரிவு உயர்தரம் (2016)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புறநானூறு காட்டும் விழுமியம்

ஞா.மேரிசிந்துஜா
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

சங்ககால மக்கள் சமூக வாழ்க்கையில் சிறந்து விளங்குகின்றனர். காதலையும் வாழ்க்கையையும் கூறும் அக இலக்கியங்களும் போரையும் அவை தொடர்பான வாழ்க்கையினையும் கூறும் புற இலக்கியங்களும் தோற்றம் பெற்றன. இந்த வகையில் புற ஒழுக்கம் பற்றிக் கூறும் நூல்களில் புறநானூறு முக்கிய இடம் பெறுகிறது. புறநானூற்றில் பல அறக்கருத்துக் களைக் காணலாம். புறநானூறு இலக்கியமானது மக்களின் அறவுணர்வு, பொருளுணர்வு, புகழ் வேட்கை, வீடுபேற்று விழைவு முதலியவற்றை நன்கு விளங்ககாட்டும் திறனுடையதாகும். ஆதலால்தான் பண்டை நாளையத் தமிழ் மக்களின் வாழ்க்கைப் பண்புகளை ஆராய்ந்த அறிஞர் அனைவரும் புறப்பொருளை உணர்த்தும் நூல்களைப் பொதுவாகவும் புறநானூற்றை சிறப் பாகவும் ஆராய்ந்திருக்கின்றனர்.

அவருட் பெரும்பாலார் நிரம்பிய தமிழறி வில்லாமையாலும் பண்டைத்தமிழ் மக்களின் தொன்மை அறிவு வன்மை, வாணிபத்துணிவு, அரசியல் நுட்பம் முதலியவற்றைக் கண்டதனா லெழுந்த அழுக்காற்றாலும் பிறவாற்றாலும் சிலவற்றை விடுத்தும் சிலவற்றை மறைத்தும் சிலவற்றைத் தரித்தும் சிலவற்றைப் பிழைத்தும் தம் ஆராய்ச்சிகளை நடத்தினர். நாகரீகம் எனும் தமிழ்ச்சொல் சங்ககாலத்தே கண்ணோட்டம் என்னும் பொருள் குறித்து வழங்கி வந்ததாகும்.

புறநானூறு இலக்கியத்தில் தமிழனின் பண்பாட்டை எடுத்து நோக்குவோம். வீரமக்களிலிருந்த அறம் புரியுந்திறம் மிக்க நயமுடையதாகும். குறிஞ்சி நிலத்தவரின் விருந்தோம்பும் திறம் கூறலுற்ற ஏணிச்சேரி முடமோசியார் *"சிலைப்பாற்பட்ட முளவுமான் கொழுங்குறை, விடர்முகையடுக்கத்துச் சினை முதற்சாந்தம் புகர்முக வேழத்து மருப்பொரு மூன்றும் இருங்கேழ் வயப்புலி வரிய தடகுணவகி விருந்திறை நல்கும் நாடன் "(புறம்.374)* என்று தெரிவிக்கின்றார். தம்மை நாடி வருவோர்க்கு உடை முதலியன தந்து அறம்புரியும் திறத்தை, ஔவையார்,

*"திருமல ரன்ன புதுமடிக்கொளீஇ மகிழ்தரல் மரபின் மட்டேயன்றியும், அமிழ்தன மரபின் ஊன் றுவையடிசில், வெள்ளி வெண் கலத்தூட்டலன்றி... அகடுநனை வேங்கை வீகண்டன்ன, பகடு தரு செந் நெல் போரொடு நல்கிக் கொண்டி பெறுகின்றேனே" (புறம்.390)* என்று மொழிகின்றார். "*இரவிடை வந்தோர்க்கு, அதளுண்டாயினும் பாயுண்டாயினும் யாது ண்டாயினும்" (புறம்.317)* கொடுத்து உறங்கு வித்துச் சிறப்பிக்கும் உயர்வும், கணவன், "பரிசில் பரிசிலர்க்கு ஈய" கண்டும், அவன் மனையாட்டி, "பாண ரார்த்தவும் பரிசில் ரோம்பவும், ஊணொலி யரவமொடு கைதூவா" (புறம்.334)ப் பெருமை யும், கிழவன் சேட்புலம் படரின் இழையணிந்து... பெண்டிருக்கும் தம் பதம் கொடுக்கும் (புறம்.151) கொடையும், கணவன் இறந்துபட்டவழி மகளிர், குழல்களைதலும், இழையணியாமையும், கைம்மைமேற்றலும், உடனுயிர் விடுதலும், தீப்பாய்தலும், பிறவும் இத்தமிழ் நன்மக்கள் பால் காணப்படுகின்ற செயல் வகைகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்களின் உளநலனும் குண நலனும் கேள்வியுற்று வேந்தர் மகட்கொடை வேண்டலும், அவர்பால் மறப்பண்பும் அறவுணர்வும் குன்றியிருக்குமாயின் பெற்றோர் மகட்கொடை மறுத்தலும், அது வாயிலாகப் போர் நிகழ்தலும் பண்டை நாளைய மரபாகும். மகட் பேசிய பின் மணமகன் போர் குறித்துப் பிரியலுறின், வாள் வைத்து மணம் புரிதலும் பண்டைத்தமிழ் மரபாகும்.

"யாதும் ஊரே யாவரும் கேளீர்" எனும் பாடலிலும் தமிழனின் சிறந்த பண்பாடு எடுத்து விளக்கப்படுகின்றது. இப்பாடலை கணியன் பூங்குன்றனார் என்னும் புலவர் பாடியுள்ளார். இவர் சிறந்த பாடல்களைப்பாடும் ஆற்றல் உடைய வராக இருந்தபோதும் அரசர்களையோ வள்ளல் களையோ வியந்து போற்றி பாடியவர் அல்லர். தான் அவ்வாறு போற்றிப் பாடாமைக்கான காரணமாகவும் சிறந்த கருத்துக்களை கொண்டனவாகவும் "யாதும் ஊரே" என்னும் பாடலை அமைத்துள்ளார்.

பண்டைய காலத்தில் மக்கள் எல்லா ஊர் களையும் தமது ஊரை நேசிப்பதைப்போல நேசித்தார்கள். எல்லோரையும் தம் உறவினர் போல அன்பு செய்தார்கள். இறப்பு இந்த உலகத் தில் புதிய ஒரு விடயம் அன்று. அனைவருக்கும் நிகழும் நித்தியமான ஒரு முடிவு. இந்த பூமியிலே வாழ்வதுகூட மிகுந்த இன்பம் தரும் என்று எண்ணி மகிழ்வதும் இல்லை. என்கின்ற கருத்துக்களை முற்காலத்திலேயே தமிழன் அறிந்துவைத்துள் ளான்.

நாம் நன்மை செய்தால் எமக்கு நன்மையே கிடைக்கும். நாம் தீமை செய்தால் தீமையை அனுபவிப்போம். இதனை பாடல் வரி "தீதும் நன்றும் பிறர் தரவாரா" என்னும் அடிகள் எடுத்துக் காட்டுகின்றன. மனிதர்கள் ஒருவருக்கு ஒருவர் நன்மை புரிந்தால் உலகம் சிறக்கும் என்பதே அன்றைய கால தமிழனின் நம்பிக்கை.

வாழ்க்கைபற்றிய தத்துவத்தை பண்டைய தமிழன் சிறப்பாக அறிந்துவைத்துள்ளான். வெறுப்பு வந்தவுடனேயே துன்பம் மிக உடையது என்று சொல்லி ஒதுக்குவதும் இல்லை. இதன் மூலம் துன்பத்தை தீர்க்கும் வழிமுறைகளை அக்கால தமிழன் அறிந்து செயற்பட்டான் என்று கூறலாம்.

வானத்திலிருந்து பொழியும் மழை நீரானது அருவியாக வழிந்து ஓடும்போது அதன் மேல் மிதக்கின்ற மிதவை ஒன்று எவ்வாறு அந்த நீர்செல்லும் வழி எல்லாம் செல்கிறதோ அதே போலத்தான் எம்முடைய இந்த உயிரும் விதியின் வழியே கால ஓட்டத்தில் நகர்ந்து செல்லும் இதனை
"நீர்வழிப் படூஉம் புணைபோ லாருயிர்
முறைவழிப் படூஉ மென்பது திறவோர்" என்னும் இந்தக் கருத்துக்களை பெரியோர்கள் கூறிய நூல்களால் அறிந்துள்ளனர்.

சிறப்புக்கள் பலவற்றால் உயர்ந்தோரை பெரியோர் என்றும் சிறப்புக்களால் குறைந்த வரை சிறியோர் என்றும் பொதுவாக கூறுவர். ஆனால் எல்லோரையும் உறவினராக பாவிப்பதனால் அவர்கள் பெரியவர்களைக்கண்டு ஆச்சரியப் படுவதும் இல்லை. சிறியவர்களைக் கண்டு பழிப்பதும் இல்லை. ஏனெனில் எல்லோரும் உறவினர் என்பதால் வேற்றுமை எதுவும் பார்ப்பதில்லை.

எனவே சங்ககால தமிழன் எல்லோரையும் உறவினராகப் பேணி வாழ்வின் இன்ப துன்பங் களை அறிந்து சிறப்பான ஒரு வாழ்க்கை நடாத்தி னான் என்பதை புறநானூறு இலக்கியம் எடுத்துக் காட்டுகின்றது. இலக்கியங்கள் கூறும் வாழ்க்கை தொடர்பான விடயங்களை கிரகித்து வாழ்வில் உயர்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கல்வி கரையில... (சிறுகதை)

சாள்ஸ் ரூபிகா
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

அப்போதுதான் குறிகாட்டுவானில் இருந்து வந்த லோஞ்சில் இருந்து, இறங்கி, நெடுந்தீவின் கல்வேலிகள் சங்கமிக்கும் வீதி வழியே செல்வவதி நடந்துகொண்டிருந்தாள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வெளிவாரிப் பிரிவில் நடைபெறும் பரீட்சைக்கு முந்திய கருத்தமர்வில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணம் சென்றிருந்த அவள் வீட்டிற்கு மீண்டு கொண்டிருந்தாள். “என்ன செல்வவதி யாழ்ப்பாணம் போயிற்று வாறியா...” என்ற ரோசம்மாப் பாட்டியின் குரல்கேட்டு திரும்பியவள் “ஓமோம் படிக்க போயிற்று வாறன்...” “நல்ல படிப்புத்தான் பிள்ளை குட்டிகள் படிக்கிற வயசில நீயும் படி...” என்று சற்று ஏளனமாக கூறிய கிழவியின் வார்த்தைகள் நெஞ்சிலே தைக்க, மீண்டும் தன்னைத் தானே கேள்வி கேட்டபடி நடந்து கொண்டிருந்தாள் நினைவுகள் பின்னோக்கி நகர்ந்து கொண்டிருந்தன.

செல்வவதி சிறியவயதில் இருந்தே படிப்பில் ஆர்வங்கொண்ட மாணவி, ஆனால் வறுமை அவளுக்குச் சவாலாக இருந்தது. க.பொ.த. சாதாரண தரம் மட்டும் நெடுந்தீவிலேயே படித்தவள் நல்ல சித்தியோடு, யாழ்ப்பாணப் பாடசாலையொன்றில் படிப்பதற்கு அனுப்பப்பட்டாள். அங்கிருந்த விடுதிச் செலவு, படிப்புச் செலவு என நீண்டுகொண்டு சென்ற, செலவை தாங்கமுடியாத அவள் பெற்றோர் அவள் படிப்பை பாதியிலேயே நிறுத்த நிர்ப்பந்தித்தனர். மறுத்துப் போராடியவளை தாயின் சுகவீனம் தோல்வியடைய வைத்தது. க.பொ.த.உயர்தரத்தில் சித்திபெற்றுப் பல்கலைக்கழகம் செல்லவேண்டும் என்ற அவளது கனவு, தரைமட்டமாகியது. படிப்பைப் பாதியிலேயே நிறுத்திவிட்டு, தீவிலேயே தங்கிவிட்டாள். தாயின் சுகவீனம், தந்தையின் இறப்பு அவளை மேலும் மேலும் பாதித்தது. தன் தாயோடு கருவாடு விற்று வாழ்வை போக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டாள். அவ்வேளையில்தான் கடற்தொழில் செய்யும் கிருபைராஜ், அவளை திருமணம் செய்ய தானே பெண்கேட்டு வந்தான். துளியளவும் திருமணத்தினை விரும்பாத செல்வவதி தாயின் வற்புறுத்தலால், திருமணத்துக்கு இசைந்தாள்.

அதிகம் படித்திராத கிருபை ராஜ்சுக்கு செல்வவதியின் குண இயல்புகள் அதிகம் பிடித்திருந்தது. அவளுக்கு விருப்பமாக இருந்த க.பொ.த.உ.தரப் பரீட்சையை அவள் தனிப்பட்ட பரீட்சார்த்தியாக எடுப்பதற்கு எல்லாவகையிலும் ஊக்கம் கொடுத்து, அவள் பரீட்சையில், சித்தி பெறுவதற்கு உதவினான். அவர்களது கிராமத்து முன்பள்ளியில் அவள் ஒரு ஆசிரியையாக பணியாற்றவும், வைத்தான். ஆனால் காலம் நகர்ந்தது சந்திரன், செல்வி என்று இரண்டு பிள்ளைகள், பிறந்ததும் அவர்களை வளர்ப்பது என்ற பெரும் பிரயத்தனங்களின் மத்தியில், படிக்கவேண்டு மென்ற ஆர்வம் சற்றுக் குறைந்திருந்தாலும்... தான் ஒரு பட்டதாரி ஆக வேண்டும் என்ற ஆர்வம் அவளில் தணித்து விடவில்லை. தான் கற்ற கல்வியை தன் பிள்ளைகளுக்குத் தீரப்போதித்து அவர்களை வகுப்பில் முதலாம் பிள்ளைகளாக வரச்செய்தவள், கடந்த வருடம், புலமைப்பரிசில் பரீட்சையில் சந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவிலேயே அதிகூடிய புள்ளி பெறுவதற்கும் காரணமாக இருந்தாள். அதேவேளை, முன் பள்ளியிலும் தனது ஆற்றலை வெளிப்படுத்திக் கொண்டிருந்தாள். படிக்க விரும்பி வரும் மாணவி களுக்கும் அவள் வீட்டில் பாடம் சொல்லிக் கொடுத்தாள். இவை எவற்றுக்கும் தடை விதிக்காத கிருபை ராஜ்சின் ஆதரவு அவளுக்குப் பேருதவியாக இருந்தது. அத்தகைய சூழலில் வெளிவாரியாக தோற்றி ஒரு பட்டதாரியாக ஆக முடியும் என்ற அவளது சினேகிதி மதிவதனியின், கருத்தினால் தூண்டப் பெற்று மீண்டும் படிக்க வேணும் என்ற முனைப்போடு முயன்றவளை, கிருபைராஜ் தடுக்காது விட்டாலும், மனப்பூர்வமாக சம்மதம் வழங்க வில்லை. ஒவ்வொரு சனி ஞாயிறும், யாழ்ப்பாணம் வகுப்புகளுக்கு சென்று மீளுவது வீட்டில் பாரிய பிரச்சனைகளை தோற்றுவித்தது. பிள்ளைகளின் அலுவல்களை கவனிப்பது, கணவனுக்கு உதவுவது என்ப தெல்லாம் சவாலாக இருந்தாலும், செல்வவதி படிப்பைத் தொடர்ந்தாள். இரண்டு வருடங்கள், GAQ, B.A முதல் வருட பரீட்சைகளை பகிரத பிரயத் தனங்களின் மத்தியில் செய்து முடித்தவள் இறுதிப் பரீட்சை எடுப்பதற்காக வகுப்புக்களுக்கு சென்று வந்து கொண்டிருந்தான். இரண்டு வருடங்கள் சகித்துக்கொண்ட கிருபைராஜ்சின் பொறுமை எல்லை கடந்தது.

ஒவ்வொரு சனி ஞாயிறும் வந்தால் வீடு சச்சரவுக்களமாக மாறியது. 'நீ படிச்சது காணும் நிப்பாட்டு' எண்டு தான் அவன் அடிக்கடி கூறுவான். ஒவ்வொரு கிழமையும் அவள் யாழ்ப் பாணம் போய்வந்ததும் மனக்கசப்புகள் தான் மிஞ்சும்.

அன்றும் என்ன நடக்குமோ... என்ற ஆதங் கத்தோடு நடந்துகொண்டிருந்த செல்வவதி வீட்டு வாசலில் கால் வைத்ததும் சந்திரன் ஓடிவந்தான். "அம்மா வந்திட்டா" வாரத்தில் இரண்டு நாட்கள் தாயைப்பிரிந்திருப்பது அவர்களுக்கு வேப்பங் காயாய் இருக்கும் அவள் வந்ததும் துள்ளிக் குதித்துக் கொண்டு வந்து தங்கள் அன்பை வெளிப்படுத்து வர். தான் கொண்டுவந்து சொக்லற் றையை அவனிடம் கொடுத்துவிட்டு "எங்கையடா செல்வி"... என்றவளை அவனின் வார்த்தைகள் வதைத்தன. "அம்மா செல்விக்கு சரியான காய்ச்சல்... அப்பா சின்னாஸ்பத்திரிக்கு கொண்டு போறறார்" குற்ற உணர்வு மனதைப்பிடுங்க உடை மாற்றவும் மனமின்றி செல்வவதி வாசலி லேயே இருந்துவிட்டாள். தான் படிக்க நினைப்பது தவறா? என்ற கேள்வி அவளில் எழுந்து தணிந்தது குடும்ப கடமைகளில் தவறுகின்ற சூழல் அவளுக்கே அவளில் வெறுப்பினை தோற்று வித்தது. செல்விக்கு ஏதும் வருத்த மென்றால் தாயை விட்டுப் பிரியமாட்டாள். எப்போது அவளுக்கு அம்மா பக்கத்தில் இருக்க வேண்டும் இல்லாதுவிடில் எப்போதும் சிணுங்கிக் கொண் டிருப்பாள். மகளின் வேதனை மனதை வருட வாசலைப்பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு கிரிபை ராஜ்ஜின் சயிக்கிள் வருவது கண்ணுக்குத் தெரிந்தது... ஓடிச்சென்று "செல்வி என்னம்மா..." என்று செல்வியை சயிக்கிளில் இருந்து தூக்கிய வளை கிருபைராஜ் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. எந்தக்கதையும் பேச்சுமின்றி விறுக்கென்று சயிக் கிளை நிறுத்திவிட்டு வீட்டுக்குள் சென்றான்... "என்னவாமப்பா டொக்டர்" அவன் பதில் பேச வில்லை "அம்மா எனக்கு வைரஸ் காச்சலாம் எண்டு டொக்டர் சொன்னவர்" என்று செல்வி சொல்லிக்கொண்டே "அம்மா இனி யாழ்ப்பாணம் போகாதீங்க" என்று சிணுங்கியவாறு தாயில் சாய்ந்தாள்..." "அந்தப்பிள்ளை சொன்னது கேட்டதா" கடுமையான கிருபை ராஜ்சின் குரல் ஓங்கி ஒலித்தது. "கேக்குதப்பா... எனக்கென்ன ஒண்டும் விளங்கயில்லை யெண்டா நினைக் கிறியள். இன்னும் ஒருமாதம் தான் எல்லாம் முடிஞ்சிரும். அதுமட்டும் கொஞ்சம் பொறுங்கோ", "இந்த வயதில் உனக்கென்னடி படிப்பு வேண்டிக் கிடக்கு, புருசன் எப்பிடிப் போனா என்ன பிள்ளை எப்படிப்போனா என்ன... நீ படிச்சாக் காணும்" வார்த்தைகள் மேலும் வலுத்தன. "ஐயோ என்னை புரிஞ்சு கொள்ளுங்கோ.. ஒவ்வொரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிழமையும், லோஞ்சில போய், பிறகு பஸ்சில போய் அலைஞ்சு கொண்டு வந்து படிக்கிறது எனக்கு மட்டும் என்ன சந்தோசமோ" எதிர்த்துக் கதைத்தது பெறுக்காத கிருபை ராஜ்சின் கை வாழ்வில் முதல் தடவையாக செல்வவதியின் கன்னத்தினை பதம் பார்த்தது. "இருக்கில் செம்மையா இரு. இல்லையேல் எங்கையும் போ.." கோபத்தோடு அவளின் புத்தகங்களை தூக்கி வெளியில் எறிந்துவிட்டு விறு விறு என சயிக்கிளை எடுத்துக்கொண்டு வெளியேறினான்.

செல்வவதியால் தாங்க முடியவில்லை. இது வரை கைதொடாத அவன் கைகள் கன்னத்தில் பதிந்தது அவளால் ஜீரணிக்க முடிய வில்லை. ஆரம்பத்தில் இருந்து அவள் படிப்பதற்கு ஆதரவு வழங்கிய கிருபைராஜ் அவ்வளவு மோச மாக என்றும் நடந்ததில்லை.. பிள்ளையின் சுகவீனம், குடும்ப பொறுப்பு எல்லாம் அவனை எல்லை கடக்க வைத்துவிட்டன. செல்வவதிக்கு தன்னி லேயே எழுந்த வெறுப்பை அடக்கிக் கொண்டு இனிப் படிப்பதில்லை என்று உறுதியான முடிவோடு கன்னங்களில் வழிந்த கண்ணீருடன் செல்வியை அணைத்தபடி உறங்கிப் போனாள்.

அதுவரை செல்வவதியை அடித்திராத கிருபைராஜ்சுக்கு அன்று தானா அப்படி நடந்தான் என்று சந்தேகம் எழுந்தது குற்ற உணர்வும், கோபமும் மனதை வருத்த சயிக்கிளை ஊன்றி உழக்கியபடி சென்ற கிருபைராஜ்சினை, சம்மாட்டியார் சேவியரின் குரல் வழி மறித்தது. "கிருபை உன்னத்தான் தேடிவந்தனான். இந்தா இதைக்கொண்டுபோய் உன்ர மனிசியிட்ட குடு" என்ற வார்த்தையின் அர்த்தம்புரியாது அவர் நீட்டிய, பையைப் பெற்றவாறு "என்ன" என்ற கேள்வியை முகத்தாற் கேட்டபடி அவரைப் பார்த் தான். "என்ர மகள் ஏ எல்லில திறி ஏ எடுத்திருக் கிறாள். அதுக்கு காரணம் உன்ர மனிசிதான். அவள்தான் படிப்பிச்சவள். ரியூசனுக்கு யாழ்ப் பாணம் போக ஏலாத சூழலில உன்ர மனிசியின்ர கெட்டித்தனத்தால அவள் வெண்டிட்டாள். சும்மா சொல்லப்படாது கிருபை உன்ரமனிசி எங்கட நெடுந்தீவுக்கு கிடைச்ச ஒரு வரம்" சம்மாட்டியார் சொல்லிக்கொண்டு நகரவும் கிருபை ராஜ்சின் சிரசை யாரோ, சம்மட்டி கொண்டு அடிப்பது போன் றிருந்தது. பாசலோடு சயிக்கிளை திருப்பியவன் வீட்டில் கால்வைத்ததும் தன்னால் எறியப்பட்டு முற்றத்தில் கிடந்த புத்தகங்கள் மேலும் அவனை கேள்வி கேட்டதுபோல இருக்க, ஒவ்வொன்றாய் பொறுக்கி இருந்த இடத்திலே வைத்துவிட்டு கசிந்த கண்களோடு தூங்கிப் போயிந்த அவளின் கன்னங்களை வருடினான். திடுக்குற்று எழுந்த வள் "நான் இனிப் படிக்கப் போகையில்ல அப்பா" என்று அவன் கையைப்பிடித்தபடி அழுதாள்... "இல்லை செல்வவதி நீ படிக்க போகவேணும். நீ பட்டதாரி ஆக வேணும்... நான் ஏதோ கோபத்தில..." என்று கண் கலங்கியவனை ஆச்சரியத்தோடு நோக்கினாள். சம்மாட்டியார் கொடுத்த பாசலை கொடுத்து அவர் சொன்ன வார்த்தைகளை பகிர்ந்தபோது செல்வவதியின் ஆனந்தத்துக்கு அளவில்லை... அவள் இலட்சியம் நிறைவேறும் என்ற நம்பிக்கை கண்களில் மின்ன... கிருபை ராஜ்சின் கைகளை பற்றி கன்னத்தில் ஒத்திக்கொண்டாள்...

(யாவும் கற்பனை)

> தமிழர்தம் இலக்கியங்களையும் பண்பாட்டையும் வரலாற்றையும் கலைகளையும் தாம்குடியேறிய நாடுகளின் மொழிகள் வாயிலாகப் புலப்படுத்தி இருந்தால் இன்று நாம் சில கீழ்த்திசை நாடுகளில் விரும்பப்படாத குடிகளாக உரிமையற்று வாழவேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது.
>
> – தனிநாயகம் அடிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கம்பராமாயணத்தில் கைகேயி

ஜெ.யுரேக்கா
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

கம்பராமாயணத்தில் முக்கிய பாத்திரமாக இருப்பவள் கைகேயி ஆவாள். இவ்விலக்கிய மானது இராமனின் பெருமையை எடுத்துக் கூறுகின்றது. மகாபாரதமோ, தூது போனவ னாகிய கண்ணனின் ஏற்றத்தைக் கூறுகின்றது. கம்பராமாயணமானது காலத்தால் மகாபாரதத்தை விட முந்தியதாகும். ஆகையால் இதனை ஆதி காவியம் எனவும் அழைப்பர். வடமொழியில் வான்மீகிப் புலவரால் இயற்றப்பட்ட இக்காவியம் இந்நாட்டில் மட்டுமன்றி கீழ்த்திசை நாடுகளிலும் பரவி இருந்தது. இது அறிஞர்களால் போற்றப் பெறும் பெருமை வாய்ந்த நூலாகவும் விளங்கு கின்றது. இந்நூலை தமிழில் எழுதியவர் கவிச் சக்கரவர்த்தி கம்பர் ஆவார். இவர் திருவழுந்தூரில் வசித்தவர். 12ம் நூற்றாண்டைச் சேர்ந்தவர். சடையப்ப வள்ளலின் ஆதரவின் கீழ் வாழ்ந்தவர். இக் காவியத்தில் கைகேயியைப் பற்றி நோக்கும் போது கைகேயி ஆரம்பத்தில் நல்லதொரு அடக்க மான பெண்ணாக தோன்றி பின் கூனியின் போதனையால் மனம் மாறுவதையும் அவதானிக்க கூடியதாக இருக்கின்றது.

கம்பராமாயணத்தில் அமைந்த முதல் திருப்பமே கூனி தோன்றியது தான். இராவண வதத்திற்குத் தேவர்களால் அனுப்பி வைக்கப்பட்ட தேவரகசியத்தை கொண்டு கம்பர் "கூனி தோன்றி னாள்" என்றார். மந்தரை செய்யும் சூழ்ச்சியால் இராமபிரான் நாட்டை விட்டுக் காடு அடைந்து இராவணனை வதம் செய்வான். ஆகையால் கூனி தோன்றியமைக்கு இராவணன் இழைத்த தீமையை காரணமாகக் கூறலாம்.

கம்பராமாயணத்தில் தசரதச் சக்கரவர்த்திக்கு மூன்று மனைவிமார் இருந்தனர். அவர்களுள் ஒருவர் தான் கைகேயி. அவளது மகன் தான் பரதன். ஆனால் கைகேயி பரதனைவிட இராமன் மீது அதிகமான பாசம் கொண்டு இருந்தாள். அதே போலவே இராமனும் கைகேயி மீது அதிக பாசம் கொண்டு கீழ்ப்படிவுள்ள மகனாக இருந்தான். கைகேயி இராமனை தன் உயிரிலும் மேலாக நேசித்தாள். இதன் மூலம் அவர்களுக்கு இடையி லான உறவு ஒரு அன்பின் உறவாகவே இருந்தது. இவ்வாறு இருந்துவந்த சமயத்தில் கூனியின் செயற்பாட்டால் கைகேயின் மனம் மாறுபடுகின் றது. கூனியானவள் பல உத்திகளை கையாண்டு கைகேயியை தசரத மன்னனிடம் முதலில் தருவதாக கூறிய இரண்டு வரங்களை தரும்படி கேட்டு பரதனை நாடாளவும், இராமனை காடாளவும் சொல்லுமாறு கூறுவதை அவதானிக்க முடிகின்றது.

கூனியின் போதனையின் பின் கைகேயி சிறந்த மலர்களை பரப்பிய கட்டிலிலிருந்து இறங்கி, இடைவிடாது மழையைப் பொழிகின்ற கார்மேகம் போன்ற நீண்ட கூந்தலை விரித்து விட்டு அதில் சொருகியிருந்த மலர் மாலையை பிய்த்து எறிந்தாள். ஒளிபொருந்திய நெற்றியின் கண் உள்ள பெறுதற் கரிய திலகத்தையும் அழித்தாள். குற்றமில்லாத மணிகள் பதித்துள்ள மற்றைய அணிகலன்களை யும் தனித்தனியாக அறுத்துச் சிந்தி விட்டு கண் களுள் பூசியிருக்கும் மையைக் கரைக்கும் அளவு க்கு அழுதுகொண்டு நிலத்தின் மேல் விழுந்து புரண்டாள். இவ்வாறு கைகேயின் செயற்பாடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னது அயோத்தி நகரை வந்தடைந்த மூதேவியின் செயற்பாடு போல் இருந்தது என்கிறார் கம்பர்.

தசரத சக்கரவர்த்தி மிகுந்த சந்தோசத்துடன் இராமனின் மூடிசூட்டு விழாச் சம்பவத்தை முதலில் கைகேயியிடம் தான் தெரிவிக்க வேண்டும். என்ற ஆவலில் அவள் மாளிகை நோக்கி வந்தார். அங்கு சென்று பார்த்த தசரதன் கைகேயியின் நிலையைக் கண்டு "உனக்கு என்ன நடந்தது?" என வினவினான்? அவளைத் தழுவிப் பற்றிய நீண்ட கைகளைத் தள்ளிக் கொண்டு மின்னற் கொடி அசைவது போல அசைந்து வெறு நிலத்தில் வீழ்ந்து, ஒன்றுங் கூறாமல் பெருமூச்சு விட்டாள் கைகேயி. காதளவு நீண்ட கண்களில் தங்கிய கண்ணீர்த் துளிகளாகிய முத்துக்கள் அவள் மேல் அணிந்த மாலை போல கோவைப் பட்டு நிறக, "என்னிடத்திலும் உமக்கு கருணை இருக்கு மானால் பண்டு தந்தவற்றை இப்பொழுது விருப்பத்துடன் கொடுப்பாயாக" என்று கேட்டாள். கைகேயியின் சூழ்ச்சியினை உணராத தசரதன் "என்ன வேண்டும் என்றாலும் கேள் தருவேன்" என்றார். பெண்களிலே கொடியவளான கைகேயி ஈவிரக்கம், அன்பு போன்ற பண்புகள் அல்லாதவ ளாகத் தசரதனை நோக்கி "முன்பு தருவதாக கூறிய இரு வரங்களையும் இப்போதே தர வேண்டும்" என்றாள்.

நல்ல பாம்பு போலக் கொடுமை பொருந்திய கைகேயி, தன் நாவினால் "நீர் கூறிய இரண்டு வரங்களில் ஒன்று என்மைந்தனாகிய பரதன் அரசு புரிவதும் மற்றொன்றினால் சீதையின் கணவனாகிய இராமன் நகரை நீங்கிப் போய்க் காட்டை ஆள்வது" என்று கூறிவிட்டு தீயவைகள் எல்லாவற்றிலும் மிக்க தீயவளாகிய கைகேயி நின்றாள். இதனையே புலவர். "ஏய வரங்களிரண்டிலொன்று என்ற பாடலடி மூலம் புலப்படுத்துகின்றார். கைகேயி கூறிய சொற்களை கேட்டு தசரதச் சக்கரவர்த்தி இடிந்து போய் நிலத்தில் வீழ்ந்து கிடந்தான். அஞ்சா நெஞ்சங் கொண்ட கைகேயி, தன் தலைவனுடைய அல்லலைக் கண்டு மனம் நெகிழ்ந்து இரக்கம் காட்டவில்லை. உலகோர் பழிமொழி பகர் வார்களே என்றெண்ணி நாணமும் அடைந்தி லள் என்று அவளின் நிலைமையை கூற கேட் கின்ற எமக்கே நாணமாக இருக்கின்றது. இதனாலே தான் பெண்கள் வஞ்சனையின் வடிவமே எனக் கருதிய சான்றோர்கள் பண்டு தொட்டுப் பெண்களை பற்றுக்கேடாகக் கருதிவதில்லை.

வெற்றிவேல் பொருந்திய தசரத சக்கரவர்த்தி கைகேயிடம் இரத்தலை மேற்கொள்ளுகின்றார். "உன்னை இவ்வாறு பேச யார் மாற்றினார்கள்" என வினாவினான். கைகேயி, "என்னுள்ளம் திகைப்படைந்ததும் இல்லை தீயோர் எவரும் எனக் கொன்றும் கூறவும் இல்லை முன் நீ எனக்கு அளித்த வரங்களை தா என்றாள்". "என் கண் களையும் ஏன் உயிரை கேட்டாலும் இப்பொழுதே தருவேன் இரக்கம் வாய்ந்த பெண்ணே" என்று தசரதன் கூற கைகேயிவிடாப்பிடியாக வரத்தை தரவேண்டும் எனக் கேட்டாள். கோபம் கொண்ட தசரதன் நச்சு தன்மை வாய்ந்த நெருப்பே கைகேயி, பெண் வடிவம் அன்று என்று நாண மெய்தி, மன்னன் கைகேயிடம் மேலும் இரந்தான். விரைந்து பரவுகின்ற தீயைபோல் சுழன்று தணியாமல் நின்று உயிரை உண்ணும் புதிய தீயை போன்ற கைகேயி, "வில்லையுடைய வேந்தே உண்மையை காக்கும் பொருட்டு சிபிச்சக்கரவர்த்தி தன்னுடைய உடலை அரிந்து கொடுத்தான். அவன் குலத்தில் தோன்றிய நீ, முன்னர் வரத்தை வழங்கிவிட்டு பின் வருந்துவதி னால் யாது பயன்?" என்றாள். மிக்க வருத்தத்து டன் கொடுமையான பெண்ணான கைகேயிடம் அவள் கேட்டவரத்தை கொடுத்துவிட்டு தசரதன் செயல் மறந்து மயங்கிக் கிடந்தான். ஆனால் இவற்றை பற்றி ஒன்றும் சிந்தியாது கைகேயி நிம்மதியாகத் துயின்றாள்.

இவ்வாறாகக் கைகேயி என்னும் பாத்திரம் சித்திரிக்கப்படுகின்றது. கைகேயி என்னும் பாத்திரத்தின் மூலமே, கம்பர் இராமன் மூலம் இராவண வதத்தினை நிகழ்த்தி அதர்மம், தர்மம் அழிந்து நிலைக்கும் என்பதைக் காட்டுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரம்பரிய கலைகளின் இருப்பும் நவீனத்துவத்தின் பங்களிப்பும்

வி.கோபிகா
கலைப்பிரிவு உயர்தரம் (2015)



பாரம்பரிய கலைகள் என்று கூறுகின்ற வகையில் அதில் பலவற்றைக் குறிப்பிடலாம். உதாரணமாக கூத்து, பரதம், காவடி, நடனம், நாடகம், இசை, வில்லிசை போன்ற பண்டைத் தமிழ்க் கலைகள் இன்றும் வழக்கிலே இருந்து தான் வருகின்றன. அவ்வாறே அக்கலைகள் இன்று நவீன உலகில் சற்று மாற்றம் கண்டுள்ளன எனலாம். குறிப்பாக கூற வேண்டுமானால் பாரம்பரிய கலைகளின் இருப்பிற்கு நவீனத்துவம் சாதகமாகவே அமைந்து காணப்படுகின்றது. ஆனாலும் பாதகமும் இருக்கத்தான் செய்கிறது.

குறிப்பாக இன்று நவீன மயப்படுத்தப்பட்ட உலகில் ரா.பி.சேதுப்பிள்ளை அவர்களின் நூல்களைப் படிக்கின்ற பொழுது அவர் கலை என்பதற்கு ஒரு வரைவிலக்கணம் வைக்கின்றார். “தன்னிகரில்லாத மனிதத்திறனின் வெளிப்பாடு கலை” என்கின்றார். அதுமட்டுமன்றி இவர் கலைகளை இரண்டு வகைப்படுத்துகின்றார். ஒன்று நுண்கலை என்றும் மற்றையது பயன்பாட்டுக் கலை எனவும் பாகுபடுத்துகிறார்.

இதில் நுண்கலை என்பது பார்ப்பதற்கு அழகாகவும் கவர்ச்சிகரமாகவும் கண்களைக் கவரக்கூடியதுமான அனைத்தையும் நுண்கலை என்கின்றார். பயன்பாட்டுக்கலை என்பது மனிதனின் தேவைகளுக்காகப் பயன்படுத்தப்படுகின்ற அனைத்தையும் பயன்பாட்டுக் கலை என்கின்றார். அது மட்டுமன்றி பலரும் இக்கலைகளுக்கு வரைவிலக்கணம் வைத்துத்தான் இருக்கின்றார்கள். அந்தவகையில் கலை என்பது வெறும் பொழுதுபோக்கு மட்டுமன்றி மனித சமுதாயத்தினை வழி நடத்தும், செழுமைப்படுத்தும் காரணியாகவும் அமைந்திருக்கின்றது. எமது பாரம்பரிய கலைகள் அந்தவகையில் மிகவும் முக்கியமானவை. அவைகளின் இருப்பு பேணப்படுவதும் அவசியமானது. நவீனத்துவம் அதனை மேலும் மேம்படுத்த வேண்டுமே ஒழிய அழித்து விடக்கூடாது.

கலைகளின் ஒன்றான நாடகத்தை முதற்கண் நிறுத்திப் பார்த்தால் முன்பு வட்டக்களரிகளில் ஆடப்பட்ட கூத்துக்கள், இன்று படச்சட்ட மேடைக்கு கொண்டு வரப்பட்டு விட்டன. அங்கு வெளிச்சத்திற்காக வட்டக்களரியைச் சுற்றி எரிக்கப்படும் பந்தங்களுக்குப் பதிலாக இன்று பல வாண ஒளிகள் பயன்படுத்தப்படுகின்றன. அதுவே இன்று நாடகத்தின் ஒரு மோடிப்பண்பை உணர்த்துகின்றது. பண்டைய பாரம்பரிய நாடகங்கள் எல்லாம் வெள்ளைத் திரைகளிலேயே அதிகமாகக் காண்பித்தனர். ஆனால் இன்று பல்வேறுபட்ட வர்ணங்களையும் மேடையில் சமர்ப்பிக்கிறார்கள். இதனூடாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேடையை அழகான காட்சிவெளியாக மாற்றினார்கள் மேலும் பார்ப்போரையும் மேடையையும் ஒரு ஒன்றிணைப்புக்குள் ஆக்கினார்கள்.

அடுத்து ஒப்பனையை எடுத்துக்கொண்டால் ஒப்பனை என்று கூறுகின்ற பொழுது முன்பு காத்தவராயன், வீரபாண்டிய கட்டபொம்மன் மயானகாண்டம் போன்ற பல கூத்து இசை நாடகங்களே எம் கண்முன் வருகின்றன. இந் நாடகங்களின் ஒப்பனை வடிவமானது மெரு கூட்டல் தன்மை வாய்ந்ததாகும். அந்தவகையில் பண்டைய நடிகர்களால் போடப்பட்ட ஒப்பனைகள் குறைந்தது நான்கு நாட்களாவது முகத்தில் இருக்கத் தான் செய்கின்றன. ஆனால் நவீனத்துவத்தில் இன்று போடப்பட்ட ஒப்பனைகள் உடனே கலைந்துவிடக்கூடியவையாக இருக்கின்றன.

விசேடமாக அன்று வாத்தியங்கள் இசைப்பதற்கு பல மனிதர்கள் மற்றும் நடிகர்கள் தேவைப் பட்டார்கள் ஆனால் இன்று எலைக்ரோனிக் ரீதியாக அனைத்தும் அமைந்துவிட்டது. நேர வேறுபாட்டிற்கேற்ப அது இசைக்க ஆரம்பித்து விடும் மேலும் அரங்கக் காட்சிகளை எடுத்துப் பார்த்தால் அதில் கைகளால் தீட்டப்பட்ட, வரை படங்களையே காட்சித் திரைகளாக முன்பு பயன் படுத்தினர். ஆனால் இந்த நவீனத்துவம் வந்து எத்துணை எத்துணை மாற்றங்கள் நிகழ்ந்துள் என. இன்று (3D) முப்பரிமாணத்தை காண்பிக்கக் கூடியவகையில் அவை யாவும் அமைந்து விட்டன.

இதனூடாக நாடகத்தின் சூழல், நேரம், காட்சி, காலம் போன்றவற்றைப் பார்ப்போரும் புரிந்துகொள்ளக் கூடியதாக இருக்கும் அவ்வாறே நடிகனின் நடிப்பிற்கும் இது கைகொடுப்பதால் நாடகத்தை இலகுவில் வெற்றிபெறச் செய்கிறது. தொடர்ந்து பாரம்பரிய கலைகளின் இருப்பிற்கு நவீனத்துவம் பல சாதகங்களைக் கொண்டிருந்தாலும் சில பாதகங்களைக் கொண்டிருக்கத்தான் செய்கின்றன. அப் பாதங்களை நோக்கினால் நவீன காலத்தில் கலைகள் என்று கூறுகின்ற வகையில் அதில் ஆர்வம் காட்டுவதற்கும் அதில் ஈடுபடுவதற்கும் அதனைப் பாா்ப்பதற்கும் இன்று மக்கள் அருகியே காணப்படுகின்றார்கள். காரணம் வீட்டிலிருந்தபடியே தொலைக்காட்சி நாடகங்களையும் வேறு தொலைத்தொடர் நிகழ்வுகளையும் ரசிப்பதால் இன்று பாரம்பரிய கலைகள் அழிவதற்குக்கூட வாய்ப்புக்கள் உள்ளது. நவீன கலைகள் நவீன தொழில் நுட்பங்களுடன் இணைந்து எமக்குள் நுழைந்து விடுவதால் பாரம்பரியக் கலைகள் இருப்பிழந்து போகின்றன. அந்தவகையில் இப் பாரம்பரிய கலைகள் வளர்ச்சியடைந்த நாடுகளில் வளர்ந்து வருகின்றனவா என்று பார்க்கின்ற பொழுது இல்லை என்றே கூறிவிட வேண்டும்.

நாகரீகத்தின் வளர்ச்சி அங்கெல்லாம் அவற்றினை அருகச் செய்துவிட்டன. ஆனால் யப்பான், சீனா போன்ற கிழக்காசிய நாடுகளில் அவை நவீனத்துவத்துடன் இணைக்கப்பட்டு வளர்க்கப் பட்டு வருகின்றன. அந்தவகையிலான முயற்சிகளே எமது நாட்டிலும் மேற்கொள்ளப்பட வேண்டும். இன்று ஒலிப்பதிவுதுறை, ஒளிப்பதிவு துறை, கணனித்துறை போன்ற பலவும் அதிக வளர்ச்சியை அடைந்துள்ளன. இவற்றுக்கூடாக பாரம்பரிய கலைகள் மேம்படுத்தப்பட வேண்டும்.

நவீனத்துவத்தால் கலைகளின் இருப்பிற்கு பாதகங்கள் இருந்தாலும் சாதகங்களே அதிகம் அவை ஒரு கலைக்குக் கைகொடுக்கின்றது. என்பதே உண்மையாகும். எனவே பாரம்பரிய கலைகளின் இருப்பிற்கு நவீனத்தும் பெரிதும் பங்காற்றக் கூடியது. என்பதனை உணர்வோம். அதற்கூடாக எமது மரபுக்கலைகளின் இருப்புக்கு உதவுவோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைகளும் தந்தையர்களும்

அ.அலோஸ்ரிக்கா
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

| | |
|---|---|
| சாரணர் இயக்கம் | - பேடன் பவல் பிரபு |
| கணக்கியல் | - லூக்கா பெசியோலி |
| கணிதம், சோதனை அறிவியல் | - ஆக்கி மிடில் |
| பௌதீகம், இயற்பியல் | - வோர்ட் லூதர் போர்ட் (பிரிட்டன்) |
| சமூகவியல் | - மக்ஸ்வெபர், ஹொம்ரே |
| அறிவியல் | - கலிலியோ |
| மரபியல்/மரபனு அறிவியல் | - கிரகர் ஜோகன் மெண்டல்(செக்கோஸ்லாவியா) |
| நவீன மரபியல் | - டீ.எச்.மார்கன் |
| உயிரியல், அரசியல், விலங்கியல் | - அரிஸ்டோட்டில் |
| உயர் இரசாயனவியல் | - பிரெட்ரிக் ஜி.கொப்கின்ஸ் |
| நவீன நாடகவியல் | - ஷேக்ஸ்பியர் |
| நோய்த் தடுப்பியல் | - எட்வேர்ட் ஜென்னர் |
| வரலாறு | - ஹெரடோடஸ் (கிறீஸ்) |
| தமிழ் தட்டச்சு | - முத்தையா |
| ஆங்கில இலக்கியம் | - சாசர் |
| பரிசோதனைமுறை விஞ்ஞானம் | - பிரான்சிஸ் பேக்கன் |
| மின்சாரம் | - மைக்கல் பரடே |
| குடித்தொகை கல்வி | - ஜோன்கிரான்ட் |
| பிறெய்ல் எழுத்துமுறை | - லூயி பிறெய்லி |
| உயிரியல், அரசியல், சமூகவியல் விலங்கியல் | - அரிஸ்டோட்டில் |
| கம்யூனிஸம் | - கார்ல்மாக்ஸ் |
| நவீன ஓவியங்கள் | - பிக்காசோ |
| கேத்திர கணிதம் | - யூக்கிளிஸ்ட் |
| ஆயுள்வேத மருத்துவம் | - சரகா |
| ஹோமியோபதி மருத்துவம் | - சாமுவேல் ஹனிமன் |
| பிறப்புரிமையியல் | - கிரகர் மெண்டல் |
| நவீன பொருளாதாரம் பொதுவுடமை பொருளாதாரம் | - அடம்சிமித் |
| நடமாடும் தொலைபேசி | - மார்ட்டின் ஹோவர் |
| புகையிரத போக்குவரத்து | - ஜோஜ் ஸ்ரீவன்ஸன் (இங்கிலாந்து) |
| கூட்டுறவு இயக்கம் | - றொபேட் ஓவன் |
| சார்புக் கொள்கை | - ஜன்ஸ் டைன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| இரசாயனம் | - | ஃபனரட்ரிச் ஒவர் |
| கார்ட்டூன் | - | ஜோசப் புலிட்சர் |
| நோய்த் தடுப்பியல் | - | எட்வேர்ட் ஜென்னர் |
| தமிழ் இயக்கம் | - | மறை மலை அடிகள் |
| நவீன மேலாண்மை | - | பீட்டர் ட்ரக்கூர் |
| நவீன தடய அறிவியல் | - | சேர் எட்வேர்ட் ஹென்றி |
| நவீன மலேஷியா | - | ஜோஸிப் புறோஸ்ரிட்டோ |
| மலேஷிய சுதந்திரம் | - | அப்துல் ரகுமான் துங்கு |
| வான சாஸ்திரம், நவீன வானவியல் | - | நிகோலஸ் கொபர் நிகஸ் |
| இந்திய சினிமா, திரைப்படம் | - | தாதாசாகேப் பால்கே |
| கிருமியில்லா அறுவை சிகிச்சை | - | ஜோசப் லிஸ்டர் |
| இந்திய அணு விஞ்ஞானம் | - | ஹோமி ஜெஹாங்கீர்பாபா |
| அமெரிக்க குடியரவு | - | ஜோஜ் வாஷிங்டன் |
| தொழிற்புரட்சி | - | ரிச்சட் ஆக்ரைட் |
| கர்நாடக இசை | - | புரந்த தாஸர் |
| நவீன வேதியல் | - | லாவோசியர் |
| மின் அஞ்சல் | - | ரேடோர்மலின் சன் |
| பாசிச கொள்கை | - | முசோலினி |
| தாவர இயக்கவியல் | - | ஸ்டீபன் ஹேர்ல்ஸ் |
| தாவரவியல் | - | தியோ பரட்டன் |
| கனடா | - | ஜக்கியூ காட்ரியர் |
| அவுஸ்திரேலியா | - | சேர் எட்மன்ட் பாட்ரன் |
| இந்திய விண்வெளி | - | விக்ரம் சாரபாய் |
| அணு விஞ்ஞானம் | - | ஏர்னஸ்ட் ருதர் போட் |
| பக்ரீரியா | - | லூயி பாஸ்டர் |
| அச்சுக்கலை | - | கூற்றன் பேர்க் |
| வெள்ளைப்பிரம்பு | - | ஜின்டிலேக் |
| நவீன ரொக்கட் | - | றொபேட்.எச்.கேடார்ட் |
| நவீன பத்திரிகையியல் | - | பனியல் டெஃபோ |
| நவீன சமூக நாடகம் | - | ஹென்றிக் இப்சன் |
| புதுக்கவிதை | - | ந.பிச்சமூர்த்தி |
| தமிழ் உரைநடை | - | வீரமா முனிவர் |
| பாகிஸ்தான் | - | முகம்மது அல் ஜின்னா |
| கிரிக்கட் | - | W.G.க்ரேஸ் |
| அனிமேஷன் படம் | - | வோல்ட் டீஸ்னி |
| ஆங்கில அச்சுக்கலை | - | வில்லியம் காக்ஸ்டன் |
| நவீன பொருளாதாரம் | - | அல்பிரட் மார்ஷல் |
| ஜியோமெட்ரி | - | யூக்லிட் |
| நுகர்வோர் இயக்கம் | - | சால்ப் நாடார் |
| தல சுய ஆட்சி | - | ரிப்பன் பிரபு |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செந்தமிழ்த் தாய்

விமலச்சந்திரன் சர்மினி
கலைப்பிரிவு உயர்தரம் (2016)

"தமிழுக்கு அமுதென்று பேர் – அந்தத்
தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்
தமிழ் எங்கள் இளமைக்குப் பால்
இன்பத் தமிழ் நல்ல புகழ் மிக்க புலவர்க்கு வேல்"
- பாரதிதாசன் -

தமிழின் இளமையை அனுபவித்து உணர்ந்த கவிஞர்கள் பலர். பாரதி, பாரதி தாசன், சோமசுந்தரப்புலவர் போன்ற பலர் தமிழின் இளமையையும், சிறப்பையும் ஆழ்ந்து அனுபவித்து, எமக்கு தாம் பெற்ற இன்பத்தை எடுத்துரைத்த வகையினை விளக்குவதே இக் கட்டுரையின் நோக்கமாகும். செம்மொழிகளில் ஒன்றாகிய எம்மொழி பற்றி மகாகவி சுப்பிர மணிய பாரதி எடுத்தியம்பியவற்றுள் சில அடி களை எடுத்து நோக்குவோம். பல மொழிகளில் பாண்டித்தியம் உடையவராகிய பாரதி

"யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்
இனிதான மொழியெங்கும் காணோம்"

எனக் கூறுவது உலக மொழிகள் யாவற்றுள்ளும் தமிழ்மொழியின் சிறப்பையே எடுத்துக்காட்டுகிறது. பல்வேறு இலக்கியங்களையும் கற்றுணர்ந்த பாரதி "யாமறிந்த புலவரிலே கம்பனைப் போல் வள்ளுவர் போல், இளங்கோவைப்போல் பூமி தனில் யாங்கணுமே பிறந்ததில்லை" என உறுதி யாக கூறுகிறார். தமிழ் அணங்குக்கு கிடைத்த அரிய கவிஞர்களையும் அவர்கள் வாயிலாக தமிழுக்கு கிடைத்த தமிழ் இலக்கியங்களும் பாரதி வாயிலாக சிறப்பிக்கப்பட்டிருப்பதையே இப்பாடல் எடுத்துக்காட்டுகிறது.

தமிழின் சிறப்பினை மட்டும் கூறுவதோடு நின்றுவிடாது இவ்வாறான தமிழுக்கு நாம் ஆற்ற வேண்டிய பல பணிகளையும் எடுத்தியம்புகிறார் பாரதி.

"நாமமது தமிழரெனக் கொண்டிங்கு
வாழ்ந்திடுதல் நன்றோ சொல்வீர்
தேமதுரத் தமிழோசை உலகமெங்கும்
பரவும் வகை செய்தல் வேண்டும்"

அத்தோடு "சேமமுற வேண்டுமெனில் தெருவில் தமிழ் முழக்கம் செழிக்கச் செய்வீர்" எனவும் வேண்டுகின்றார். தமிழுக்கு நாம் செய்யும் முக்கிய கடனாக அவர் வேண்டுவது "பிற நாட்டு நல்லறிஞர் சாத்திரங்கள் தமிழில் மொழித் பெயர்த்தல் வேண்டும். இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ்மொழியில் இயற்றல் வேண்டும் என்பதாகும். இவ்வாறு பாரதி தமிழுணர்ந்து தரமுரைத்துள்ளார். அவ்வாறே நவாலியூர் சோம சுந்தரப்புலவர் தமிழின் சிறப்புப் பற்றியும் தமிழிற்கு நாம் ஆற்றவேண்டுவன பற்றியும் எடுத்தியம்பியவற்றை சற்றே நோக்குவோம். "முச்சங்கத் தரியனை ஏறி – மன்னர் முடிதொட்ட மூவரும் அடிதொட்டுப்போற்ற..." என தமிழ் மக்களை வினவுகிறார். தமிழன்னையின் சிறப்பினைக் கூறிப் போந்த புலவர் தமிழின் இனிமையையும் எமக்கு நன்கு புலப்படுத்த விரும்புகிறார் போலும்

"இன்னமுதோ தெளி தேனோ – என
எம் செவிக் கினிக்கின்ற மொழியது தானோ...
சிந்தையிற் தேனமு தூறி – நாவில்
தித்தித்துத் தித்தித்துச் செவிவழியேறி
வந்து கனிந்திருள் கீறி – எம்மை
வாழ்விக்கும் மொழியினை மறப்பதோ மீறி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தமிழின் இனிமையைப் பல்வேறு விதமாக எடுத்துக்காட்டியுள்ள விதம் நயம்மிக்கதாகும். கவிஞர் தமக்கு இனிய பொருட்களை எடுத்துக்கூறி அவை யாவற்றிலும் மேலானதாக தமிழ்மொழியைக் குறிப்பிடுவதிலிருந்து தமிழின் இனிமை சொல்லாமல் விளங்குமன்றோ?

"கனியிடை ஏறிய சுளையும் – முற்றல்
கழையிடை ஏறிய சாறும்
பனிமலர் ஏறிய தேனும் – காய்ச்சும்
பாகிடை ஏறிய சுவையும்
தனி பசு பொழியும் பாலும் – தென்னை
நல்கிய குளிரின நீரும் இனியன"

என்பதுடன் தமிழை "என்னுயிர்" என கவிஞர் குறிப்பிட்டுள்ளமை தமிழ் மீது அவர் கொண்டுள்ள பற்றையே எடுத்துக்காட்டுகிறது. மேலும் உலகிலுள்ள இனிய ஓசைகள், இசைக்கருவிகள் யாவற்றினதும் இனிமையுடன் தமிழை ஒப்பிட்டுக் காட்டி தமிழே மேலான இனிமையையுடையது எனக் கூறுகிறார்.

"பொழிலிடை வண்டின் ஒலியும்
ஓடைப் புனலிடை வாய்க்கும் கலியும்
குழலிடை வாய்க்கும் இசையும் வீணை
கொட்டிடும் அமுதப் பண்ணும்
குழவிகள் மழலைகள் பேச்சும் – பெண்கள்
கொஞ்சிடும் இதழின் வாய்ப்பும்
விழைகுவனேனும், தமிழும் நானும்
மெய்யாய் உடலுயிர் கண்டீர்!

மிகவும் நெருங்கிய உறவுகளை விட தமிழ் மொழி தனக்கு நெருக்கமானது என எடுத்துக் காட்டுகிறார்.

"......மறவாத் தந்தை
குயில்போற் பேசிடும் மனையாள் – அன்பைக்
கொட்டிவளர்க்கும் பிள்ளை
அயலவராகும் வண்ணம் – தமிழ் என்
அறிவினில் உறைதல் கண்டீர்

உலகிலுள்ள இயற்கைக் காட்சிகளை எல்லாம் எடுத்துக்காட்டி இவ் இயற்கை தரும் இன்பத்திலும் மேலானதாக தமிழினிமையை எடுத்துக்காட்டும் விதம் இன்புறத்தக்கது.

"நீலச் சுடர் மணி வானம் – ஆங்கே
நிறையக் குளிர் வெண்ணிலவாம்,
காலைப் பிரிதியின் உதயம் – ஆங்கே
கடல்மேல் எல்லாம் ஒளியாம்
மாலைச் சுடரில் மூழ்கும் – நல்ல
மலைகளின் இன்பக்காட்சி
மேலென எழுதும் கவிஞர் தமிழின்
விந்தையை எழுதத் தரமோ?"

இனிய சுவை நிறைந்த உண்டிகளை எடுத்துக் காட்டி அவையாவும் உடலை வளர்ப்பன. என்றும் தமிழ் ஒன்றே எம் உயிரை வளர்ப்பது என விளம்புகிறார் புரட்சிக்கவி.

"......கட்டித்
தயிரொடு மிளகின் சாறும்
நன் மதுரஞ் செய் கிழங்கு – கானல்
நாவிலினித்திடும் அப்பம்
உன்னை வளர்ப்பன தமிழா! – உயிரை
உணர்வை வளர்ப்பது தமிழே!

மேற்கூறப்பட்ட எடுத்துக்காட்டுக்கள் மூலம் தமிழின் இனிமைப் பண்பும் சிறப்பும் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதை யாவரும் உணரமுடியும். எம்மை அன்புடன் பெற்று வளர்ப்பவள் தாய். அது போல அறிவை ஊட்டுவது எம்மொழி ஆதலால் தமிழ் மொழியிலுள்ள அறிவு நூல்களை கற்றறிவதும் தமிழில் படைக்கப்பட்ட இலக்கியங்களைத் தேடிப்படிப்பதும் நமது கடமையாகும். எமது தாயை நாமே அறியாமல் இருப்பது எந்தளவுக்கு தவறானது என்பதனை உணர்வோம் தமிழின் பெருமையை அனுபவித்த கவிஞர்களின் வழியில் அன்னைத் தமிழை அணைவோம். அவள் சீரிழமைத்திறனில் இருந்து கற்போம். தாய்க்கு கந்த தமிழ்ச் சேய்களாய் வாழ்வோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதேச இலக்கியங்களும் பிரதேசவாரியான இலக்கியங்களும்

யே.டிலக்ஷனா
கலைப்பிரிவு உயர்தரம் (2016)

பிரதேச இலக்கியங்கள் மண் வாசனையும் மக்கள் தம் இயல்பு வாழ்க்கையையும் நாம் இழந்தவற்றின் வரலாற்றையும் சொல்லுகின்றன. போர் மட்டுமல்ல உலக மயமாக்கலின் வலிய கரங்களும் எங்கள் குரல் வளையை நசுக்கி எங்களைப் பண்பாட்டு கோலத்திலிருந்து அறுத்து இயல்பற்ற ஒற்றைப் பண்பாட்டுக்குரியவர்களாய் மாற்றிவரும் அவலத்தைக் காண்கின்றோம்.

பிரதேச இலக்கியம் என்பது ஒரு பிரதேசத்தின் மண்வாசனையை அதன் இயல்புகளை அந்த நிலத்தின் மக்களை அவர்கள் தம் சித்திரங்களை பிரதிபலித்துக்காட்டும் இலக்கியத்தைக் குறித்து நிற்கின்றது. போர் எங்கள் நிலங்களின் எழிலை மக்களின் இயல்பைத் தின்று தீர்த்திருக்கிறது. இயல்பற்ற, இலக்கற்ற மனிதக் கூட்டங்களாய் நாம் மாறிவரும் சூழலில் எமது நிலங்களின் எழிலை மக்களின் இயல்பைக் கண்டு கொள்ளும் ஆவணங்களாகப் பிரதேச இலக்கியங்கள் தான் விளங்குகின்றன.

கவிதைகள், எங்களின் உணர்வுகளை உரக்கப்பேசின. சிறுகதைகள் சில விசாரணைகளையும், சம்பவங்களையும் பேசின என்றால் ஒரு பிரதேசத்தை இலக்கியத்திற்கொண்டு வரும் ஆற்றல் நாவல்களுக்குத்தான் இருக்கின்றது என்பதை நாம் கவனிக்கின்றோம். இலங்கையில் 19ம் நூற்றாண்டில் தோன்றிய நாவல்கள் ஈழத்து மண்ணைக் களமாகக்கூட கொள்ளவில்லை. 20ம் நூற்றாண்டில் வீரசிங்கன் கதை தான் ஈழத்து மண்ணைக் களமாகக்கொண்ட முதல் நாவல். அதைத் தொடர்ந்து பல நாவல்கள் வந்தாலும் பிரதேசத்தின் உயிரையும், உயிர்ப்பையும் அவை கொண்டிருக்கவில்லை. 'விதியின்கை' நாவலில் கனக செந்தில்நாதன் இதில் ஓரளவு வெற்றி பெற்றாலும் அ.பாலமனோகரன் 1973இல் எழுதிய 'நிலக்கிளி' நாவலுடன் தான் பிரதேச நாவல் என்ற பகுப்பு தோன்றுவதாக பேராசிரியர் ம.இரகுநாதன் வன்னிப்பிரதேச நாவல்கள் என்ற நூலில் கூறியுள்ளார்.

வன்னிப்பிரதேசத்திலே தோன்றிய நூல்கள் இப்போது எமக்கு மிகவும் தேவையாக இருக்கின்றன. போர் முடிந்த பூமி, ரணகளமாய் மாறிய பூமி, இயற்கை எழில் உடுத்திருந்த தன்மையை, கள்ளமற்ற அந்த மனிதர்களின் வாழ்க்கையை, நாம் தொலைத்துவிட்ட துயர வரலாற்றை எமக்குத் தரும் நாவல்கள் மிகவும் முக்கியமானவை. கிளிநொச்சி உருவாகிய வரலாற்றை 'பச்சை வயல்கள்' நாவல் காட்டுகின்றது.

நாம் இயற்கையின் எழிலை உதாசீனம் செய்தபடி தொழில்நுட்ப உலகத்தின் சேவகர்களாக அடிமைகளாக மாறுகின்ற குற்ற வுணர்வை கொஞ்சமேனும் பிரதேச இலக்கியங்கள் ஏற்படுத்தவே செய்கின்றன. வீரகேசரி 1970களில் பிரதேச நாவல் போட்டியை நடத்தியது பல்வேறு அறியப்படாத பிரதேசங்களையும் காட்டுகின்ற நாவல்கள் தோன்றின. போரின் பின்னான வாழ்வில் இருக்கும் எமக்கும் முன்னைப் பழமையையும் சேர்த்து எடுத்தியம்பும் இலக்கியங்கள் அவசியமாக இருக்கின்றன. சாட்சியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மௌனமாகி, இலக்கியங்களில் அவை அபூர்வ மாகவே வெளிப்பட்டு வருகின்றன. நல்லதொரு நாவலே மௌனங்களை உடைக்கும் வலிய ஆயுதம் என்பதை நம் இலக்கியக்காரர்கள் உணர்ந்தும் இந்த மௌனம் நீளப் போகிறதா?

பிரதேச இலக்கியங்கள் பற்றி கொழும்புத் தமிழ்ச் சங்கத்திலே நடந்த ஆய்வரங்கு பிரதேச வாரியான இலக்கியத்தோற்றம் பற்றியே பெரும் பாலும் பேசியது. அப்போதுதான் பிரதேச வாரியான இலக்கியங்களின் அறிக்கையும் தேவையானது, ஆவணப்படுத்தவேண்டியது என்பது மனதுக்குள் இன்னும் ஆழமாகப் பதிந்து கொண்டது. அருகில் இருக்கின்ற எழுத்தாளரையே அறியாத மக்கள் மத்தியில் தான் இலக்கியகாரர்கள் வாழ்ந்து வந்தார்கள். ஆனால் அந்த மக்கள் தான் அவர்களின் கருப்பொருளாக இருந்தார்கள், இருக்கிறார்கள். சுந்தரராமசாமி, "சினிமாக் காரர்களைப்போல அந்தஸ்து செல்வாக்கோ இலக்கியங்களுக்கு கிடைத்துவிடுவதில்லை" என்று கூறியது உண்மைதான்.

வெளிச்சத்துக்கு வராமலே நல்ல சிலபடைப்பு களும் தூங்கிவிடக்கூடும். ஒவ்வொரு பிரதேச செயலகமும் தனது இடத்தில் ஒவ்வொரு வருடமும் வருகின்ற நூல்கள் பற்றிய விவரத்தைச் சேகரிக்க வேண்டும். எழுத்தாளர்களும் அதற்குப் பங்களிக்க வேண்டும். 'விக்கிமீடியா' போன்ற இணையத் தளங்களில் உள்ளவற்றை முழுமையாக நம்பி விடக்கூடாது. பிரதேச செயலக ரீதியான தகவல்கள் நாடு முழுவதும் தோன்றும் வருட ரீதியான நூலாக விவரமாக வெளியிடப்படுமாக இருந்தால் எதிர்கால ஆய்வாளர்களுக்கு மிகப் பெரும் சொத் தாகவும் தேடலுக்கான கருவியாகவும் அமையும்.




## நன்றாய் வாழுவோம்

புதுமைப் பெண் நானாவேன்
பூமியின் அன்பு மகள்நானே
என்னை நன்றாய் நேசிப்பேன்
உலகை அதைவிட நேசிப்பேன்
பார்க்கும் இதயம் அத்தனையினையும்
நட்புக் கருத்தால் இணைத்திடுவேன்
அகிலம் வாழ ஒரு சொல்போதும்
அன்பு என்னும் தெய்வம் அதுவே
பாரிலே மாந்தர்கள் ஒற்றுமையாய்
வேரிற் பலாபோல் இனித்திடுவோம்
சண்டை சிறிதாய் ஏற்பட்டாலும்
கரங்களைச் சேர்த்து ஒன்றுபட்டு
பிளவேதும் வராமல் காத்திடுவோம்
வாழும் நாட்கள் சிற்சிலவே
நன்றாய் வாழ்ந்துதான் பார்ப்போமே

ஜெ.கபில்ஸ்ரா
கலைப்பிரிவு உயர்தரம் (2015)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நகைச்சுவை


ஞா.சகாயமேரி
கலைப்பிரிவு உயர்தரம் (2015)


கண்ணிற்கும் காதிற்கும் புலப்படுவன வற்றை ஆதாரமாகக் கொண்டே நகை முதலிய சுவை தோன்றும் என்று பொதுவாக நினைக்க லாம். இது உண்மையே ஆனால் கண், செவி என்ற இரண்டிற்கும் அடிப்படையாக இருக்கின்ற மனத்தின் நிலையும் நகைச்சுவைக்கு இன்றி யமையாதது.

"கண்ணினுஞ் செவியினுந் திண்ணியதி னுணரும்
உணர்வுடை மாந்தர்க் கல்லது"
நகை முதலிய சுவையின் நயம் தெரிய முடியாது"

என்று தொல்காப்பியரும் மன நிலையின் அவசியத்தை வற்புறுத்தியிருக்கிறார். மிகவும் எளிதான சில விஷயங்களால் இவர் சொல்வதன் உண்மை விளங்கும். முதலாவதாக எல்லோ ராலும் நன்றாகச் சிரிக்க முடியாது. இதனை உங்கள் அனுபவங்கொண்டே நீங்கள் அறிந்திருக்கக்கூடும். சிலரது கண்களுக்கு முன் எவ்வளவு வேடிக்கை காட்டினாலும் அவர்களால் சிரிக்க முடிவதில்லை. அவர்களின் மனதில் ஏதோ ஒரு குறைபாடு இருப்பதாலேயே சிரிப்பதற்கு அவர் கள் மனம் இடங்கொடுப்பதில்லை. இதனால் சிரிப் பதற்கு ஏற்ற மனநிலையொன்று உண்டு என்பது தெளிவுறுத்தப்படுகின்றது. இரண்டாவதாக தக்க மனநிலையில் மனதினாலும் சிரிப்பது உண்டு என்று வள்ளுவர் முதலிய ஆசிரியர்கள் புலப்படுத்திக்காட்டியுள்ளார்கள் அதாவது

பூதங்கள் ஐந்தும் அகத்தே நகும் என்றும்
மகிழ்ந்துள்ளம் உள்ளுள் உவப்ப துடைத்து

என்று அவர் கூறுகிறார்.

சூர்ப்பனகை இராமனை நெருங்கித் தனது காதலை வெளிப்படக்கூறி அரசர்கள் மணந்து கொள்வதற்குரிய வம்சத்தில் தான் பிறந்தவள் என்று தெரிவிக்கிற இடத்தே, இராமன் தன் மனதினுள்ளே சிரித்துக்கொண்டான் என்று சொல்லப்படுகிறது. இதனைக் கம்பன்

அருந்தியள் அனைய கூற
அகத்தறு நகையின் வெள்ளைக்
குருத்தெழு கின்ற நீலக்
கொண்டலுண் டாட்டங் கொண்டான்

எனப்பாடுகிறான்

அடுத்து தக்க மனநிலைப் பண்பை எடுத்து நோக்கும்போது நகைப்பு நிகழ்வதற்கு ஒரு தக்க மனநிலை வேண்டும். மனத்திலிருந்தெழுந்தே வெளிப்புறப்பட வேண்டும் என்பது வள்ளுவர் வாக்கால் அறியலாம். மனநிலை தக்க தாயமைந்து நகைப்பு உள்ளிருந்தெழுமாயின், வெளித்தோன்றுவது புன்னகையாயிருப்பினும் பொருள் நிரம்பியிருக்கும் என்பது கம்பனின் வாக்கால் உணர்த்திக்காட்டப்படுகிறது. இம் மனநிலை இல்லாமற் போனால் மனதிற்கும், நகைப்புச் செயலுக்கும் யாதொரு தொடர்பும் இல்லாமல் பார்ப்பவர்களுக்கு நகைப்பு உண டாகின்றது. இதற்கு "கள்ளுண்டவனுடைய நகைப்பை" உதாரணமாகக் காட்டலாம்.

தன் கணவன் தன்னை பிரிந்து வெளி நாட்டுக்குச் செல்லப்போகின்றான் என்பதை குறிப்பினால் உணர்ந்த ஒரு மங்கை அவனிடம் அணுகும்போது.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நலமிகு சேவடி நிலம்வடுக் கொளா அக்
குறுக வந்து தன் கூரெயிறு தோன்ற
வறிதகத் தெழுந்த வாயல் முறுவலள் என்று

வர்ணிக்கப்படுகிறாள். இங்ஙனமே கோவலன் தன்னுடன் வழிவந்து கண்ணகியை நோக்கி "உன் விஷயத்தில் பல தவறுகள் செய்துவிட்டேன். நான் வா என்று அழைத்தவுடன் நீ மனமொப்பி வந்தாய்?" என கேட்க, அவள் "நீர்", என்னுடன் இல்லாமையாகிய வருத்தத்தை மறைத்தொழுகி னேனாக, உமது பெற்றோர்கள் என் குணத்தை கண்டு என்னை அன்போடு பாராட்டினார்கள் அப் போது என் முகத்திலே சிறிது புன்னகை அரும் பிற்று. இப்புன்னகை துன்பங்காரணமாக தோன்றியது என்று அதன் போலித்தன்மையை அவர்கள் உணர்ந்து மிகவும் வருந்தினர். அவர்கள் துன்புறும்படி செய்துவிட்டீரே என்பது தான் எனது வருத்தம்" என்று கூறுகிறாள்.

அடுத்து நகைச்சுவைகளில் உள்ளடங்கும் விடயங்கள் பற்றி பலமொழிகளிலும் எழுதப் பட்டிருக்கும் புத்தகங்களை ஓரிடத்தில் தொகுத்து வைப்பதனால் எத்தனையோ வண்டிப்பாரங்கள் இருக் கும். தமிழ், வடமொழி, இலத்தீன், ஆங்கி லம், பிரெஞ்சு, ஜேர்மன் முதலிய மொழிகளிலெல் லாம் இக்கலை பற்றி புத்தகங்கள் உள்ளன. பண்டைக் காலத்து ஆசிரியர்களும், இடைக் காலத்து ஆசிரியர்களும் எழுதியிருக்கிறார்கள். ஆண், பெண் இரு பாலாரும் இதுபற்றி எழுது வதில் போட்டியிட்டிருக்கிறார்கள். சில பேரறிஞர்க ளது பெயர்களை கேட்ட மாத்திரத்தில் நமக்கு வியப்பே உண்டாகும் காண், பெர்க்ஸன், டார்வின், ஷோப்பென்ஹாயெகர் முதலியோர் அப்பேரறிஞர் களுள் ஒரு சிலர்.

நகைப்பின் உற்பத்தி யாது? எவ்வகையான நிலைமைகளில் இது தோன்றுகிறது? தோன்றும் போது நிகழும் மனநிலைகள் யாவை? என்பன போன்ற கேள்விகள் இங்கு விசாரணைக்குரிய பொருள்களாக அமைந்து வந்திருக்கின்றன. குழந்தையின் மனநிலையோடு ஒத்த மனநிலை யுடையவர்கள் பைத்தியக்காரர்களும், குடிகாரர் களுமாவர். இவர்கள் செய்யும் காரியங்களும் சொல்லும் வார்த்தைகளும் நகைப்பு விளைவிக் கக் கூடியனவாகவே இருக்கும். கள்ளுண்டவர் செய்யும் வினோத செயல்களை உண்டாட்டுப் படலத்திற் கம்பன் நகைச்சுவை ததும்ப விவரித்தி ருக்கிறான்.

அழிகின்ற அறிவி னாலோ பேதைமை
யாலோ ஆற்றிற்
சுழியொன்றி நின்ற தன் உந்தியாள்
தூய சென்தேன்
பொழிகின்ற பூவின் வேய்ந்த பந்தரைப்
புரைத்துக் கீழ்வந்து
இழிகின்ற கொழு நி லாவை நறவென
வள்ளத் தேற்றான்

குழந்தைகளுக்கு வயது அதிகப்பட அதிகப்பட, அவர்களின் மனநிலையும் அபிவிருத்தியடைந்து வருகிறது. அபிவிருத்திக்குத் தக்கபடி அவர்களால் விளையும் நகைச்சுவைக்குரிய சொற்களும், செயல்களும் வேறுபடுகின்றன. ஐந்து வயதுப் பையன் ஒருவன் தன் தகப்பனாரைபார்த்து 'நான் பாட்டியாரை கலியாணம் செய்யப்போகிறேன்" என்கிறான்'. "என் அம்மாவை நீ கலியாணம் பண் ணிக்கொள்ள முடியாது" என்று தகப்பன் சொல்ல 'என் அம்மாவை நீ எப்படி கலியாணம் செய்து கொண்டாய் அதுபோல நானும் உன் அம்மாவை கலியாணம் செய்து கொள்வேன்" என்று பதில் கூறுகிறான். வயதும் சிறிது அதிகமாகிக் குறும்புத் தனமும் உள்ள சிறுவர்கள் காட்டும் நகைச்சுவை தனிவகையானது. அதே போல ஊருக்கு புதிய வரான ஒரு சந்நியாசி தபாலகத்திற்குப்போகும் வழியை பற்றி ஒரு பையனிடம் கேட்டார். அவன் வழியை காட்டிவிட்டு 'தாங்கள் ஊருக்கு புதிது போலிருக்கிறதே. தாங்கள் இங்கே என்ன செய்கிறீர்கள்? என்று கேட்டான். அவர் மோட்சத் திற்கு போகும் வழியை ஜனங்களுக்கு உப தேசிக்கிறேன். என கௌரவமாக பதில் சொன்னார். 'தபாலகத்திற்கு போக வழி தெரியாதவர் மோட்சத் திற்கு வழி சொல்லிக் கொடுக்கிறாராம்!' என்று அந்தப் பையன் சிரித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொடர்ந்து எந்தவொரு மேதாவியாக செயற்பட்டாலும் அவன் நகைப்பிற்குள் உட்பட்டு விடுகிறான். நியூட்டனைப் பற்றி கேள்வியுற்றிருப்பீர்கள். அவர் கணிதத்தில் மேதாவி, அவர் வீட்டில் வளர்ந்து வந்த முயல்களுக்கு ஒரு கூடு தயாரிக்கும்படி ஒரு தச்சனிடம் ஏற்பாடு செய்திருந்தார். தச்சன் ஒரு மரக்கூடு செய்து அதற்கு ஒரு வாசல் மட்டும் வைத்து அவருக்குக் காட்டினார். அவர் 'ஒரு வாசல் வைத்திருக்கிறாயே! இதன் வழியாக பெரிய முயல்போய் வரலாம். சிறிய முயல்கள் போய் வருவதற்கு வழியில்லையே என்றாராம் அரிய நகைச்சுவை அல்லவா? அறிவுவன்மையும், திண்ணிய மனநிலையும் உடையவர்கள் பல்வேறு நோக்கத்துடன் வேண்டும் என்றே நகைச்சுவையை விளைவிப்பது உண்டு.

நகைச்சுவையைப்பற்றி தொல்காப்பியரும் சில கூற்றுக்களை முன்வைத்துள்ளனர். அதாவது மனப்பண்பினால் அல்லது மனநிலையால் விளையும் நகைச்சுவை எத்தனையோ உள்ளன. இவற்றையெல்லாம் தொகுத்து தொல்காப்பியர்

எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகை நான்க என்ப என்று

கூறினார் என்னால் என்பது இகழ்ச்சி. பேதைமை என்பது கேட்டதை ஊன்றியுணராது மெய்யாகக் கொள்ளும் மனநிலையாகும் மடமையென்பது பொருள் தெரியாதபடி மயங்கியறியும் மனநிலை இவ்விரண்டு மனநிலைகளும் இகழ்ச்சி. செய்யும் மனநிலையும் இளமையிலுள்ள மனநிலையும் நகைச்சுவையை விளைவிக்கும் நான்கு காரணங்கள் என்பது இதன் பொருள்.

அடுத்து தொல்காப்பியரை போன்று நகைச்சுவைபற்றி தொல்காப்பியர் கூறாத கருத்துக்களை நோக்குவோம். அதாவது தொல்காப்பியர் கூறாத ஒரு பொருளையும் குறிக்க வேண்டும். நகைப்பிற்கும், அழுகைக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. நகைப்பு மிகுதியாய் எல்லை கடந்து நிகழுகிற இடத்தில் கண்களில் நீர்த்துளிகள் தோன்றுவது சாதாரணமாக நாம் காண்கின்ற விடயமே. இவ்வாறு பெருந்துன்பத்தின் இறுதியில் மன முடைந்து அதன் உள்ளிருந்து பீறியெழுந்து சிரிப்பு தோன்றுவதும் நாம் காணக்கூடியதே

சில சமயங்களில் எங்கே நகைப்பு முடிகிறது. எங்கே அழுகை தொடங்குகிறது என்று வரையறுத்துச் சொல்லமுடியாதபடி இரண்டும் கலந்திருப்பதும் உண்டு. மேற்கூறியவாறெல்லாம் தோன்றி நிகழும் நகைப்பை மனப்பண்பினால் விளையும் நகைச்சுவை என்று சொல்லுவது பொருத்தமில்லை. நகைப்பு நற்குடிப்பிறப்போடு ஒத்தது அல்ல என்று செஸ்டர் பீல்டு பிரபு தமது குமாரர்க்கு அறிவுரை புகட்டியிருக்கிறார். அதே போல காளிதாசன் பல கருத்துக்களை கூறியுள்ளார்.

எனவே மனித வாழ்க்கையில் நகைப்பு என்பது முக்கிய இடம் வகிக்கின்றது. உடலின் நலத்திற்கும், மனதின், நலத்திற்கும், எழுச்சிக் கும் நகைப்பு ஓர் அறிகுறியாகும் என்று மேனாட்டு அறிஞர்கள் கூறுகின்றனர். உயிரினங்களுள் மனிதன் மட்டுமே நகைத்து மகிழக் கூடியவன் என்று ஹாஸ்லிட் கூறுகிறார். இவை யாவும் உண்மைக் கருத்துக்களேயாகும். அந்த வகையில் நாம் அனைவரும் நகைப்பு என்ற இயல்பை விட்டுவிட்டாமல் நகைக்க தக்கனவற்றை கண்டும் கேட்டும், உளம் நிரம்ப, உடல் நிறைய சிரித்து வாழ்வதே சிறந்த பண்பாகும். அது உடலின் ஆரோக்கியத்திற்கும் சிறந்த மருந்தாகும்.

> "தமிழ் இலக்கியத்துக்கும் மொழிக்கும் பக்திச்சுவை எவ்வாறு இயல்பாயுள்ளதோ, அவ்வாறே நம் கலைகள், பக்தியின் விளைவால் தம் அருங்கனிகளைக் கொடுத்திருக்கின்றன. தமிழ்மொழி பக்தியின் மொழியாயின் தமிழ்க்கலைகளும் பக்தியின் கலைகளே"
>
> - தனிநாயகம் அடிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்போம் அனர்த்தத்தை, பாதுகாப்போம் இலங்கையை

சஹானா ஜெயராஜா
விஞ்ஞானப்பிரிவு உயர்தரம் (2015)

இன்றைய மனிதன் தன்னுடைய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்களை எண்ணி பெருமையுடன் மார்பைத் தட்டிக் கொண்டிருந்தாலும் இயற்கை அனர்த்தங்களை எதிர்கொள்வதில் அவன் இன்னமும் தேர்ச்சி பெறவில்லை என்று தான் கூறமுடியும். குறிப்பாக, இயற்கை அனர்த்தங்களிற்கு முகங்கொடுப்பதில் அபிவிருத்தியடைந்த நாடுகளே தடுமாறி வருகின்றன. இந்த நிலையில் இலங்கை போன்ற நாடுகள் அனர்த்தங்களால் அடைகின்ற ஆபத்துக்கள் மிகப் பாரதூரமானவை. எனவே அனர்த்தங்களை தடுப்பதும் அவற்றில் இருந்து எம் இலங்கையை பாதுகாப்பதும் எமக்குரிய கடமைகளாகின்றன.

இலங்கையில் ஏற்பட்ட இயற்கை அனர்த்தங்கள் பெரும்பாலும் வானிலை தொடர்பானவை. இயற்கையில் ஏற்பட்ட சில இயற்கை அழிவுகளானவை சூறாவளிகள், வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகள் என்பனவற்றிக்கு வழிகோலிய பெரும் மழை வீழ்ச்சிகள், மின்னல், சூழல் காற்றுக்கள், உயர் கடல் அலைகளால் ஏற்படும் கடற்கரை பாதிப்புக்கள், ஆழிப்பேரலை ஆகியவையாகும்.

எமது நாடு அடிக்கடி நிலச்சரிவுகளால் அழிவுகளைச் சந்தித்துள்ளது. பொதுவாக நடைபெறும் பாறை அல்லது மண் திணிவுகளின் வேகமான திடீரென ஏற்படும் அசைவுகள் நிலச்சரிவு எனப்படும். இலங்கையின் 65000 சதுர கிலோ மீற்றர் தரைப்பரப்பில் ஏறத்தாழ 20,000 சதுர கிலோ மீற்றர் பரப்பானது மொத்தமாக 10 மாவட்டங்களை உள்ளடக்கியதால் நிலச்சரிவு ஏற்படுகின்ற சாத்தியமுள்ள பரப்பாக கருதப்படுகின்றது. தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தால் மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சியின் படி ஒழுங்கற்ற திட்டமிடப்படாத பொறியியல் அடிப்படை அற்ற கட்டிட முறைகள் கட்டுப்பாடற்ற மனித தலையீடுகள் என்பன நிலச்சரிவுகள் ஏற்படக் காரணங்களாகின்றன. நிலச்சரிவுகளினால் உயிரிழப்புக்களும் பெருமதியான உடைமை இழப்புக்களும் ஏற்படுகின்றன. உயிர்கள், சொத்துக்களின் சேதங்கள் மாத்திரமன்றி பல உட்கட்டமைப்புக்களும் பொருளாதாரப் பயன்களும் நிலச்சரிவு அனர்த்தங்களால் பாதிப்படைந்துள்ளன. குறிப்பாக நீர் விநியோகம் செய்கின்ற குழாய்கள், நீர் மின்னை உற்பத்தி செய்கின்ற மையங்கள், தொலைத்தொடர்பு மையங்கள் என்பன பாதிப்படைகின்றன.

சில நேரங்களில் கல்வி, சுகாதார சேவைகளும் அதிகளவு குழப்பப்படுகின்றன. எல்லாவற்றுக்கும் மேலாக, அடிக்கடி நிகழ்கின்ற நிலச்சரிவுகளால் அவ்விடங்களில் காணப்படும் தாவரம், விலங்கு உட்பட சூழலில் வாழும் உயிரினங்களின் வாழ்வாதாரத்திற்கு அச்சுறுத்தலும் ஏற்படுகின்றது. உண்மையில் மனிதர்களின் கட்டுப்பாடு இல்லாத நடவடிக்கைகளே நிலச்சரிவிற்கு காரணம் எனலாம். காடுகளை அழித்தல், சீராக திட்டமிடப்படாமல் காணிகளை பயன்படுத்துதல், மலைப்பகுதிகளின் புவியியல் தன்மையை அறியாமல் திட்டமற்ற முறையில் பாரிய கட்டடங்களை நிறுவுதல், மண் அகழ்வுகளை மேற்கொண்டு உலோகங்களை அள்ளுதல், இயற்கையாக நீரோடும் பாதைகளைத் தடுத்தல், உயர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலங்களில் தேவையில்லாமல் நீரைத் தேக்கி வைத்தல் போன்ற செயற்பாடுகள் நிலச் சரிவு ஏற்பட்டு அழிவுகளை உண்டாக்குகின்றன.

நிலச்சரிவை தடுப்பதன் மூலம் பெரும் அனர்த்தங்களை தடுக்க முடியும். வெட்டிவேர்ப்புற்கள், சீமைக்கிழுவை போன்ற தாவரங்கள் நடுகை செய்யப்பட்டு மண்ணரிப்பு தடுக்கப்படல் வேண்டும். சீமெந்துக் கலவை போன்றவற்றை மேற்கொண்டு நிலச்சரிவை தடுக்க வேண்டும். மலைச் சாய்வுகளில் நவீன தொழில்நுட்ப உபகரண வசதிகள் மூலம் நிலச்சரிவைத் தடுக்கின்ற முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

இலங்கை இந்து சமுத்திரத்தில் அமைந்திருக்கின்ற தீவு என்பதால் அயனமண்டலச் சூறாவளியின் கடும் தாக்கத்தை அடிக்கடி சந்திக்க நேரிடுகின்றது. அயனமண்டல சூறாவளிகள் பெரும் நாசத்தை ஏற்படுத்த வல்லவை. இவை மிகப் பலமான காற்றுக்களாலும் புயல், மழை, கடற்கொந்தளிப்பு என்பவற்றினாலும் பேரழிவை ஏற்படுத்துகின்றன. கடலில் செல்கின்ற கப்பல்கள், மீனவர்களின் படகுகள், மற்றும் விமானங்கள் என்பனவும் மிக மோசமாகப் பாதிக்கப் படுகின்றன. இலங்கையில் மட்டக்களப்பு உள்ளிட்ட கிழக்கு மாவட்டங்களும் வடமேற்கில் மன்னாரும் அயனமண்டலச் சூறாவளியினால் அடிக்கடி துன்புறுத்தப்படுகின்றன.

சூறாவளியால் ஏற்படும் அனர்த்தங்களில் இருந்து எம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கு சூறாவளிகள் பற்றிய வானொலி, தொலைக்காட்சி அறிவுப்புக்கள் அவசியமாகின்றன. ஒரு சூறாவளி எச்சரிக்கை பற்றி ஒலிபரப்பப்படும் செய்திகளிற்கு எல்லோரும் கூடிய கவனம் செலுத்தவேண்டும். ஒரு குறிப்பிட்ட இடத்தில் சூறாவளியால் ஆபத்து ஏற்படப்போகின்றது என அவதானிக்கப்படுமாயின் அப்பகுதியிலுள்ள வீடுகளில் இறுக்கமற்று காணப்படும் கூரைத்தகடுகளை இறுக்கமாக பொருத்துதல், வீட்டிற்கு அருகில் பாதிப்பை ஏற்படுத்தகூடிய மரங்களை வெட்டுதல், உணவு, உடை என்பவற்றை சேமித்து பாதுகாப்பாக வைத்திருத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். கூடியவரையில் தூய நீரினை உட்கொள்ள வேண்டியதும் மருத்துவப் பாதுகாப்பைப் பேணிக்கொள்வதும் அவசியமானதாகும்.

ஆழிப்பேரலை, சூறாவளி போன்றவற்றை பற்றி முன்கூட்டியே எச்சரிக்ககூடிய கருவிகளை கடற்கரை ஓரங்களில் நிறுவ வேண்டும். இலங்கையில் கிழக்குகரையோர மாவட்டங்களில் இக்கருவிகளுடன் கூடிய நிலையங்கள் நிறுவப் படல் வேண்டும். அனர்த்தங்கள் ஏற்படும்போது மக்கள் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். இது தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கைகளை அரசு மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் முன்னெடுக்க வேண்டும்.

சூறாவளியின் போது இடி, மின்னல் புயல்கள் போன்ற அனர்த்தங்களும் ஏற்படக்கூடும். இவற்றின் போது உயிரிழப்புக்களும் ஏற்படக்கூடும். இடி, மின்னல் என்பன ஏற்படுகின்ற வேளைகளில் மின்சாரச் சாதனங்கள், இலத்திரனியல் சாதனங்கள் என்பவற்றை செயற்படுத்தல் கூடாது. இவ்வாறு இவற்றை அணைத்து வைப்பதன் மூலம் பெரும் உயிரிழப்புகளையும், சொத்துடமை அழிவுகளையும் தடுக்கலாம். உயரமான கட்டடங்களில் இடிதாங்கிகளை பொருத்தலும் பாதுகாப்பினை உறுதிப்படுத்துவதாக அமையும்.

பேரழிவுகளை உண்டாக்குகின்ற அனர்த்தங்கள் வரிசையில் பூகம்பமும் முக்கியமான ஒன்றாகும். புவிநடுக்கத்திற்கு காரணமான ஓட்டின் மேல் காணப்படுகின்ற தட்டுக்கள் ஒன்றுக் கொன்று சார்பாக நகர்தல் பூகம்பத்தை ஏற்படுத்த காரணமாக அமைகின்றது. புவித்தட்டுகள் ஒன்றோடு ஒன்று மோதும் போதும், ஒன்றைவிட்டு ஒன்று விலகுகின்ற போதும், பூகம்பங்கள் உருவாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூகம்பங்கள் கட்டிடங்களை தகர்க்க கூடியன வாகவும், பெரும் மின்சார தளங்களை ஸ்தம்பித மடையச் செய்வனவாகவும், நெருப்பினை உண் டாக்க வல்லனவாகவும் இருக்கின்றன. சமுத்திரத் தில் ஏற்படுகின்ற பூகம்பங்களே ஆழிப் பேரலை களை உண்டாக்கி பெரும் அழிவுகளை ஏற்படுத்து கின்றன. பசுபிக் சமுத்திரத்தில் சுமாத்திரா தீவு களுக்கு அண்மையில் 2004, டிசம்பர் 26ம் நாள் ஏற்பட்ட பாரிய பூகம்பமும் இதனால் ஏற்பட்ட ஆழிப் பேரலை (சுனாமி) யும் இலங்கை உட்பட இந்து சமுத்திர பிராந்திய நாடுகளுக்கு ஏற்படுத்திய பேரழிவுகள் மறக்கப்படக் கூடியவையல்ல.

இலங்கையில் ஏற்படுகின்ற பூகம்பங்கள் ஜப்பான், இந்தியா போன்ற நாடுகளில் ஏற்பட்ட பாரிய பூகம்பங்களை ஒத்தனவையல்ல எனினும் அது போன்ற பூகம்பம் இலங்கையில் ஏற்படாது என்று எதிர்வுகூற முடியாது. சில விஞ்ஞானிகள் இலங்கையினுள் புவியின் அதிர்வுகள், பெரிய தீர்த்தேக்கங்களால் ஏற்படுவதாக ஊகிக்கின்றனர். நீரின் பாரிய அளவு தொகையான பாரத்தின் காரணத்தினால் கீழேயுள்ள பாறைப்படைகளில் அழுத்தம் ஏற்பட்டு பூகம்பம் உண்டாகின்றது என்பது விஞ்ஞானிகளின் ஐயமாகும். எனவே இலங்கையில் பெரும் நீர்த்தேக்கங்களை அமைக்க முற்படுகின்ற போது இந்த ஆபத்தினை கவனத்தில் கொள்வது நல்லது.

இன்று இலங்கை எதிர்நோக்குகின்ற மற்று மொரு ஆபத்து கடற்கரையோர அரிப்பு ஆகும். இலங்கை போன்ற நாடுகள் முருகைக் கற்பாறைத் தொகுதிகளை கொண்ட முக்கியமான நாடுகளாக விளங்குகின்றன. முருகைக்கற்கள் மீனுற்பத்தி, மருந்துவகைகளின் உற்பத்தி, சுண்ணாம்பு உற்பத்தி போன்றவற்றிக்கு அடிப்படை துணைக ளாக விளங்குகின்றன. புத்தளம், காங்கேசன் துறை போன்ற இடங்களில் சீமெந்து உற்பத்திக் கும் முருகைக் கற்பாறைகள் உதவுகின்றன.

இலங்கையின் கரையோரத்தில் அண்ணள வாக (1660 km) கரையோரத்தில் முருகைக் கற்கள் காணப்படுகின்றன. ஹிக்கடுவ, பெந்தோட்ட, நிலாவெளி போன்ற இடங்களிலுள்ள முருகைக் கற்பாறைப் படிவுகளின் அழகைப் பார்வையிட உல்லாசப்பிரயாணிகள் பெருந்தொகையாக வரு கின்றனர். இன்று இத்தகைய முருகைக் கற்பாறை களை அழிவுக்குள்ளாக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன. இந்தியாவின் தென் முனையையும் இலங்கையின் வட முனையை யும் பிரித்து நிற்கின்ற பாக்கு நீரிணையை ஆழப்படுத்துகின்ற சேது கால்வாய் திட்டமானது முருகைக்கற்பாறைகளின் அழிவுக்கு காரணம். இதனால் கரையோர அரிப்பு, கடல்வாழ் உயிரின் அழிவுகள், உல்லாச பிரயாணிகளின் வரவு குறைவடைதல் போன்ற பாதகங்கள் ஏற்படும்.

இன்று நாம் மேற்கொள்ளுகின்ற மரம் அழிப்பு நடவடிக்கை நாளடைவில் பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்த வல்லன. காடுகள் அழிக்கப்படுவதால் புவி வெப்பமடையக்கூடிய ஆபத்து ஏற்படுகின்றது. காடுகளிலுள்ள பெறுமதி யான மரங்கள் வெட்டப்படுவதனால் பாலைவனம் உண்டாக்கப்பட்டு மழைவீழ்ச்சி குறைந்து போகின்றது. காடுகளுக்கு மனிதன் தீ வைப்பத னால் காற்று மண்டலம், சூழல் என்பன பாதிக்கப் படுகின்றன. காட்டுத்தீயினால் வெளிவந்த புகை மண்டலம் இலங்கையில் நுவரெலியா, மட்டக் களப்பு போன்ற இடங்களை அண்மையில் பாதித்துள்ளது. காட்டுத்தீயினால் போக்குவரத்து, மின்சாரம் என்பன பாதிக்கப்படுகின்றன. மேலும் மூச்சுதிணறல் போன்ற ஆபத்தான நோய்களும் ஏற்படுகின்றன. மொத்தத்தில் இலங்கை பாலை வனமாவதை தடுக்க காட்டழிப்பை நிறுத்த வேண்டி யது அவசியமானதாகின்றது.

மனித முயற்சியால் விளைகின்ற மற்றொரு ஆபத்து சூழல் மாசடைதல் ஆகும். தொழிற்சாலை கழிவுகள், வைத்தியசாலைக் கழிவுகள், எண்ணெய்ப் படிவுகள் கடலில் கலத்தல், வாகனப் புகைகள், பேரழிவு ஆயுதங்களை பயன்படுத்துவ



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் ஏற்படும் இரசாயனக் கழிவு வெளிப்பாடுகள் என்பன பெரும் அனர்த்தங்களை ஏற்படுத்துகின்றன. இத்தகைய செயற்பாடுகளால் ஓசோன் படலத்தில் துவாரம் ஏற்பட்டு பூமியில் பல்வேறு அனர்த்தங்கள் உண்டாகி வருகின்றன. இலங்கையில் சூழலைப் பாதுகாக்கின்ற பொறுப் புணர்வு இன்னும் வளரவில்லை. இதனால் டெங்கு போன்ற உயிர்கொல்லி நோய்கள் பெருகியுள்ளமை அலட்சியப்படுத்தத்தக்கது அல்ல. நாம் ஒவ்வொருவரும் எமது சூழலை சுத்தமாக வைத்திருக்க வேண்டியதன் அவசியத்தை உணர்ந்து செயற்படல் வேண்டும். இதன் மூலம் நோயால் ஏற்படுகின்ற இறப்புக்களையும், அங்கங்கள் செயலிழந்து போவதையும் தடுக்க முடியும்.

வீதிகளில் ஏற்படுகின்ற விபத்துக்கள் அன்றாடம் அனர்த்தங்களை தோற்றுவித்து வருகின்றன. நகரப் பெருக்கம், மக்கள் பெருக்கம், வாகனப்பெருக்கம், வாகனங்களைச் செலுத்தும் போதும், வீதியில் செல்லும் போதும் வீதி விதிகளைப் பின்பற்றாமை, அலட்சியம் என்பவற்றால் பெரும் அனர்த்தங்கள் ஏற்படுகின்றன. காவல் துறை, மற்றும் சமூக நிறுவனங்கள், வாகனச் சாரதிகள் ஆகியோரின் கூட்டு முயற்சியும், வேகக் கட்டுப்பாடும், விதிகளைப் பேணும் நேர்மையுமே இவ்வாறான விபத்துக்களை தடுக்க முடியும்.

இந்தவகையில் நோக்கியவிடத்து இயற்கை மற்றும் செயற்கை நிகழ்வுகளால் ஏற்படும் அனர்த்தங்களையும் அவற்றை தடுப்பதற்கு வேண்டிய அவசியத்தையும் தடுக்கின்ற முறைகளையும் அவதானிக்க முடிந்துள்ளது. இதன் மூலம் எமது இலங்கையை அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்கும் விதத்தை உணர முடிந்துள்ளது எனலாம். ஆயுதப்போரில் அழிவுக்குள்ளான இலங்கையை அனர்த்தங்களில் இருந்து பாதுகாக்கப்பட வேண்டியதன் அவசியமும் இக்கட்டுரை மூலம் உணர்த்தப்பட்டுள்ளது.

## நட்பு

புரிந்து கொள்ள மறுத்த
உறவுகளின் நடுவில் – என்னை
புரிந்து கொண்டவளாய் முழுதும்
அறிந்து கொண்டவளாய் உருவானவள் நீதான்

நட்பின் தேடலிலே
நாளையை புரிய வைத்தாய்
வெற்றிக்கான வழியை சொல்லித் தந்தாய்
வென்றிடவே ஆசி வழங்கினாய்

தாய் எனது கைபிடிக்கும் போது
அன்பு கிடைத்தது
தந்தை எனது கைபிடிக்கும் போது
அரவணைப்புக் கிடைத்தது
நீ இன்று கரம்
பிடிக்கும் போது இவை
யாவும் சேர்த்து கிடைத்தது



நகர்ந்து வரும் நாட்களிலே
பிரிய மறுத்த பிடிவாதங்களுடன்
நான் உன்னை விட்டு
செல்கிறேன் என் கல்லூரிக்கு

நாம் பழகிய காலத்தை
மீண்டும் நினைக்கும் போது
என்னை அறியாமலே என்
கண்களில் கண்ணீர் துளி

வாசிக்க தெரிந்த விரல்களுக்கு தான்
தெரியும் வீணையின் அருமை
நேசிக்க தெரிந்த இதயத்திற்கு தான்
தெரியும் நட்பின் அருமை

**யோ. நிஷாந்தினி**
கலைப்பிரிவு உயர்தரம் (2016)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூவொன்று புயலானது

(சிறுகதை)

ஜெ.யுரேக்கா

கலைப்பிரிவு உயர்தரம் (2015)

அழகான அந்தி மாலை நேரம் வீட்டு வேலைகளில் மும்முரமாயிருந்த சாவித்திரி குழந்தை வைஷ்ணவியின் அழுகுரலோசை கேட்டு தன் வேலைகளை அப்படியே போட்டுவிட்டு ஓடிவந்து குழந்தையை அணைத்தெடுத்து தொட்டிலிட்டு தாலாட்டத் தொடங்கினாள். அவள் உதடு அவளை அறியாமல் "காலமிது காலமிது கண்ணுறங்கு மகளே, காலமிதைத் தவற விட்டால் தூக்கமில்லை மகளே" எனப் பாடத் தொடங்கியது. பாடலோடு அவள் மனதை நினை வலைகள் தாக்கத் தொடங்கியது.

சாவித்திரி ஏழைக்குடும்பத்தில் செல்வராசா செல்லம்மாவிற்கு ஒரேயொரு மகளாய் பிறந்தாள். ஏழ்மை மட்டும் அவள் வாங்கி வந்த வரமல்ல. குடிகாரத்தகப்பனின் கொடுமைகளையும் வரமாய்ப் பெற்று வந்திருந்தாள். பிஞ்சுள்ளத்தில் எத்தனையோ வடுக்களை ஏழ்மையும் குடியும் ஏற்படுத்தியிருந்தது. செல்லம்மாவின் முயற்சியால் சாவித்திரி தன் ஐந்து வயதுவரைசிறப்பாய் கல்வி கற்று புலமைப்பரிசில் பரீட்சையில் விசேடசித்திபெற்றாள். தந்தையின் சண்டைகள், வெறுப்புக்கள் கல்விக்குத் தடை போடினும் அவற்றையும் தாண்டி முயற்சி என்ற ஒன்றை துடுப்பாக கொண்டு இலவசக்கல்வியையும் புலமைப் பரிசில் பணத்தையும் துணையாய்க் கொண்டு முன்னேறிக்கொண்டு இருந்தாள்.

சிறப்பாக O/L தாண்டி A/L படிப்பதற்குப் பெரிய பாடசாலைக்குச் செல்வதற்காய் தந்தையிடம் அனுமதி வேண்டி நின்றாள். வழமையாய் நடைபெறும் சண்டை அன்று யுத்தமாய் வெடித்தது. இவர்களின் வேண்டுகோளைக்கேட்ட செல்வராசா "இனிப் படிப்பெல்லாம் வேண்டாம் பெரிய புள்ளை ஆனதுமே படிப்பை நிறுத்தி இருக்கோனும். இதுக்கு மேல ஒண்ணும் வேணாம். ஒரு இடத்தில் பார்த்து ஒப்பேத்தி விடணும்" என்றான். போதை அவனை தடுமாறச் செய்து கொண்டிருந்தது. சாவித்திரிக்கு ஆதரவாய் கதைத்த செல்லம்மாவை நன்றாகப் போட்டு அடித்தான். இறுதியில் வலிகளையும், வேதனைகளையும் பொறுத்து வந்த செல்லம்மாவால் சாவித்திரியின் எதிர்காலம் பாழாய்போவதை தாங்க முடியவில்லை.

கணவனையும் எதிர்த்து சாவித்திரியை A/L படிக்க வைத்தாள். செல்லம்மா செல்வராசாவின் ஒரு சத செலவின்றி அவனின் அக்கிரமங்களையும் சகித்துக்கொண்டு அக்கம் பக்கம் வேலை செய்து மகளை படிக்க வைத்தாள். தாயின் கஸ்ரங்களையும், தன் இலட்சியத்தையும் உணர்ந்து சாவித்திரி நன்றாகப் படித்தாள். பாடசாலை நூலகத்தையும் ஊர் வாசிகசாலைகளையும் தன் முன்னேற்றத்திற்கு உபயோகப்படுத்தினாள். ஒருவாறு உயர்தரப் பரீட்சையில் தோற்றிவிட்டு பெறுபேறுகளிற்காய் காத்திருந்தாள்.

அந்தக் காலம் தான் அவள் வாழ்க்கைப் பயணத்தையே மாற்றி வைத்தது. அன்று தையல் வேலையில் சாவித்திரி ஈடுபட்டிருந்த வேளை "சாவித்திரி, ஏய் செல்லம்மா" என்று அழைத்தபடி வந்தான் செல்வராசா. செல்வராசாவின் திடீரழைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின் காரணம் புரியாமால் தவித்த இருவரின் தலையில் இடி வீழ்ந்தது. அவ்வூரிலே நகைக் கடை வைத்திருந்த கந்தசாமியின் மகன் மோகனை சாவித்திரிக்கு திருமணம் செய்து வைக்க முடிவெடுத்ததைச் சொன்னான்.

மோகனைப்பற்றி எதுவும் தெரியாத சாவித்திரி முதலில் இதனை எதிர்த்தாள். தந்தையின் உதையும் தன்னால் தாய் வாங்கும் அடிகளையும் பொறுக்கமுடியாமல் தன் தலைவிதியை நொந்து திருமணத்திற்கு ஒப்புக் கொண்டாள். அவசரமாய் எளிமையாய் கோவிலில் திருமணம் நடந்தேறியது. அன்று சாவித்திரி மோகனை நிமிர்ந்து பார்த்து அதிர்ச்சி யடைந்தாள். அசிங்கமாய், கறுப்பாய், குண்டாய் இருந்தான். பெண்ணொருத்தி தன் கணவன் பற்றி காணும் கனவுக்கு எதிராக இருந்தான். இவள் கனவுகள் உடைந்தன. அழகில்லா விடினும் குணமாய் இருப்பான் என்று தன் புது வாழ்வை ஆரம்பித்தாள்.

ஆரம்பத்தில் இல்லற வாழ்வு இனித்தது. பின் மோகனின் சுய குணம் வெளிவரத் தொடங்கியது. அவன் குடியிற்கு அடிமையானவனாய் இருந்தான். தந்தையோடு தன் காலங்களை கழித்து அனுபவத்தில் இதனையும் சமாளித்துக்கொண்டாள். இவளின் துயரங்களின் போது துணையாயிருந்த செல்லம்மா மகளின் வாழ்க்கை வீணாய் போவதை எண்ணி எண்ணி இறையடி சேர்ந்தாள். எல்லா வேதனைகளையும் ஒன்றாய் சுமந்த சாவித்திரி வயிற்றினில் தன் வாரிசையும் சுமக்கத் தொடங்கினாள்.

இந்த பொழுதில் A/L பெறுபேறுகள் வெளி வந்தன. சாவித்திரி சிறப்பான முறையில் மூன்று பாடங்களிலும் சிறப்புச் சித்தி பெற்றிருந்தாள். இவளின் பெறுபேறுகேட்டு இவளைப் பார்க்க பள்ளித்தோழி கண்ணகி வந்தாள். சாவித்திரியின் கதையைக்கேட்ட அவள் சாவித்திரியின் கணவனிற்கு தெரியாமல் சாவித்திரிக்கு வேலை வேண்டி விண்ணப்ப படிவம் ஒன்று கம்பனிக்கு அனுப்பினாள். விதியும் கைவர வேலை கிடைத்தது. ஆனால் மோகன் சம்மதிக்கவில்லை. இத் தருணத்தில் தான் மோகனுக்கு ஏற்கனவே திருமணம் முடிந்தது என்ற மற்றொரு உண்மை தெரிய வந்தது. எதிர்த்துக் கேட்ட சாவித்திரிக்கு மோகன் சொன்னபதில் அவளை விழிக்கச் செய்தது.

ஆணடிமைத்தனம், அவளுள் தூங்கிய பெண்மையைத் தட்டி எழுப்பியது. பூவாய் இருந்த அவள் போராடி ஜெயிக்க புயலாக மாறி வீட்டை விட்டு வெளியே வந்தாள். இறுதியாய் அவள் மோகனிடம் கூறிய வார்த்தைகள் "குட்டக் குட்ட குனிந்து பழமையில் வாழ மாட்டேன். பாரதி கண்ட புதுமைப் பெண்ணாய் உன் முன்னால் வாழ்ந்து காட்டுறன். உன் போன்றோருக்கு பெண்ணின் தைரியத்தை தெரிய வைக்கிறேன்" எனக் கூறி புயலாய் வெளிவந்தாள். அதன் பின் எத்தனையோ மாற்றம். நண்பி வீட்டிலிருந்தபடியே உழைத்து வீடு கட்டி தன் குழந்தையோடு வாழ்ந்து கொண்டிருக் கிறாள். வைஷ்ணவியை வாழவைக்க வேண்டு மென்று அவள் வைராக்கியத்துடன் வாழ்ந்து கொண்டிருக்கிறாள்.

"பிள்ள பிள்ள" என்ற குரல் கேட்டு நினைவு திரும்பிய சாவித்திரி நிஜ உலகிற்கு வந்து வெளியில் வந்து பார்த்தாள். செல்வராசா அங்கு நின்று கொண்டிருந்தான். குடியை கைவிட்டு தனிமையின் கொடுமையை அனுபவித்த செல்வராசா, சாவித்திரியிடம் மன்னிப்பு வேண்டி நின்றான். "என்னப்பா, உள்ள வாங்க இது உங்க வீடு" என்று வீட்டினுள் அழைத்துச் சென்றாள். தொட்டிலினில் தூங்கிய தன் பேத்தியை அள்ளி எடுத்து அணைத்தான் செல்வராசா. சாவித்திரி ஜெயித்துவிட்டாள். இல்லை இல்லை பெண்மை ஜெயித்துவிட்டது. பூங்காற்று தான் புயலாகிறது. அன்பாய் இருக்கும்வரை அன்னையாய் இருப்பாள் பெண். அதுவே அத்துமீறும் போது புயலாகவும் மாறுவாள் பெண். பெண்மை வைராக்கியம் நிறைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொறுமையைப் பேணுவோம்

யே.சுலேந்திரினி
கலைப்பிரிவு உயர்தரம் (2016)



மனித வாழ்வில் பொறுமை பேணல் முக்கிய மான சிறந்த பண்புகளில் ஒன்றாக காணப்படுகின் றது. மனித வாழ்வுக்கும் உயர்ச்சிக்கும் பொறுமை அடிப்படையாக அமைகின்றது. பொறுமை பேணி யோர் பலர் தம் வாழ்வில் உயர்வடைந்தமையை வரலாறுகள் நமக்குச் சுட்டி காட்டுகின்றன. புராண இதிகாசங்களிலும் இதற்கான சான்றை காண முடியும்.

பொறுமையுடையோர் தம் வாழ்வில் பிரச் சினைகளை சுமூகமாக தீர்த்துக்கொள்வர் அவர் கள் வாழ்வும் வளம் பெறும் "பொறுத்தார் உலகாழ் வார்" எனும் முதுமொழி இதனை எடுத்துக் காட்கின்றது. பொறுமை இழந்தோர் பெரும் துன்பங்களுக்குள்ளாவர். "தீதும் நன்றும் பிறர் தர வாரா" என்பது சங்ககால சான்றோர் வாக்கு. பெருமையும் சிறுமையும் தான் தர வருவனவே யன்றிப் பிறர்தர வருவனவல்ல என்னும் உண்மை, நன்மை நம் கையில் அடங்கியுள்ளது என்பதனை உணர்த்துகின்றது. பொறுமையுடை யோர் பணிவுடையோராக விளங்குவர்.

மனம், மொழி, மெய் எனும் மூன்று வகையாலும் பணிவுடையோராகவும் அடக்க முடையோராகவும் இருப்பர்.

"பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
கருமமே கட்டளைக்கல்" என்பது வள்ளுவர் வாக்கு

பொறுமையுடையோர் பெருமை பெறுவோர் என்பதையும் உயர்வடைவர் என்பதையும் உணர்த்தி நிற்கின்றன. இதிகாசப் புராணங்களை நோக்குவோமாயின் பொறுமைக் குணம் கொண்டோர் தம்வாழ்வில் வெற்றிகளையும் அவ்வாறில்லாதோர் ஈற்றில் தோல்விகளையும் சந்தித்து கொண்டதை அறிய முடிகின்றது.

மாணவர்களாகிய நாம் பாடசாலை வாழ்க் கையில் மட்டுமல்லாமல் சமூக வாழ்க்கையிலும் பொறுமையை கடைப்பிடித்து ஒழுக வேண்டும். பொறுமை பேணுவதன் மூலம் உயர்வுகாண முடியும். அது பொன் போன்றது பொறுமைப் பண்பை நாளாந்த வாழ்க்கையில் சீராக கடைப் பிடிப்போம் என நினைத்தால் நமது எதிர்காலம் சிறப்படைய முடியும் பெரிதும் பொறுமையுடை யோரை சமூகம் மதிப்பளித்து கௌரவிக்கும் சுருங்க கூறின் பொறுமை பொக்கிஷம் போன்றது.

வாழ்வுக்கும் உயர்ச்சிக்கும் அடிப்படையாக அமையும் பொறுமை பண்பை என்றும் பேணுதல் வேண்டும் இதன் மூலமே சமூக வாழ்வில் நாம் உயர்வடைய முடியும்.

"பொறுமையை பேணுவோம் வாழ்வில் உயர்வு காண முயல்வோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தலைமைத்துவம்

வை. சிரோமியா
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

"மனிதனின் சகல அசைவியக்கங்களிலும் தலைவர் செல்வாக்கு செலுத்துகிறார். ஒவ்வோர் இடத்திலும் அவர் இருக்க வேண்டியது தவிர்க்க முடியாதது எதிரிகள் நல்லதொரு தலைவரால் வழி நடத்தப்படும்போது தலைவர் இல்லாத மற்றப் படைக்கு என்ன நடக்கும் என்பதற்கு இந்த யுத்தம் சாட்சி சொல்கிறது"

புகழ்பெற்ற வரலாற்றாசிரியரான தோமஸ் கார்லைல் அவர்களின் மேற்படி கூற்று மனித வாழ்க்கையில் தலைமைத்துவத்தின் முக்கியத் துவத்தைக் கோடிட்டுக்காட்டுகிறது. தேசங்களை மாத்திரமல்லாது சமூகங்களையும் நிறுவனங் களையும், குடும்பங்களையும் கட்டியெழுப்பவும் பாதுகாத்து வழிநடத்தவும். தலைவர்கள் தேவைப் படுகின்றனர். அரசியல் மட்டுமல்லாது சமயம், மருத்துவம், விஞ்ஞானம், விளையாட்டு, இசை, கலை, இலக்கியம் முதலான எல்லாத்துறைகளி லுமே தலைவர்கள் அவசியமாக இருக்கின்றனர் மனிதர்கள் காடுகளிலும் குகைகளிலும் வாழ்ந்த காலத்திலும் அவர்களைப் பாதுகாக்கவும் வழி நடத்தவும் தலைவர்கள் இருந்திருக்கிறார்கள் பின்னர் தோன்றிய ஆண்டான் அடிமை சமூகத்தி லும் மானியமுறை சமூகத்திலும் கூட தலைவர் கள் இருந்திருக்கிறார்கள். மனித வரலாறு என்பதே ஒருவகையில் பார்த்தால் அரசியல், இராணுவ சமய, சமூக தலைவர்களின் வரலாறாகவே இருக்கிறது. உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு நாட்டிலும் தோன்றிய புராண, இதிகாசங்கள் மற்றும் பண்டைய இலக்கியங்கள் தலைவர்களின் புகழ்பாடுவனவாகவே இருக்கின் றன. எனவே தலைமைத்துவம் என்பது மானிட வாழ்வுடன் பின்னிப்பிணைந்திருப்பதோடு அவனது வாழ்க்கைப் போக்கினைத் தீர்மானிக் கும் சக்தியாகவும் விளங்குகிறது.

தலைவர்கள் பொதுவாக மக்களை வழி நடத்துபவர்கள் எவ்வளவு பேர் ஒரு தலைவனைப் பின்பற்றுகின்றனர் என்பதைப் பொறுத்தே ஒரு தலைவரின் செல்வாக்கு கணிப்பிடப்படுகிறது. பின் பற்றுவோர் இல்லாமல் தலைமைத்துவம் இயங்க முடியாது. எனினும், தலைவர்கள் அனைவரும் மக்களைப் பாதுகாத்து வழிநடத்தும் பணியினை செய்தபோதும் அவர்கள் அனைவரும் அடிப்படை யில் வேறுபட்டவர்கள். தோற்றம், சிந்தனை, ஆளுமை நடத்தை முதலியவற்றிலும் ஒரேமாதி யான தலைவர்களைக் காண்பது அரிதாகும். மகாத்மாகாந்தி, நெல்சன் மண்டேலா, லெனின் மாஓசேதுங், பிடல்காஸ்ரோ மற்றும் சேகுவேரா போன்றோர் தேச விடுதலைக்கான தலைமைத் துவத்தை வழங்கினர். ஜீலியஸ் சீசரும், மகா அலெக்சாண்டரும், ஜெங்கிஸ்கானும், இராஜராஜ சோழனும், அக்பரும் சம்ராஜ்ஜியங்களைக் கட்டி யெழுப்பினர். கௌதம புத்தரும், முகம்மது நபியும், திருநாவுக்கரசரும், கொன்பியூசியசும் மார்ட்டின் லூதரும் மக்களுக்கு ஆன்மீகத் தலைமைத்து துவத்தை வழங்கினர். ஜவஹர்லால்நேரு, லீகுவான்யு, மகத்தீர் மொகமட் போன்றோர் நமது காலத்தில் தேச மீள்நிர்மானத்தில் ஈடுபட்ட தலை வர்களாவர். இந்த வரிசையில் அடொல்ப் ஹிட்லரும் முசோலினியும், இடி அமீனும் கூட தேசத்தின் தலைவர்களாக இருந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அவர்களைத் தமது தலைவர்களாக ஏற்றிருந்தனர்.

ஆக தலைமைத்துவத்தில், தலைவர்களில் எத்தனை வேறுபாடுகள்? ஒரேவிதமான பணியில் ஈடுபட்டிருந்தபோதிலும் தமது இலக்குகளை அடைய அவர்கள் கையாண்ட முறைகள் தமது மக்களுடன் கொண்டிருந்த உறவுநிலைகள், இடைவினைகள் ஆகியவற்றில் பாரிய வேறுபாடுகள் இருக்கவே செய்தன. ஆனால், இவர்கள் அனைவரும் தலைவர்களே!

எனவே தலைமைத்துவம் என்னும் எண்ணக்கரு மனிதனது சிந்தனையை ஆகர்ஷிக்கும் ஒரு கருப்பொருளாக எல்லாக் காலமும் இருந்து வந்துள்ளது. இந்திய, கிரேக்க இதிகாசங்கள் தலைமைத்துவம் பற்றிக் கூறுகின்றன. சோக்ரற்றீஸ், பிளேற்றோ, அரிஸ்டோட்டில் முதலிய கிரேக்க தத்துவஞானிகள் தலைமைத்துவத்தை விளக்க முயன்றுள்ளனர். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் பிளேற்றோ எழுதிய "குடியரசு" (The Republic) என்னும் நூல்தான் தலைமைத்துவம் பற்றிய ஒரு கோட்பாட்டைக் கட்டமைக்க எடுக்கப்பட்ட முதல் முயற்சி எனக் கூறலாம். அதே காலகட்டத்தில் சீனாவில் வாழ்ந்த போரியல் தத்துவாசிரியரான சுன்சூ (Sun Tsu) இராணுவ அரசியல் தலைமைத்துவம் பற்றிய தனது நூலில் (The Art of war) தலைமைத் துவம் பற்றி விளக்க முயன்றுள்ளார். பின்வந்த காலத்தில் இத்தாலிய அரசியல் அறிஞரான நிக்கலோ மாக்கியவல்லி இந்தியாவில் மௌரியப் பேரரசில் வாழ்ந்த சாணக்கியர் என்னும் கௌடில்யனும் (அர்த்தசாஸ்திரம்) தலைமைத் துவத்தின் இயல்புகள் பற்றி விளக்க முயன்றனர்.

இவ்வாறு தலைமைத்துவம் பற்றிய கரிசனை, ஆர்வம் எதிர்பார்க்கைகள், ஊகங்கள், அனுமானங்கள் ஆகியன நீண்டகாலமாகவே இருந்துவந்த போதிலும் தலைமைத்துவம் பற்றிய விஞ்ஞானபூர்வமான ஆய்வுகள் 20ம் நூற்றாண்டிலேயே ஆரம்பித்தன. அயோவா பல்கலைக் கழகத்தில் 1989ல் கோற்லீவின் (Kurttewun) தலைமையில் மேற்கொள்ளப்பட்ட தலைமைத்துவ ஆய்வு இத் துறையில் முதன்மை ஆய்வாகக் கொள்ளப்படுகிறது. அது முதல் தலைமைத்துவம் பற்றி ஆயிரக் கணக்கான ஆய்வுகள் மேற்கொள் எப்பட்டுள்ளன.

தலைமைத்துவம் என்றால் என்ன தலைவரின் வகிபங்குகள், தலைமைத்துவ வகைகள், விளைதிறன் ஆகியவற்றையும் விளங்கிக் கொள்ள வேண்டும். அத்துடன் தலைமைத்துவத்துக்கும் முகாமைத்துவத்துக்கும் இடையிலுள்ள வேறுபாடுகளையும் நாம் அறிந்து கொள்ள வேண்டும். தலைமைத்துவம் என்பது பொதுவழக்கில் பயன்படுத்தப்படும் ஒரு சொல்லாகும் ஆனால், தலைமைத்துவ ஆய்வு என்பது விஞ்ஞான பூர்வமான ஒரு கற்கை நெறியாகும். பொது வழக்கிலுள்ள ஒரு சொல்லை சரியாக வரைவிலக்கணப்படுத்தாமல் விஞ்ஞான பூர்வமான ஆய்வுகளில் பயன்படுத்தும் போது இவ்வாறான குழப்பநிலை ஏற்படுவது தவிர்க்கமுடியாது. இது மட்டுமல்லாது தலைமைத்துவத்துடன் தொடர்புடைய அதிகாரம், வலுவாண்மை, முகாமைத்துவம், நிர்வாகம் போன்ற சொற்களும் கூட இவ்வாறான குழப்பத்தையே கொண்டிருக்கின்றன. இவற்றை துல்லியமாக வரையறை செய்வது மிகவும் சிரமமான காரியம். எனவே, தலைமைத்துவம் பற்றிய ஆய்வில் ஈடுபடுவோருக்கு இது ஒவ்வொரு விதமாகத் தோற்றமளிக்கிறது. இக் கருத்தினை பெனிஸ் (Bennis 1959) பின் வருமாறு கூறுகிறார். "தலைமைத்துவம் என்னும் எண்ணக்கருவை விளங்கிக்கொள்ளுதல் என்பது "மாயமான் வேட்டையாகும்". அதனுடைய சிக்கல் தன்மையும் வழுவழுப்பும் ஒவ்வொரு முறையும் புதிய புதிய தோற்றங்களை எமக்குக் காட்டுகின்றன. நாம் அதனை விளக்குவதற்கு எண்ணிறைந்த சொற்களை கண்டறிந்துவிட்டோம். ஆனால், இது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னும் முடிந்த பாடில்லை. தலைமைத்துவம் என்னும் எண்ணக்கரு இன்னும் துல்லியமாக வரையறை செய்யப்படவில்லை. தலைமைத்துவம் என்பது பிறரது நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் செயன்முறை. நபர்களின் செயற்பாடுகளை நெறிப்படுத்துவதற்கு அச்சுறுத்தல் அல்லாத முறைகளை தலைமைத்துவம் பயன்படுத்துகிறது. தலைமைத்துவம் நபர்களை இலக்குகளை அடைய வழிப்படுத்துகிறது. தலைமைத்துவம் ஒரு குழுவுக்கான குறிப்பிட்ட காலவரையறையைக் கொண்ட வகிபங்கு. தலைவரிடம் பிறரில் செல்வாக்கு செலுத்தும் பண்புகள் உள்ளன. தலைமைத்துவம் நபர்களுக்குத் தரிசன நோக்கினை வழங்குகிறது. தலைவர் பின்பற்றுவோரில் செல்வாக்கு செலுத்துவதுபோல பின்பற்றுவோரும் தலைவரில் செல்வாக்கு செலுத்துகின்றனர். தலைமைத்துவம் குறிப்பிட்ட சூழலில் செயற்படுகிறது. தலைமைத்துவம் நடத்தையில் செல்வாக்கு செலுத்தும் தொடர் செயன்முறை. தலைமைத்துவம் பன்முகத்தன்மையைக் கொண்ட ஓர் உளவியல் செயன்முறை.

அநேகமாக மேற்கூறிய பண்புகளில் ஒன்றோ பலவோ தலைமைத்துவம் பற்றிய ஒவ்வொரு வரைவிலக்கணத்திலும் காணப்படுகின்றன. இந்த வரைவிலக்கணங்களின் அடிப்படையில் நோக்கும் போது தலைவர் என்பவர் பின்வரும் முக்கிய பணிகளைச் செய்கிறார். அதாவது நண்பனாகவும், வழிகாட்டியாகவும், ஆலோசகராகவும் மட்டுமல்லாது குருவாகவும், தத்துவாசிரியராகவும் செயற்படுதல் தமது பணியாளரின்/ பின்பற்றுவோரின் உள்ளார்ந்த ஆற்றல்களை இனங்கண்டு அவற்றைப் பூரணமாக விருத்தி செய்வதற்கு ஆவன செய்தல், பணியாளரின்/ பின்பற்றுவோரின் நம்பிக்கையை வென்றெடுத்து அவர்களை ஒரு குழுவாக கட்டி எழுப்பி நிறுவன நோக்குகளை நோக்கி அவர்களை ஆற்றுப்படுத்தல், பணியாளர் / பின்பற்றுவோர் மத்தியில் உயர்மட்ட கட்டொழுங்கைப் பேணுவதோடு அவர்களுக்குப் பொறுப்புக்களை வழங்கி அவர்களது ஊக்கல் மட்டம் எப்போதும் உயர்மட்டத்தில் இருக்குமாறு உறுதிப்படுத்தல், குழுக்கள் மத்தியில் பிரச்சினைகள் வரும்போது அவற்றைத் தீர்த்து அவர்களிடையே பரஸ்பர நல்லுறவையும், விளக்கத்தையும், ஒற்றுமையையும் கட்டி எழுப்புதல். குழுக்களுக்கு வலுவூட்டி அவர்களிடையே சுயவழிகாட்டல் மற்றும் சுயதலைமைத்துவ பண்புகளை கட்டியெழுப்புதல், பணியாளர் / பின்பற்றுவோரின் நலவுரிமையைப் பாதுகாத்து நிறுவன - வெளிச்சூழல் தொடர்பில் அவர்களது பேச்சாளராக செயற்படுதல், இவ்வாறாக தலைமைத்துவமானது ஒவ்வொருவர் மனதிலும் நீங்காத ஒளிக்கீற்றுக்களாக திகழ வேண்டும்.

ஒவ்வொரு மனிதனும் தனக்கு தானே தலைவன் என்ற ரீதியில் சிந்தித்து செயல்பட வேண்டும். அவ்வாறு சிந்தித்து செயற்படும்போது தான் தலைமைத்துவம் முழுமைபெறும். மானிடர் ஆகிய நாமனைவரும் எமக்கு இறைவனின் கொடையாக கிடைத்த வாழ்க் கையை வாழும் காலம்வரை இன்றைய உலகில் ஏற்படும் சவால்களை எதிர்கொண்டு வாழ்விலே முன்னேறிவாழ தலைமைத்துவம் என்னும் ஆயுதம் ஏந்தி வாழ்வில் முன்னேறவேண்டும். தலைமைத் துவம் என்னும் ஆயுதத்தை மட்டும் ஏந்தியதோடு மட்டுமல்லாமல் அந்த ஆயுதத்தை உயிருள்ள ஒவ்வொரு ஜீவராசிக்கும் ஆபத்து ஏற்படாது பயன்படும் வண்ணம் அதனை உபயோகிக்க வேண்டும். இவ்வாறாக நாம் தலைமைத்துவத்தில் முன்னேறுவதனூடாக வாழ்க்கையில் வெற்றி பெறுவோம் என்பதில் ஐயமில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழமொழியும் கருத்தும்

ஞா.மேரிகுயின்சி
கலைப்பிரிவு உயர்தரம்

1) அன்பற்ற மாமிக்குக் கும்பீடுங் குற்றமே.

அன்பில்லாதவர்களுக்கு நல்ல செயல்களும் குறையாகவே விளக்கும்

2) அறுபத்து நாலடிக் கம்பத்திலேறி ஆடினாலும், அடியில் இறங்கித் தான் கூலி வாங்க வேண்டும்.

உயர்ந்த நிலைக்குச் சென்றாலும் பழையதை மறக்கக்கூடாது.

3) ஆடு கொழுக்கிறது இடையனுக்கு லாபம்.

ஒருவருடைய வளர்ச்சி மற்றையவருக்கு இலாபம்

4) ஆவும் தென்னையும் ஐந்து வருடத்தில் பலன்தரும்.

பசு, தென்னை ஆகியன குறுகிய காலத்தில் பயன் தருவன

5) இட்டார் பெரியோர், இடாதார் இழி குலத்தோர்.

தருமம் செய்தவரே உயர்ந்தவர் தர்மம் செய்யாதவரே இழிந்தவர்

6) இரும்பு பிடித்த கையும் சிரங்கு பிடித்த கையும் சும்மா இராது.

தொடர்ந்து . ஒரு வேலையைச் செய்தவர் இடைவிடாது ஏதோ ஒன்றைச் செய்வார்

7) இரும்படிக்கிற இடத்தில் ஈக்கு என்ன வேலை.

துன்பத்தில் தானாக மாட்டிக் கொள்ளல்

8) இமைக்குற்றம் கண்ணுக்குத் தெரியாது.

தனது பிழைகள் தமக்குத் தென்படுவதில்லை

9) ஈக்குவிடம், தலையில் தேளுக்குவிடம், கொடுக்கில்

எல்லோரிடத்திலும் சிறு தீமைகளாவது இருக்கும்

10) உண்ட உடம்பில் உறுதி, உழுத புலத்தில் நெல்லு

முயற்சியுண்டானால் பயனுண்டு

11) ஈனரை அடுத்தால் மானங் கெடவரும்

கெட்டவர் உறவு அவமானத்தைத் தரும்

12) ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்

கொடுக்காதவர் பணம் தீயவர்களால் அபகரிக்கப்படும்

13) உயிருள்ள மட்டும் தைரியம் விடலாமா

துணிவு/வலிமையைக் கைவிடக்கூடாது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

14) உழுகிற நாளில் ஊருக்குப் போனால், அறுக்கிற நாளில் ஆள் தேவையில்லை.

கடின உழைப்பில் பங்கு கொள்ளாமல் பலனில் மட்டும் பங்கு கொள்ளல்.

15) உன்னை வஞ்சித்தவனை ஒருபோதும் நம்பாதே.

ஏமாற்றியவரை ஒருபோதும் நம்பக்கூடாது

17) உள்ளம் தீய்பெரிய உதடு பழுஞ் சொரியும்

உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுதல்

18) எட்டின மட்டும் வெட்டும் கத்தி, எட்டாத மட்டும் வெட்டும் பணம்.

பணத்தின் வலிமை

19) எதை அடக்காவிட்டாலும் நாக்கை அடக்க வேண்டும்.

நாவடக்கத்தின் அவசியம்

20) எல்லோரும் பல்லக்கு ஏறினால், பல்லக்கைத் தூக்கிறவர் யார்.

எல்லோரும் ஒரு தொழிலைச் செய்தால் வாழமுடியாது

21) ஏழை அழுத கண்ணீர் கூரிய வாளையும் ஒடுக்கும்.

ஏழைகள் விடும் கண்ணீர் வலிமையானது

22) எளியாரை வலியார் அடித்தால் வலியாரைத் தெய்வம் அடிக்கும்.

தெய்வத் தண்டனைக்குத் தப்ப முடியாது

23) ஒரு பொய்யை மறைக்க ஒன்பது பொய் சொல்லுதல்.

ஒரு பொய்பல பொய்களுக்கு வித்திடும்

24) கட்டிக் கொடுத்த சோறும், கற்றுக்கொடுத்த சொல்லும் எத்தனை நாள் நிற்கும்.

சுய ஆற்றலை வளர்க்க வேண்டும்

25) கடப்பாரையை விழுங்கி விட்டுச் சுக்கு நீர் குடித்தால் தீருமா?

பெருந்துன்பத்தில் மாட்டிவிட்டு, சிறு முயற்சி செய்தால் தீராது.

26) கடுகளவான நெருப்பானாலும் போரைக் கொளுத்திவிடும்.

சிறிய தீமையும் பெரிய அழிவைத்தரும்

27) கண்ட பாவனையில் கொண்டிடும் பகை

பார்த்த விடயங்களைப் பேசுதல் கூடாது

28) கபடச் சொல்லிலும் கடிய சொல்லே மேல்

வஞ்சனை தரும் வார்த்தைகளிலும் கடுமையான வார்த்தைகள் மேலானவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன தொழிநுட்ப சாதனங்களும் அவற்றால் ஏற்படும் விளைவுகளும்

ஜி.சகாயமேரி
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

மனித முயற்சியினால் அவனது அன்றாட கருமங்களை இலகுவாக்குவதற்கு அவனால் செய்யப்பட்ட நவீன உபகரணமே நவீன தொழில் நுட்ப சாதனமாகும். தற்கால சூழலில் இந் நவீன தொழில்நுட்ப சாதனங்கள் யாவும் மனிதனின் தேவையை இலகுவாக செய்து முடிப் பதற்கு பெரிதும் துணைபோகின்றன. மனித தேவையை இலகுபடுத்துவது மட்டு மன்றி நேரத்தை குறைத்து அவனுக்கு ஒய்வு நிலையையும் பெற்றுக் கொடுக்கின்றது. நமது முன்னோர் காலத்தை எடுத்து நோக்குவோ மானால் ஆரம்பத்தில் தற்போதைய நிலையைப் போன்று இருக்கவில்லை. மாறாக அக்காலத்தில் நவீன வளர்ச்சி என்பது குறைந்த அளவிலேயே காணப்பட்டது. அதன் காரணமாக அங்கு நவீன தொழில்நுட்ப சாதனங்கள் பெரிதாக பயன்படுத்தப் படவில்லை.

நாம் வாழுகின்ற தற்கால சூழலை எடுத்து நோக்குவோமானால் மனிதன் தனது முயற்சியி னாலேயே பலவிதமான தொழில்நுட்ப சாதனங் களை உருவாக்குகின்றான் அவ்வாறான தொழி நுட்ப சாதனங்களில் தொலைக்காட்சி தொலை பேசி, கணினி, இணையம், ஈமெயில், மேசை கணினி, மின்விசிறி ஆடை இயந்திரம், அரைக் கும் இயந்திரம் போன்றன என அடுக்கி கொண்டே போகலாம் மனிதன் தனது தொடர்பாடல் சேவை யைப் பூர்த்திசெய்வதோடு மட்டுமல்லாமல் தனது அன்றாட தேவையினையும் பூர்த்தி செய்ய இந் நவீன தொழில்நுட்ப சாதனங்கள் மனித தேவையை பூர்த்தி செய்வதால் நன்மை கிடைப்ப தோடு பலவாறான வழிகளிலே தீமைகளும் நிகழ் கின்றன. இவற்றிலே முதலில் நாம் நன்மை களைப்பற்றி விரிவாக நோக்குவோம்.

நன்மைகளை நோக்குவோமானால் இத் தொழில்நுட்ப சாதனங்களால் ஏற்பட்ட நன்மை களை இடைவிடாது சொல்லிக் கொண்டே போகலாம். அந்தளவிற்கு தொழி நுட்பம் தற்காலத்திலே விரைவாகவே வளர்ச்சியடைந் துள்ளது. இதற்கு முக்கிய அடிப்படை காரணியாகத் திகழ்பவன் மனிதனேயாவான்.

அதாவது மனிதனாலேயே தொழிநுட்ப சாதனங்கள் கண்டுபிடிக்கப்படுகின்றன. இச் சாதனங்களுள் வானொலியை எடுத்து நோக்கு வோமானால் அது மக்களுக்கு பேர் உதவி செய்ய வல்லது. செவிகளைப் பயன்படுத்தி பல விடயங் களையும் அறியவும். நயக்கவும் சாமானிய மனி தனுக்கு உதவுவது வானொலியே. வானொலி மூலம் தமது அறிவைப் விருத்தி செய்து கொள்ள வும், பல்வேறு கலையாக்கங்களை ஒலிபரப்பு செய்ய உதவியும் செய்கின்ற பணிகள் கணக்கில் அடங்காது. அன்றியும் பத்திரிகையில் படிப்ப வற்றையும் கூடிய ஆர்வத்தை நிறைவு செய்யும் வகையிலும் அறிஞர்கள் அரசியல் வாதிகள் போன்றோரின் குரல்களிலேயே அவர்கள் கூறு வனவற்றை கேட்கவும் கலைஞர்களின் நிகழ்ச் சிகளை செவிமடுக்கவும் வசதி செய் கின்றது.

அதுமட்டுமன்றி பத்திரிகைகளும் தொழிநுட்ப சாதனங்களில் முக்கியமானதாக காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவை உலக செய்திகளை உடனுக்குடன் எமது வீடுகளுக்கே கொண்டுவந்து விடுகின்றன. எந்த மூலையில் ஒருவன் வாழ்ந்தாலும் அவன் உலகில் நிகழ்ந்தவற்றை வெகுவிரைவில் அறிந்துகொள்ள பத்திரிகைகள் உதவி வரு கின்றன. செய்திகளோடு மட்டும் நின்றுவிடாது அறிவோடு தொடர்புடைய பல விடயங்களில் எம்மை ஈடுபடவும் வைக்கிறது. அது மட்டுமன்றி குறிப்பிட்ட பிரதேசத்தில் ஏதாவதொரு சேதம் ஏற்பட்டாலோ, அல்லது பிரச்சினைகள் இடம் பெற்றாலோ அதனை தகுந்த தரவுகளோடு தந்து விடுவது மட்டுமன்றி கமராக்காட்சிகள் மூலமாக சம்பவத்தையே நேரடியாக அவதானிக்க வைக்கிறது.

அடுத்து தொலைக்காட்சி என்ற சாதனத்தை எடுத்து நோக்குவோமாயின் அது எமக்கு பல தகவல்கள், விடயங்களை தரும் ஒரு ஊடகமாக காணப்படுகிறது. அத்தோடு எமக்கு ஏதாவது துன்பம் நிகழ்ந்தவிடத்து அதனை மறப்பதற்காக தொலைக்காட்சியில் பல சினிமாக்கள், நகைச் சுவைகள், தகவல்கள், இனிமையான பாடல்கள் போன்றவற்றை பார்க்கின்றோம். அதனூடாக நாம் எமது கவலைகளை மறந்து அதிலிருந்து வெளிவர அது எமக்கு பெரிதும் துணைபுரிகின்றது. அத்தோடு எமது பொழுதுபோக்கு சம்பந்தமான பல விடயங்களை அறியலாம். கார்ட்டூன்போன்ற சித்திரங்கள் எமது உணர்வை வியக்க வைக்கின் றன. அந்தளவுக்கு தொலைக்காட்சி மனிதனுக்கு பயன்படும் வகையிலுள்ளது.

அத்தோடு மின்விசிறி, துணி துவைக்கும் இயந்திரம், அரைக்கும் இயந்திரம் போன்ற பல் வேறுபட்ட சாதனங்கள் தற்கால உலகில் மனித பயன்பாட்டிற்கு பெரிதும் துணைபோகின்றன.

மனித பயன்பாட்டிற்கு பெரிதும் துணை புரியும் இத்தகைய நவீன தொழிநுட்ப சாதனங்கள் மனிதனுக்கு தீமையை விளைவிப்பதாகவும் அமைகின்றன. அந்தவகையில் தொழிநுட்ப சாதனங்களால் ஏற்படும் தீமைகளை எடுத்து நோக்குவோமாயின்

நவீன தொழிநுட்ப சாதனங்கள் நன்மைகள் பலவற்றை தருகின்ற போதிலும் அதற்கு சமமாக தீமையையும் தருகின்றன. அந்த வகையில் முதலில் தொலைக்காட்சியை எடுத்து நோக்கு வோமானால் தொலைக்காட்சிக்கு அருகில் நாம் சென்று அதனை பார்க்கும் போது எமது கண்கள் பாதிக்கப்படும். அத்தோடு வயதுக்கு பொருத்தமற்ற விடயங்கள், படங்கள் காண்பிக்கப்படுவதால் அதனை நோக்குமிடத்து அதன் மூலமாக மனிதன் தவறுகள், பிறழ்வுகளுக்கு உள்ளாக்கப்படு கின்றான்.

அடுத்தாக தற்கால சூழலில் இளைஞர் மற் றும் மாணவர் சமுதாயத்தை பெரும் சீரழிவிற்கு இட்டுச்செல்லும் சாதனங்களில் முதலானதும், முக்கியமானதாகவும் பல தொழிநுட்ப சாதனங்கள் உள்ளன. அவற்றுள் தொலைபேசி மற்றும் முகப் புத்தகம் போன்றவற்றை குறிப்பிடலாம். அவற் றுள் தொலைபேசியை எடுத்து நோக்குவோ மானால் அது எமக்கு பாரிய தீமையை ஏற்படுத்தி தருகிறது. தெரியாதவர்களுடன் தொலை தொடர்பை ஏற்படுத்துவதன் வழியாகவும், தீய படங்களை பார்ப்பதன் ஊடாகவும் சமூகத்திலே தீயவர்கள் என்ற பெயரை பெறும் அளவிற்கு தீயதை எமக்கு ஏற்படுத்துகிறது.

அடுத்ததாக முகப்புத்தகம் என்ற இணைய வழி கணனி தொழிநுட்ப சாதனத்தை எடுத்து நோக்குவோமானால் அதனூடாகவும் யாரென்று தெரியாத நபர்களுடன் தொடர்பு கொண்டு அதனூ டாக நண்பர்களாகி பின்னர் தவறான விடயங் களில் ஈடுபட்டு, தீய நாட்டங் கொண்ட மனிதர்க ளாக மாறிவிடும் சமுதாயம் இன்று காணப்படுகி றது. அந்தவகையில் தற்கால உலகில் முகப் புத்தகம் என்ற ஊடகம் இளைஞர் சமுதாயத்தை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரும் தீங்கிற்கு இட்டுச் செல்கிறது. அது மட்டுமன்றி பாடசாலை கற்கும் மாணவர்கள் கூட இன்று தமது பாடபுத்தகத்தை படிப்பதற்கு பதிலாக முகப்புத்தகத்தையே பயன்படுத்தி வருகிறார்கள். அது எமக்கு பெரும் கவலைக்குரிய விடயமாகவே காணப்படுகிறது. அந்தவகையில் முகப்புத்தகம் என்பது எம்மை தவறான வழிக்கு உட்படுத்துகிறது. ஆகவே இவ்வாறாக நவீன தொழிநுட்ப சாதனங்கள் தீமையை ஏற்படுத்துகின்றன.

எனவே நாம் எந்தவொரு விடயத்தை எடுத்து நோக்கினாலும் அதிலே நன்மையும் உண்டு. தீமையும் உண்டு. ஒரு கத்தியை எடுத்து நோக்கினால் அக்கருவி ஒரு பொருளை வெட்டுவதற்கும் பயன்படுகிறது. அதே நேரம் ஒருவனை கொலை செய்யவும் பயன்படுகிறது.

எனவே தொழிநுட்ப சாதனங்களால் நன்மையும், தீமையும் மாறி மாறி நிகழ்கின்றன. தொழிநுட்ப சாதனங்களல்ல மாறாக அதனை உபயோகிப்பவர்களினாலே அதன் நன்மையும், தீமையும் விளைகின்றது. ஆகவே மாணவராகிய நாம் இந் நவீன தொழிநுட்ப சாதனங்களை தகுந்த முறையில் பயன்படுத்தி அதன் மூலமாக நிறைவான பயனை அடைவோம்.


# பெண்ணே விழித்திரு

விழித்திடு பெண்ணே விழித்திடு
இயந்திர உலகில் புது யுகம் படைத்திடு
பதுங்கிக் கிடந்த காலம் மறைய
பாயும் புலிபோல் விழித்திடு

அடிமையின் விலங்கொடிக்க – உன்
உரிமைக் குரலினை எழுப்பிடு
சமயல் அறையுடன் சரணடையாதே
சட்ட சபையிலும் உனக்கு இடமுண்டு

மானிடப் படைப்பாளி உன்னையே
மானிடர் சிதைப்பதை பொறுத்திராய்
விதியினை வென்றிட விழித்திடு
மதி கொண்ட மாது எழுந்திடு

கல்வியில் கலையில் முன்னேறு
கணனி உலகையும் உன்வயமாக்கு
கருணை, கடமையை இருகண்ணாக்கு
கருமை அகல, பகலவன் ஆகு.



அ.அபிநயா
கலைப்பிரிவு உயர்தரம் (2016)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "மணிமேகலை" கூறும் அறக்கருத்துக்கள்

யோ.கோகிலா
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

தமிழ் இலக்கிய வரலாற்றில் முதன் மூன்று நூற்றாண்டுகளும் சங்ககாலமாகும். தென் மதுரையில் முதற்சங்கமும், கபாடபுரத்தில் இடைச் சங்கமும், மதுரையில் கடைச்சங்கமும் அமைத்து தமிழ் வளர்க்கப்பட்டது. அக்கால இலக்கியங்கள் அகத்திணை, புறத்திணை என இரண்டாக பிரிந்து அகம் கூறுவனவாகவும், புறம் கூறுவன வாகவும் காணப்பட்டன. எனினும் ஐவகை நிலங்களுக் குரிய போர், காதல் போன்ற ஒழுக்கங்களும் மற்றும் மன்னனிடம் உதவி பெறும் பொருட்டு ஆற்றுப்படுத்தல் என்னும் இலக்கியமும் கூறப்படு கிறது. அவ்வாறே மன்னனுக்கும் மக்களுக்கும் இடையிலான தொடர்புகள் பேணப்பட்டுவந்தது. இதனால் மக்களுக்கு அறம் கூறும் வகையிலான அறக்கருத்துக்கள் எதுவும் தோற்றம் பெற வில்லை.



சங்ககாலத்தின் இறுதிப்பகுதியில் ஆரிய முறையில் வந்த வர்ணதர்ம கோட்பாடு தமிழ் நாட்டில் செல்வாக்கு பெற்றமையால் மன்னர்கள் தம்மை சத்திரியர்களாகவும் தாம் ஆழ்பவர்களாக வும் மக்கள் ஆழப்படுபவர்களாகவும் கருதி வந்த னர். இதனால் மன்னனுக்கும் மக்களுக் கிடையே யான உறவு படிப்படியாக சிதையத் தொடங்கியது. மூவேந்தர் அதிகாரம் ஆட்டம் காண, வட நாட்டை சேர்ந்த "களப்பிரார்கள்" தமிழ் நாட்டைக் கைப் பற்றி ஆழத் தொடங்கினர். அதனால் அரசியல் அடிப்படையில் இக்காலத்தை "தமிழ்நாட்டின் இருண்டகாலம்" என்றார் நீலகண்ட சாஸ்திரி. இப் பாகுபாடுகளால் வடமொழிக்கருத்துகளும் கதை களும் தமிழ் இலக்கியத்தை ஆக்கிரமித்து மத துறவிகளும் தமிழ்நாட்டிற்கு வந்து தம்முடைய அறப்போதனை களை நிலைநாட்ட முயன்றனர். எனவே இச்சங்கமருவிய காலத்தில் மகா வீரராலும், புத்தராலும் செய்யப்பட்ட தீவிரமான பிரச்சாரம் காரணமாக சமணமும், பௌத்தமும் தமிழ் மக்களிடையே மிகுந்த செல்வாக்கைப் பெற்றன. இதனால் களப்பிரார்களும் இம் மதங் களுக்கு பேராதரவு வழங்கி பல்வேறு அறக் கருத்துகளை வழங்கினர். அவ்வாறே இக் காலத்தில் தோன்றிய அறம் கூறும் காப்பியமாக மணிமேகலை காப்பியத்தை குறிப்பிட்டு நோக்கு வோம்.

காவிரிப்பூம் பட்டினத்தில் வாழ்ந்திருந்த இசைவிளங்கு பெருங்குடி மாசாத்துவன் மகனான கோவலனிற்கும் ஆடல், பாடல், அழகு என்னும் மூவகைப்பண்பு முற்றும் நிறைந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடகக் கன்னிகையான மாதவிக்கும் தோன்றிய புதல்வியே 'மணிமேகலை' என்பவளாவாள். இக் காவிரிப் பூம்பட்டினத்தில் இந்திரவிழா நிகழ்ந்து கொண்டிருக்கையில் கோவலன் இறந்த கொடுந்துயரத்தால் மாதவியானவள் உலகப் பற்றிழந்து, மணிமேகலையோடு தானும் துறவு பூண முற்பட்டாள். அவ்வாறே வயந்தமாலைக்கு மாதவி கூறிய மொழிகளை கேட்டிருந்த மணி மேகலைக்கு புத்த பீடிகையைக்கண்டு பழம்பிறப் புணர்த்தி துறவெய்தலுக்குரிய நல்லூழ் விளைந்து நின்றாள். ஆதலால் கோவலனும் கண்ணகியும் உற்ற துன்பத்தை எண்ணி வருந்திய மணி மேகலை கண்ணீர் பெருக்கிற்கு உள்ளாகினாள்.

அவ்வாறே சாலி என்னும் பெண் கரு வுற்றிருந்தாள் அவள் தன் பாவத்திற்கு கழுவாய் நாடித் தென்குமரியில் நீராட பலரோடு புறப்பட்ட னள். செல்லும் வழியில் ஒரு ஆண் மகனைப் பெற்றெடுத்தாள். அவனே 'ஆபுத்திரனாவான்'. அவ்வாறே ஆபுத்திரனோடு. மணிபல்லவத்தை அடைந்த கதையில் கண்ணகி தனது பழம் பிறப்பை உணர்ந்து அறம் கூறத் தொடங்கினாள். அதாவது மணிபல்லவத்தைச் சென்றடைந்த மணிமேகலை அங்கிருக்கும் புத்த பீடிகையை வணங்க அது அவள் பழம் பிறப்பினை உணர்த் திற்று. அதனை கேட்ட மணிமேகலை கூறிய அறக்கருத்துகள் சிலவற்றை நோக்குவோம்.

மணிமேகலை என்னும் இக் காப்பியத்தில் நல்வினை, தீவினை என இரண்டு வினைக ளைப் பற்றி கூறப்படுகிறது. நல்வினை என்பது நாம் இந்த பூமியில் பிறவி பெற்றுவாழும் போது பிறர் மட்டிலும் விலங்குகள் மட்டிலும் அவை களுக்கு நல்லவற்றையே செய்வோமானால் அது நல்வினையாகும். அவ்வாறு இந் நல்வினையை நாம் செய்வதால் மறுபிறவி. இன்றி தேவர்களா கவும், மக்களாகவும் பிரம்மர்களாகவும் பிறப்பீர், என கூறுகிறாள். மற்றும் தீவினையை பார்க்கை யில் நாம் இப் பிறவியில் செய்யும் கடவுளுக்கும் பிறருக்கும் விருப்பமற்ற செயல்களே தீவினைக ளாகும். இத் தீய வினைகளை நாம் செய்வோமே யானால் மறு பிறப்பில் விலங்குகளாகவும், நரகர் களாகவும், பேய்களாகவும் பிறப்போம் என்பதை இம் மணிமேகலை காப்பியம் கூறுகின்றது.

> "விலங்கு நரகரும் பேய்களு மாக்கும்
> கலங்க ஞர்த்தீவினை கடிமின் கடிந்தால்
> தேவரும் மக்களும் பிரம்மரும் ஆகுதீர்
> ஆதலின், நல்வினை அயரா தோம்புமின்"

அவ்வாறே புத்த சமயத்திற் கூறப்படும் அறமும் இங்கு கூறப்படுவதை காணலாம் அதாவது பேரறிவு கொண்டவனும் அனைத்தை யும் பிழையின்றி உணர்ந்தவனுமான ஒருவன் இவ்வுலக மக்களுக்கு அறம் கூற முற்படுவான் அவ்வாறு அந்நாட்களில் அவன் உரைக்கும் அற உபதேசங்களை கேட்போர் துன்பம் தரும் பிறவியிலிருந்து தம்பிவிடுவர். அவ்வாறு கேட்கா தோர் துன்பப் பிறவியில் இருப்பார்கள் என கூறப் படுகிறது.

இவ்வாறு தொகுத்து நோக்கும்போது அறம் பற்றி கூறுகையில் இவ் உலகத்தின் அனைத்து மதங்களுமே ஒரே கருத்தையே கூறுகின்றன. அவ்வாறுதான் நல்வினை, தீவினைபற்றியும் கூறப்பட்டுள்ளது. அது மட்டுமில்லாமல் இவ் இரு வினைகளாலும் ஏற்படும் பிறவிப் பயன்பற்றியும் கூறப்படுவதை காணக்கூடியதாய் உள்ளது.

எனவே சங்கமருவிய காலத்தில் தோற்றம் பெற்ற ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான இம் மணிமேகலை காப்பியம் சீத்தலைச் சாத்தனாரால் இயற்றப்பட்ட ஒன்றாகும். இக் காப்பியம் வழிதவறி சென்ற மக்களை, மன்னர்களை நல்வழிப்படுத்து வதற்காக தோற்றம்பெற்றது. மணிமேகலை பிக்குனிவேடம் பூண்டு கூறிய பௌத்தமத அறக் கருத்துகளும், அறிவுரைகளும், எக்காலத்திற்கும் உகந்தனவெனலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய உலகில் மொழிபெயர்ப்பின் தேவை

செ.மெல்சா
கலைப்பிரிவு உயர்தரம்

மொழி பெயர்ப்பு என்பது இன்று ஒரு கலை என்றே கொள்ளப்படுகிறது. ஆரம்ப காலத்தில் பிற மொழிகளிலிருந்து இலக்கியங்களே பெரும் பாலும் மொழி பெயர்க்கப்பட்டன. அக்காலத்தில் மக்களின் பொழுது போக்கிற்கும் இரசனைக்கும் தீனிபோடுவதே பெரும்பாலும் நோக்கமாக விளங்கியது எனலாம். ஆயினும் அக் காலத்தில் கூட அறிவியல் நூல்களையும் மொழி பெயர்த்தல் வேண்டும் என்ற சிந்தனை சமூகங்களிடையே ஆங்காங்கு காணப்பட்டன.

உலகமயமாக்கலும் தொழிநுட்ப வளர்ச்சியும் இன்று மொழி பெயர்ப்பின் தேவையினை அதிகரித்துள்ளன. உலக மக்களிடையேயான தொடர்புகள் இன்று மிகவும் அதிகரித்துள்ள நிலையில் மொழி பெயர்ப்பு மேலும் மிக முக்கியத்துவம் பெறுவதாகின்றது. உலகக் கிராமத்தின் உதயமானது இன்று மொழி என்ற வரம்பை கடந்து மக்களிடையே கருத்தாடல் வளர்ச்சி ஏற்பட வழியமைத்து விட்டது. எனவே மொழிபெயர்ப்பும் இன்று மிகவும் முக்கியம் பெற்று விளங்குகிறது.

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும் கலைச் செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்கு சேர்ப்பீர்". எனப் பாடினான் பாரதி. மேனாட்டிலே மிகச் சிறப்பாக வளர்ந்துள்ளன விஞ்ஞானம் மற்றும் தொழிநுட்பம் சார்ந்த விடயங்கள் யாவும் இன்று தமிழில் வரவேண்டுமானால் மொழி பெயர்ப்பு அவசியமாகும். இவ்விடத்திலே தான் பிறமொழிகளைக் கற்றுணர்ந்த தமிழறிஞர்களது மொழி பெயர்ப்புப்பணி முக்கியத்துவம் பெறுகிறது.

நமது கீழைத்தேய மொழிகள் ஆன்மீகத்தினதும், கலைகளினதும் ஊற்றாக விளங்குகின்றன. எனினும் நவீன தொழினுட்ப உலகின் ஊற்றுக்களாக விளங்குவது மேலைத்தேச மொழிகளே எல்லா மேலைத்தேச மொழிகளையும் எல்லோரும் கற்றல் என்பது மிகவும் கடினமான செயலாகும். எனவே மேலைத்தேய அறிவியலை நமது சமூகம் உள்ளீர்த்துக் கொள்வதற்கான ஒரே வழி மொழி பெயர்ப்பேயாகும். மொழி வல்லுநர்களான அறிஞர்கள் இம் முயற்சியில் அக்கறை காட்டுவது எமது சமூகத்திற்குச் செய்யும் ஒரு உன்னத பணியாகும். விஞ்ஞானம், தொழிநுட்பம், கணனி போன்றவற்றைக் கற்பதற்கு இன்று ஆங்கிலம் மிகவும் அவசியமாக விளங்குகிறது. காரணம் இத்துறைகளில் மொழி பெயர்ப்பு போதியளவுக்கு வளர்ச்சி காணவில்லை என்பதேயாகும். குறிப்பாகத் தாய்மொழிக் கல்விக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற இலங்கை போன்ற நாடுகளில் இத்தகைய குறைபாடு அதிகம் காணப்படலாம்.

தகவல் தொழில்நுட்ப யுகத்தை நோக்கி உலகம் முன்னேறிவருகிறது. இத்தகவல் தொழிநுட்பப் புரட்சி காரணமாக உலக மக்களிடையே அறிவுத்தேடல் அதிகரித்துள்ளது. அறிவுப் பிரவாகம் ஒன்று ஏற்பட்டுள்ளது. உலக மக்களின் இந்த அறிவுத்தேடலுக்கும் மொழிபெயர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதவலாம் என்பது பலரதும் அபிப்பிராயமாகும். பிறமொழி நூல்களை மொழிபெயர்ப்பதன் மூலமாக இத்தேவை ஈடுசெய்யப்படலாம்.

ஆக மொத்தத்தில் உலகமானது தகவல் தொழிநுட்ப யுகத்தை நோக்கி நகர்ந்துவரும் இக்கால கட்டத்தில் உலகம் சுருங்கி ஒரு கிராமமாகி வரும் இந்த வேளையின் மொழி பெயர்ப்புக்கலையின் தேவை மிக மிக அதிகமான தாகுமெனில் மிகையில்லை.

# பூகோளக் குமுறல்

**திருமதி.யசோதா ஸ்ரீகுமார்**
ஆசிரியர்
யாழ் திருக்குடும்ப கன்னியர் மடம்

மாண்டு விட்டது – பூமி
மனித நடவடிக்கைகளால்
மூடிக் கொண்டது – போர்வை
பூமியை நச்சு வாயுக்கள் கொண்டு


CFC யாம் மெதேன் வாயுவாம்
CO2 வாம் நீராவியும் சேர்ந்தாம்
அத்தனையும் மிக நச்சுவாயுக்கள் – இவை
மனிதனின் வெளியீடுகள்

IR கதிரே போய்விடு
அலறிக் கொண்டது – பூமி
ஐயோ வெப்பம் என்றது
அதற்கு AC போட யார் வருவார் இங்கு?

பனிக்கட்டிகள் உருகிவிட்டன – துருவப்
பனிக்கட்டிகள் உருகிவிட்டன
நீர் மட்டம் விரிந்து போனது – பூமியின்
கடல்மட்டம் உயர்ந்து கொண்டது.

அத்தனையும் தீவுகள் – மனிதா!
அணையப் போகுது உன்னால் தான்
அத்தனையும் தீவுகள் – மனிதா!
அணையப் போகுது உன்னால் மட்டும் தான்.

செவ்வாய் கிரகத்திற்கு சென்றுவிடுவாயாம்
சிதைந்துவிடும்
செவ்வாய் கிரகமும்
சிந்தையற்ற – உன்
செயல்களால்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# செய்யும் தொழிலே தெய்வம்

ஈ.கம்சிகா
தரம் $10^{A}$

செய்யுந் தொழிலே தெய்வம் அதில் திறமை தான் "நமது செல்வம்". மனிதகுல முன்னேற்றத் திற்கு அடிப்படை உழைப்பேயாகும். நவீன பொருளாதார உலகில் உற்பத்திக் காரணிகளுள் ஒன்றாக உழைப்பு விளங்குகிறது. மனிதனின், சமுகத்தின், நாட்டின், உலகின் இயக்கத்துக்கும் முன்னேற்றத்திற்கும் தொழில் அவசியம். செய்யுந் தொழிலைக் கண்ணாகவும், தெய்வமாகவும் போற்ற வேண்டும். தொழில்கள் பல. அவற்றில் அவசியமானதும் சிறந்ததுமாயிருப்பது உழவுத் தொழிலாகும். ஏனைய தொழில்களில் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது. எல்லாச் செயற்பாடு களும் உழவுத் தொழிலில் தங்கியுள்ளது.

நாம் இன்று தொழிற்றுறைகளில் மிக்க முன் னேற்றம் கண்டுள்ளோம். எத்தகைய தொழில் களை நாம் செய்தாலும் எல்லாத் தொழில்களும் உழவுத் தொழிலின் பின்னே தான் நிற்கின்றது என்பர். காரணம் உலகின் மக்களனைவருக்கும். உணவைத் தந்து வாழவைப்பதே ஆகும். உழவுத் தொழிலை மிகப் பழங்காலந்தொட்டு இன்றுவரை நன்றிக்கடனுடன் பாராட்டி வருவது தெரிந்ததே. சூரியனுக்கு இலங்கையரும், இந்தியரும் எகிப்தியரும் இன்னும் மேற்குலகத்த வரும் நன்றி கூறுவதை அறிவோம்.

இன்றைய உலகில் ஆண்களும், பெண் களும் பல்வேறுபட்ட தொழில்களைச் செய்து வரு கின்றனர். முழுநேரம், பகுதிநேரம், படிப்புடனான சிறு சிறு தொழில்கள், எனச் செய்கின்றனர். அதிலும் நாலடியார் கூறியதும் கவனிக்கத்தக்கது.

"அறிவினால் காற்றொழில் என்று கருதற்க கையினால் மேற்றொழிலும் ஆங்கே மிகும்."

என தற்கால இளம் சந்ததியினருக்கு எத்தனையோ வருடங்களுக்கு முன்னரே அறிவுறுத்தல் கொடுத்துள்ளமை நோக்கற்பாலது. அறிவு மேம்பாட்டினால் எந்தத் தொழிலையும் காலால் செய்யத்தக்க தொழில் என்று, அதாவது தரக்குறைவான தொழில் என்று மனதில் எவரும் நினைக்கக்கூடாது. அது பொருளைத் தரக்கூடிய தாய் அமைவதுடன், உயர்வான தொழிலும் அதிலிருந்தே பெருகிவரும் எனக் கூறியுள்ளார். இன்று இக் கூற்று எத்துணை பொருத்தம் என்பதை உணரலாம்.

நாம் எத்தொழிலைச் செய்தாலும் அதிலே நேர்மை, தூய்மை விருப்பு இருத்தல் அவசியம். கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை அவர்களும் வெவ்வேறு தொழில்களையும் வெவ்வேறு கலைகளாகவே எண்ணிப் போற்றிவந்ததால் அதுவே வாழ்வைச் சிறப்படையச் செய்யும் என்றார். தொழில்களுக்கிடையே தரத்திலும், வேதனத்திலும், தராதரத்திலும் வேறுபாடுகள் இருப்பினும், மேலதிகாரிகளுக்கு சிற்றூழியரின் உதவியும், அவரின் தொழிலும் கைகொடுத்தாலன் றித் தொழில் ஆற்றுவது கடினம்.

பண்டைய காலங்களிலிருந்து தொழில் அடிப் படையில் மக்களைப் பிரித்து ஒதுக்கி வைத்துள் ளமை நாமறிவோம். பரம்பரையாக ஒரு தொழி லைச் செய்தவன் அதிலேயே நிலைபேற்றைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்ற காலம் இன்று மலையேறி விட்டது. எவரும் எத்தொழிலையும் செய்யலாம். எத்துறையிலும் கல்வி கற்கலாம். செல்வந்தன், ஏழை என்ற பாகுபாடின்றிக் கல்வியைப் பெற்றுத் தொழில் செய்யலாம். எனவே பாரதியார்

"வையகம் காப்பவரேனும் – சிறு.
வாழைப்பழக் கடை வைப்பவரேனும்
பொய்யகலத் தொழில் செய்தே – பிறர்
போற்றிட வாழ்பவர் எங்கனும்மே லோர்"

என்று கூறியதற்கிணங்க நாம் செய்யும் எத்தொழிலாக இருந்தாலும் அதனை மதித்துச்செய்தல் அவசியம். தோட்டி முதல் உயர்தரத் தொழில் நுட்பவியலாளர், வைத்தியர் வரை உள்ள எல்லாத் தொழில்களும் அவரவரால் தெய்வம் எனப் போற்றி, மதித்துச் செய்யப்பட வேண்டியனவே.

இன்றைய உலகில் தொழிலை பணம் சம்பாதிக்கும் மார்க்கமாக மட்டுமே பார்க்கின்ற மனப்பாங்கு மேலோங்கிவருகின்றது. செய்யுந் தொழிலுக்கு விசுவாசமின்மையும், அர்ப்பணமின்மையும் இன்று அதிகரித்து வருகின்றது. தொழிலை நேசித்து செய்தலும், தொழிலுக்காக தன்னை முழுதும் அர்ப்பணிப்பதும் அரிதாகி விட்டது. "செய்யும் தொழிலே தெய்வம்" என்ற உயர் நேசிப்பு, நலிந்து வருகின்றது எனவே, தொழில் உண்மையும், நேர்மையும், பற்றுறுதியும், கொண்ட மக்களாக மாறுவோம். இன்று வளர்ச்சி அடைந்த பல நாடுகள் தொழிலாளர்களின் அர்ப்பணிப்பினால் உயர்ந்தது என்பது வரலாறு. எனவே தொழில் தேடுவது பெரிதல்ல தொழிலுக்கு விசுவாசமாக வாழ்வதுதான் பெரிது. அங்குதான் செய்யும் தொழில் தெய்வமாகிறது.

---

# கூண்டுக் கிளி



க.கலைவாணி
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

*தாயின் கருவறை எனும் சிறு கூண்டில்*
*சில காலம் தவித்து*
*விடுதலை எனும் பெயரில் பிறந்து*
*சக பாடிகளுடன் பாடித்திரியும் காலம்*
*குறுகிய காலம் தான்*
*சந்தோஷம் என்பதும் சிறு போர்வை தான்*

*சக பாடிகளுடன் சேர்ந்து*
*கை கோர்த்துத் திரிந்த காலமும்,*
*ஒன்றாய் மரத்தடியில்*
*கூத்துப் போட்ட காலமும்,*
*சட்டென்று மறைந்தனவே,*

*காலங்கள் உருண்டோட*
*வேட்டையர்கள்*
*கைகளில் ஆயுதங்களுடன் பயங்கள்*
*ஆழ்ந்த நெஞ்சோடு*
*ஓடி ஒழிந்தோம்,*

*ஒழிவதற்கு இடமின்றி*
*சிறு சிறு கூண்டுக்குள் ஒழிந்தோம்,*
*உண்ண உணவின்றி,*
*உடுக்க உடையின்றி,*
*பேச பேசத் துணையின்றி,*
*நெஞ்சில் பதட்டங்களுடன்*
*இருள் சூழ்ந்த வாழ்வு தொடர்ந்தது.*

*இன்று திறந்தவெளி ஆனாலும் நாம்*
*இருப்பதோ ஒரு கூடு,*
*வெளியே சென்றால் வேறொரு கூடு,*
*திறவாதா கூண்டின் வாசல்,*
*மலராதா புதிய வாழ்க்கை...*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "அலங்காரரூபன்" தென்மோடிக்கூத்து ஒரு பார்வை

போ.போஸ்சன் ராஜ்குமார்
ஆசிரியர்
யா/திருக்குடும்ப கன்னியர் மடம்

ஈழத்தில் எழுதப்பட்ட கூத்து நூல்களில் பழமையானதும் தென்மோடி மரபு சார்ந்ததும், பேராசிரியர் சு.வித்தியானந்தனால் 1962ல் பதிப்பிக்கப்பெற்றதும், க.பொ.த.உயர்தரத்தில், நாடகமும் அரங்கியல், பாட மாணவர்களுக்கான பாட நூல்களிலொன்றாக அமைந்ததுமான 'அலங்காரரூபன்' நாடகபாடம் பற்றிய ஒரு பகுப்பாய்வினை இக்கட்டுரை மேற்கொள்ள முயல் கின்றது.

நாடக எழுத்துருக்கள், எழுதப்பட்ட காலம் வகை, மோடி, சார்ந்தவகையில் வெவ்வேறு பண்புகளைக் கொண்டவையாக காணப்படு கின்றன. அந்தவகையில், ஈழத்தமிழர்களின், மரபுவழி நாடகவடிவமாகி 'கூத்து' தனக்கான தனித்துவமான கட்டமைப்புடன் காணப்படு கின்றது.

★ காப்பு/கடவுள் வாழ்த்து
★ கட்டிய முறைத்தல்
★ அரச பிரதானிகளின் வரவு
★ தேசவிசாரணை/நாட்டு வளம் கூறுதல்
★ கதைவளர்ச்சி/காட்சிகள்
★ மங்களம்/வழிபாடுதல்

என்ற வகையிலான ஒரு கட்டமைப்பினைக் கொண்டதாக காணப்படும். உரையாடல்கள் பாடல்களாகவும், ஊட்டு வசனங்களாகவும் அமையப் பெற்றிருக்கும். நாடகத்தின் கதை வளர்ச்சியிலும், தொடக்கம், வளர்ச்சி, உச்சம், முடிவு என கூறக்கூடிய வகையிலான படிமுறை வளர்ச்சி காணப்படும். அத்துடன் பாத்திரங்கள் தம்மைத்தாமே அறிமுகம் செய்தலும், எடுத் துரைக்கும் பண்புடன் கதையை நகர்த்துவதும் காணப்படும். இதற்கு சபைத்தருக்கள், சபைவிருத் தங்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன. அந்த வகையில் 'அலங்கார ரூபன்' நாடகமும், மரபு வழிக் கூத்து வடிவத்தின் பண்புகளை பின்பற்றிய வடிவமாகவே காணப்படுகின்றது.

**நாடக ஆசிரியர்**

அலங்காரரூபன் கூத்தினை எழுதிய நாடக ஆசிரியர் யாரென நிறுதிட்டமாக இனங்காண முடியவில்லை என இதன் பதிப்பாசிரியர் பேரா.வித்தியானந்தன் குறிப்பிடுகின்றார். தமக்கு இதன் ஏடுகளை தந்துதவியவர்கள், இது மட்டக்களப்பு புலவர் ஒருவராலேயே எழுதப்பட்டது என கூறியதாகவும் அவர் குறிப்பிடுகின்றார். ஆனால் பண்டிதர் வி.சி.கந்தையா அவர்கள் தமது "மட்டக்களப்பு தமிழகம்" என்னும் நூலில் யாழ்ப் பாணம் வட்டுக்கோட்டையை சேர்ந்த கணபதி ஐயரே இதனை எழுதியதாக குறிப்பிடுகின்றார்.

'பாவலர் சரித்திரதீபம்', 'ஈழநாட்டு புலவர் சரிதம்' போன்ற யாழ்ப்பாணத்து வரலாற்று நூல் களில் 1709 - 1784 காலப்பகுதியில் வாழ்ந்த வட்டுக்கோட்டையைச் சேர்ந்த கணபதி ஐயர், அலங்காரரூபன், வளாபிமன்னன் அதிருபாவதி, மலையக மந்தினி போன்ற நாடகங்களை எழுதி னார் என கூறப்பட்டுள்ளது. இதை அடிப்படை யாகக் கொண்டே வி.சி.கந்தையா அவர்கள் அக் கருத்தினை எழுதியிருக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரா.வித்தியானந்தனால் பதிப்பிக்கப்பட்ட இவ் அலங்காரரூபன் நாடகப்பிரதியினை ஆழமாக நோக்குகின்ற போது நூலின் எந்த இடத்திலும் ஆசிரியரின் பெயர் குறிப்பிடப்பட வில்லை ஆனால் கூத்தின் இறுதியில் வருகின்ற "மங்களம்" அல்லது "வாழிபாடுதலில்" மட்டும் மட்டக் களப்பின் பெயர் தொடர்புபடுத்தப்படுகின்றது.

"காரைநகர் கண்ணகைக்கும் மங்களம் வாழி – மிக்க
கருத்துடனே பாடினோர்க்கும் மங்களம் வாழி
பூவுலகில் ஆடினோர்க்கும் மங்களம் வாழி – பழம்
புகழடைந்து மட்டுநகர் தமிழ்நிதம் வாழி"

இவ் வாழிபாடுதலில் வருகின்ற காரைநகர் கண்ணகி, மட்டுநகர், ஆகிய சொற்களை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது இக்கூத்து மட்டக்களப்பில் எழுதப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படமுடியும். எனினும் ஒரே வாழிபாடு தலை, பல கூத்துக்களில் பின்பற்றும் வழக்கம் காணப்படுவதனாலும், மூலக்கூத்தினை வைத்துக் கொண்டு ஒவ்வொரு கிராமத்திலும் உள்ளவர்கள் தத்தமது பிரதேசப்பண்புடன் வாழி இயற்றிப்பாடுதலும் வழக்கமாக உள்ள காரணத்தினாலும் அக்கருத்து உறுதியற்ற தாகின்றது.

அதேவேளை யாழ்ப்பாணப் பிரதேசத்திலும் அலங்காரரூபன் நாட்டுக்கூத்து தென்மோடிக் கூத்து மரபாக பல காலமாக ஆடப்பட்டு வருகின்றது. இங்கிருந்த பூர்வீக தென்மோடி மரபு வழக்கொழிந்து கத்தோலிக்க மரபினடியான தென்மோடி மரபே பலம் வாய்ந்ததாக ஆடப்படுகின்ற சூழலிலும், அலங்காரரூபன் நிலைத்திருக்கின்றது என்பது குறிப்பிடத்தக்கது. இங்கு நெடுந்தீவிலும், இளவாலையிலும் ஆடப்பட்ட இருவேறு கையெழுத்துப் பிரதிகளை ஆய்வுக்கென எடுத்து நோக்கியபோது, ஆச்சரியமான விடயம் யாதெனில் பேரா.வித்தியானந்தன் பதிப்பு செய்த இக்கூத்து வடிவத்திற்கும் அவற்றிற்குமிடையே அதிக வேறுபாடுகளில்லை. ஏறத்தாள 75வீதமான பாடல்கள் ஒத்தே காணப்படுகின்றன. குறிப்பாக காப்பு உரையாடல்தருக்கள் சிருங்காரத் தருக்கள் சோகத்தருக்கள் சபைத்தருக்கள் போன்ற அனைத்தும் ஒத்தே காணப்படுகின்றன. ஒரு சில அரசவரவுதருக்கள் சிற்சில உரையாடற் தருக்கள், கழிநெடில் சிந்து வாழிபாடுதல் போன்ற தான சில பாடல்கள் வேறுபட்டிருப்பதுடன் கதையிலும் சிற்சில இடங்களில் வேறுபாடுகள் காணப்படுகின்றன. சில பாடல்வரிகளிலும் சிலசில பிறழ்வுகள் காணப்படுகின்றன. உதாரணமாக நெடுந்தீவில் காணப்பட்ட கூத்துப்பிரதியில் காப்பு விருத்தத்துடன் சரஸ்வதியை வேண்டுகின்ற வெண்பாவும் காணப்படுகின்றது. இதில் குறிப்பிடத்தக்க மற்றொரு விடயம் கிறிஸ்தவர்கள் இக்கூத்தினை ஆடியபோதும் காப்பு விருத்தத்தினை மாற்றவில்லை.

யாழ்ப்பாணத்தில் ஆடப்படுகின்ற அலங்காரரூபன் கூத்தினை அராலி முத்துக்குமாரப் புலவரே எழுதினார் என்பது இங்குள்ளவர்களின் கருத்தாக உள்ளது. பலகூத்து நூல்களை பதிப்பு செய்த மு.ஆசீர்வாதம் அவர்கள் தனது பதிப்பு நூல் அட்டவணையில் 1836அளவில் அராலி முத்துக் குமாரப்புலவர் தேவசகாயம்பிள்ளை, அதிரூப அமராவதி, அலங்காரரூபன், காந்தரூபன் ரூபி, மீகாமன், துரோபதை வஸ்திராபரணம், அழகவல்லி, வாளாபிமன்னன் ஆகிய கூத்துக்களை எழுதியதாக குறிப்பிடுகின்றார். (தேவசகாயம் பிள்ளை 2ம் பதிப்பு பக் 139) ஆனால் அவர் எழுதிய தேவகாயம்பிள்ளை மட்டுமே அச்சுருவாக நமக்கு கிடைக்கின்றது. அலங்காரரூபனோடு ஒப்பிடுகையில் தேவசகாயம்பிள்ளை அதிக இலக்கியச் சிறப்பினைக் கொண்டதாகக் காணப்படுகின்றது.

இதேவேளை மட்டக்களப்பு பிரதேசத்தில் வேறு அலங்காரரூபன் கூத்துப்பிரதிகளும் உள்ளதாகவும் கூறப்படுகின்றது. ஆனால் அவற்றினைப் பெற்று ஆய்வுக்குட்படுத்த முடியவில்லை.

மேற்கூறப்பட்ட கருத்து வெளிப்பாடுகளினூடாக இதன் ஆசிரியர் பற்றிய விடயம் ஆழமான ஆய்வுக்குட்படுத்தப்பட வேண்டிய விடயமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் ஓரளவு ஊகிக்கக்கூடிய விடயமாக இருப்பது முதல்முதலில் கணபதி ஐயரே இதனை எழுதி இருக்கவேண்டும். அதனை பயன்படுத்துவோர் தமக்கேற்றபடி சேர்த்தும் விடுத்தும் தத்தமக்கான பிரதிகளை உருவாக்கி இருக்கக் கூடும். கால நகர்விலும் வாய்வழிப்பயில்விலும் வேறுபட்ட பிரதிகள் உருவாக்கி இருத்தல் கூடும் என்பதே ஆகும். எனினும் ஆழமான ஆய்வின் மூலம் உறுதி செய்யப்பட வேண்டிய விடயம்.

**கதை வேறுபாடு**

யாழ்ப்பாணத்தில் ஆடப்படுகின்ற அலங்கார ரூபன் கூத்தின் கதையில் பின்வரும் வேறுபாடுகள் காணப்படுகின்றன.

- ❖ அதிவீர சூரன் தனது மகன் அலங்கார ரூபனுக்கு பெண்பார்க்கும் படி மந்திரிக்கு கூறும்போது மந்திரியே அலங்காரரூபி பற்றி விபரிப்பதாக இப்பதிப்பில் உள்ளது. ஆனால் யாழ்ப்பாணப் பிரதிகளில் புரோகிதர் என்னும் புதிய பாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டு அப் பாத்திரமே மந்திரிக்கு அலங்காரரூபி பற்றிக் கூறுகின்றது.
- ❖ அலங்காரரூபன் கைது செய்யப்பட்டு கொலைத் தண்டனை நிறைவேற்றப்படுவதற்காக கொலைக் களத்துக்கு கொண்டு செல்லப்படும் போது ரணபோதர் குணபோதர் என்ற இரண்டு பாத்திரங்களும் கொலையாளிகளாகவே இப்பதிப்பில் சித்தரிக்கப்படுகின்றனர். ஆனால் யாழ்ப்பாணப் பிரதிகளில் அவர்கள் கொலையாளிகளாக இருந்தாலும் வாழ்வின் நிலையாமை பற்றி எடுத்துரைக்கும் தத்துவ போதகர்கள் போலவும் சித்தரிக்கப்படுகின்றனர்.
- ❖ நாடக இறுதியில் கொலைக்களத்தில் இருந்து அலங்காரரூபனை காப்பவராக விசுவாமித்திர முனிவர் தோன்றுகிறார். யாழ்ப்பாண கூத்துக் களிலும் விசுவாமித்திரர் தோன்றுகின்றார். ஆனால் அவர் தோன்றுமுன் பாலமுருகன் தோன்றி அவனைக் காப்பாற்றி ஆசிவழங்கும் சம்பவம் காணப்படுகின்றது.
- ❖ நாடகத்தின் இறுதியில் விசுவாமித்திரமுனிவரை கண்டதும் வணங்கிய செகதனையாளி அவரின் வார்த்தைக்குப் பணிந்து திருமணத்திற்கு ஒப்புவதாய் இப்பதிப்பில் உள்ளது. ஆனால் யாழ்ப்பாணப்பிரதிகளில் செகதனையாளி அலங்கார ரூபியை வரவழைத்து விசாரணை செய்வதும், அவள் கர்ப்பவதியாய் இருப்பதாக விசுவாமித்திர முனிவர் கூறுவதும் அதன் பின்னரே அவன் திருமணத்திற்குச் சம்மதிப்பதாகவும் அமைந்துள்ளது.

மேற்கூறியவாறு யாழ்ப்பாணத்தில் காணப்படுகின்ற அலங்காரரூபன் நாடகப் பிரதிகளில் சிற்சில வேறுபாடுகள் காணப்படுகின்றன.

**பாத்திரங்கள்**

| | |
|---|---|
| அதிவீரசூரன் | - அழகாபுரி அரசன் |
| அழகவல்லி | - அதிவீரசூரனின் மனைவி |
| அலங்காரரூபன் | - கதைத்தலைவன், அதிவீரசூரனின் மகன் |
| மந்திரி, சேனாதிபதி | - அழகாபுரி அரசு |
| பிரசண்டவேகன், காலவேகன் | } தூதுவர்கள் |
| கட்டியகாரன் | - அழகாபுரி அரசு |
| செகதனையாளி | - நாகபுரத்து அரசன் |
| அரசி | - செகதனையாளியின் மனைவி |
| அலங்காரரூபி | - கதைத் தலைவி, செகதனையாளின் மகள் |
| மந்திரி, சேனாதிபதி | - நாகபுர அரசு |
| கட்டியகாரன் - 2 | - நாகபுர அரசு |
| விசுவாமித்திரர் | - முனிவர் |
| கிழவி | - காய்கறி வியாபாரம் செய்பவள் |
| சொக்கன் | - செட்டியின் நண்பன் |
| தலையாரிமார் (இருவர்) | - காவலர்கள் |
| ரணபாதகர், குணபோதகர் | } கொலைத்தொழில் செய்பவர்கள் (மளுவர்கள்) |
| விறகுதலையன், செட்டி, கள்ளன் | } அலங்கார ரூபனின் மாறுவேடங்கள் |
| பறையன் | (வள்ளுவன்) பறை அறிவிப்பவன் |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கதைச்சுருக்கம்

இந் நாடகத்தின் கதையானது இரண்டு அரசுகளுடன் தொடர்புபட்டதாக அமைக்கப்பட்டுள்ளது. போரும் காதலும் கலந்த இந்நாடகத்தின் கதைத் தொடர்பு சுவையானது.

அழகாபுரி என்னும் நாட்டினை ஆண்டு வந்த மன்னன் அதிவீரசூரன் அவனது ஒரே மகன் அலங்காரரூபன் அதேவேளை நாகபுரத்தை ஆண்டு வந்த மன்னன் செகதனையாளி. அவனது ஒரே மகள் அலங்காரரூபி.

அதிவீரசூரன் தனது மகனுக்குத் திருமணம் செய்து வைக்க எண்ணுகிறான். அதற்காகப் பெண் தேடும்போது நாகபுரத்து மன்னன் மகள் அலங்காரரூபி பற்றி அறிகின்றான். எனவே தூதுவர்களை அனுப்பி அலங்காரரூபியை பெண் கேட்கின்றான். தான் உயர்சாதி என்ற மமதையும் தலைக்கனமும் கொண்ட செகதனையாளி அத்தூதினை உதாசீனம் செய்து அதிவீரசூரனை இகழ்ந்து தூதுவரையும் அவமானப்படுத்தி அனுப்புகின்றான். இதனால் கோபமடைந்த அதிவீரசூரன் செகதனையாளியோடு போர் தொடுக்கின்றான்.

போரில் அதிவீரசூரன் கொல்லப்படுவதுடன் அழகாபுரி முழுவதையும், செகதனையாளி கைப்பற்றுகின்றான். அதேவேளை அலங்காரரூபனை கைது செய்து அவனது கைகளிலொன்றை துண்டித்து காலில் விலங்கு மாட்டிச் சிறைவைக்கின்றான். அரசியாகிய அழகவல்லியையும் கைது செய்து, சாதாரண ஏவற்பெண்கள் செய்கின்ற குப்பை கூட்டுதல் போன்ற கேவலமான வேலைகளை செய்யப் பணிக்கின்றான். மனவருத்தம் அடைந்த அழகவல்லி, வேலைகளை செய்ய மறுத்ததுடன் தன்னையும், தனது மகனையும் விடுதலை செய்யுமாறு வருந்தி வேண்டுகிறாள். மறுத்தால் பெண் சாபம் இடுவேன் என்று எச்சரிக்கின்றாள். பெண் சாபத்திற்கு பயந்த செகதனையாளி இருவரையும் விடுதலை செய்வதுடன், மீண்டும் நாட்டிற்கு வரக்கூடாதென்றும் வந்தால் மரண தண்டனை விதிக்கப்படும் என்றும் எச்சரித்து அனுப்புகின்றான்.

விடுதலை செய்யப்பட்ட அழகவல்லியும் அலங்காரரூபனும் துயரத்தோடே காட்டு வழியில் நடந்து களைப்புற்றனர். வெட்டுண்ட கைவலியோடு வேதனைப்பட்ட மகனை மர நிழல் ஒன்றில் படுத்துறங்குமாறு பணித்துவிட்டு, அழகவல்லி முருகப்பெருமானை நோக்கி வருந்தி வேண்டுகின்றாள். அப்போது அங்கே தோன்றும் விசுவாமித்திரமுனிவர். அவர்கள் துயரத்தினை கேட்டறிந்ததுடன், அலங்காரரூபனின் வெட்டுண்ட கரத்தினை வளரச் செய்கின்றார். தொடர்ந்து காட்டுக்கு அப்பாலுள்ள ஒரு நகரத்திற்குச் சென்று வாழுமாறு கூறி தக்கவேளையில் மீண்டும் வந்து உதவுவேனென்று வாக்களித்துவிட்டுச் செல்லுகின்றார்.

முனிவர் கூறியவாறு அடுத்த ஊருக்குச் செல்லும் அழகவல்லியும், அலங்காரரூபனும், காய்கறி விற்கும் ஒரு கிழவியைக் காணுகின்றனர். அவளுடன் உரையாடி தமது வரலாற்றினைக் கூறி தாம் தங்குவதற்கு இடந்தருமாறு வேண்டுகின்றனர். அவளும் அவர்களை தன்னுடன் தங்குவதற்கு அனுமதிக்கின்றாள்.

சிலகாலம் அங்கு வசிக்கும் போது, பசியும் வறுமையும் அவர்களை வாட்டுகின்றது. இதனால் அலங்காரரூபன் விறகு வெட்டிவிற்கும் தொழில் செய்வதற்கு அனுமதிக்குமாறு தாயிடம் வேண்டுகிறான். அரசகுமாரனாகிய அவன் தன் நிலை இழந்து போவதை எண்ணி வருந்தினாலும் வேறு வழியின்றி ஒப்புக் கொள்ளுகின்றாள்.

காட்டில் விறகுவெட்டி அதனை சுமந்து கூவி விற்கும், விறகு தலையனாக, நாகபுரத்து வீதிகளில் அலங்காரரூபன் செல்லும் போது, எந்த திரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணப்பேச்சு அவனை இந்நிலைக்கு கொண்டு வந்ததோ அதை நிறைவேற்றி வைக்க விதி விளையாடத் தொடங்குகின்றது. ஆற்றிலே நீராடி பூங்காவனத்திலே மகிழ்ந்திருக்கும் செகதனை யாளி மன்னனின் மகள் அலங்காரரூபி அவனைக் கண்டு விடுகின்றாள். கண்டு அவன் அழகில் மனதைப் பறிகொடுத்தவள், அவனை தோழிகள் மூலம் அழைத்து உரையாடும் போது அவன் வரலாற்றினையும் கேட்டறிகின்றாள். அனைத் தும் காலப்பிழையினால் நடந்தது என்று கூறி அவனை தேற்றும் அவள், அவன் மேல் தீராத காதலாகி அரண்மனைக்கு வருமாறு அழைக் கின்றாள். தான் இருக்கும் கோலத்தில் அரண் மனைக்கு எவ்வாறு வர முடியும் என அவன் மறுக்க, அலங்காரரூபி, தனது தோழிகள் மூலம் வேண்டும் பொருட்கள் கொடுத்துவிடுவதாகவும் அதன் உதவியுடன் வியாபாரம் செய்யும் செட்டி வேடமிட்டு வருமாறும் வேண்டுகின்றாள். அதற்கு அலங்காரரூபனும் சம்மதிக்கின்றான். பின்னர் இருவரும் காதல் நோயினால் வாடுகின்றனர்.

அலங்காரரூபி கூறியபடியே அலங்காரரூபன் செட்டி வேடமிட்டுக்கொண்டு தனக்குத் துணை யாக சொக்கன் என்பவனையும் அழைத்துக் கொண்டு, பொருள் விற்கும் போது, அலங்காரரூபி அவனை அந்தப்புரத்துக்கு அழைத்து அவனுடன் காதல் கொள்ளத் தொடங்குகிறாள். அவனை அடிக்கடி அங்கு வரவேண்டும் என்றும் வேண்டு கோள் விடுக்கிறாள். இவ்வாறு இருவருக்குமான காதல் திருட்டுத்தனமாக வளர்ந்து கொண்டிருக் கும் போது, செகதனையாளி அரசன் தன் மாளிகைக் கிளியை திருடன் திருடிச் செல்வதாக கனவு காணுகின்றான். இதனால் உசாரடைந்த அவன் மாளிகைக் காவலர்கள் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டுமெனப் பணிக்கின்றான்.

காவலர்கள் எச்சரிக்கையுடனிருக்க, திருட்டுத் தனமாக அங்கு வரும் அலங்காரரூபன் அவர் களிடம் பிடிபட்டு விடுகின்றான். தான் தீர்த்த யாத்திரை செய்து வருபவன் என்றும் வழி தெரியாது அங்கு வந்துவிட்டதாகவும் கூறி தப்பிக்க முற்படுபவனை காவலர்கள் கைது செய்து மன்ன னுக்கு முன்பாக கொண்டு செல்லுகின்றனர். அங்கும் பொய்கூறி சமாளிக்க முயன்றவன் அவன் கையிலிருக்கும் இராச கணையாளி எவ் வாறு கிடைத்தது என வினவும் போது, அதற்கு பதில் உரைக்க விரும்பாது மௌனமாகின்றான். அரசன் அவனை கள்வன் எனத் தீர்மானித்து உடனே தூக்கிலிடுமாறு கட்டளை இடுகின்றான்.

அலங்காரரூபனை கொலையாளிகள் கொலைக்களத்திற்கு கொண்டு செல்லும், போது அவன் தனது அரச பெருமை, தாயின் பரிதாப நிலை போன்றவற்றை எண்ணி மனம் புழுங்கு கிறான். கொலையாளிகள் அவனை தூக்குத்தடி முன் நிறுத்தி கயிற்றை அவன் கழுத்திலிட்டு, குல தெய்வத்தை வேண்டுமாறு கூறிய போது, அவன் முருகப் பெருமானை நினைத்து தனது குறை களை எடுத்துக்கூறி வேண்டுகிறான். தொடர்ந்து கயிற்றை இறுக்கி தண்டனை நிறைவேற்றப் போகும் போது மரம் உடைந்து விழுந்து விடுகின் றது. அந்த இடத்திலே தோன்றுகின்ற விசு வாமித்திரமுனிவர் அவனை விடுவித்து, செக தனையாளி மன்னனிடம் அழைத்துச் செல்கின் றார். முனிவரை பணிவுடன் வரவேற்கும் மன்ன னிற்கு விபரம் முழுவதையும் எடுத்துரைக்கும் முனிவர் அலங்காரரூபனுக்கும் அலங்கார ரூபிக் கும் திருமணம் செய்து வைக்குமாறு, பணிக்கின் றார். அதனை ஏற்றுக் கொண்ட செகதனையாளி இருவருக்கும் திருமண ஏற்பாடுகளை செய்வது டன், அழகாபுரியை மீண்டும் அவனுக்கே அளிப்பதாக வாக்களிக்கின்றான். தொடர்ந்து பறை அறிவிப்பவனூடாக, திருமண செய்தியை ஊரெங்கும் பறைசாற்ற செய்கின்றான்.

அலங்காரரூபனுக்கும், அலங்காரரூபிக்கும் திருமணம் இனிதே நடைபெற விசுவாமித்திர முனிவரின் ஆசிரோடு, மங்களகரமாக நாடகம் நிறைவு பெறுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**கதைக்கரு**

அலங்காரரூபன் நாடகமானது முழுக்க முழுக்க கற்பனையான ஒரு கதைப்பொருளை அடிப்படையாக கொண்டு எழுதப்பட்டுள்ளது. கூத்துக்களில் தென்மோடிக்கூத்தானது 'காதல்' கருப்பொருளை அதிகமாக வெளிப்படுத்துவ தாகவே வழங்கி வந்துள்ளது. அந்தவகையில் அலங்காரரூபனின் கதைக்கருவானது. "காதலில் வெற்றி" அல்லது "தெய்வத்தால் நிச்சயம் பெற்ற திருமணமானது நிச்சயம் நிறைவேறியே தீரும்" என்ற கருத்தினை வெளிப்படுத்துகின்றது. துணைக்கருக்களாக பல்வேறு விடயப் பொருள் கள் வெளிப்படுத்தப்படுகின்றன.

❖ சாதிய வர்க்க வேறுபாடுகள் அழிவுகளையும், மனக்கசப்புகளையும் தோற்றுவிக்கின்றன.
❖ ஆராயாமல் பொறமையின்றி உணர்ச்சிக்கு அடிபணிந்து செய்யும் போரானது அழிவு களையும், மீளா அவலத்தையுமே தோற்று விக்கும்.
❖ இறை நம்பிக்கையும், வேண்டுதலும் இழந்த வாழ்வை மீண்டும் அளிக்கும்.
❖ ஏற்றத்தாழ்வுகள், வாழ்வில் சாதாரண மானவை, எந்த நிலையிலும் கர்வம் கொள் ளாது உழைத்து வாழும் மனிதர்களாக இருக்கவேண்டும்.

இவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்ற துணைக் கருக்களானவை சமகால எமது வாழ்வியலுடன் பொருத்திப்பார்க்கக்கூடியவை.

**அலங்காரரூபன் - கதை வளர்ச்சிப்படி முறை (கதைப்பின்னல்)**

1. அண்ணாவியார் காப்பு விருத்தம்
2. கட்டியகாரன் வரவு - அதிவீரசூரமன்னன் வரப்போவதாக கட்டியங்கூறல்
3. அதிவீரசூரன் மந்திரியுடன் கொலுவருதல்
4. நாட்டுவளம் அறிதல் (தேசவிசாரணை)
5. கட்டியகாரன் வரவு செகதனையாளி மன்னன் வரப்போவதாக வரவு கூறுதல்.
6. செகதனையாளி மன்னன் மனைவியுடன் கொலு வருதல்.
7. அலங்காரரூபியை அழைக்குமாறு அரசி கோருதல், மன்னன் அழைத்துவரக்கட்டளை இடுதல்.
8. அலங்காரரூபி தோழிகளுடன் வருதல்
9. அலங்காரரூபி தந்தையை வணங்கி அழைத்த காரணம் வினவுதலும், மன்னன் மாளிகையில் இருக்குமாறு கூறுதல்.
10. அதிவீரசூர மன்னனும், அரசி அழகவல்லியும் தோன்றுதல். மகன் அலங்காரரூபனுக்கு மணம் செய்விக்குமாறு அரசி கூறுதல், அரசன் ஏற்று மந்திரியுடன் மகனை அழைக்குமாறு கூறுதல்.
11. அலங்காரரூபன் வரவு
12. அலங்காரரூபன் தந்தையை பணிதல், தந்தை மணம் செய்ய உத்தேசித்திருப்ப தனை கூறி மாளிகையில் தங்கப் பணித்தல்.
13. அதிவீரசூரன், மந்திரியுடன் உரையாடுதல், மகனுக்குப் பெண் தேடும்படி கூறுதல், மந்திரி அலங்காரரூபியை பற்றி எடுத்துரைத்தல்.
14. அதிவீரசூரமன்னன் தூதுவர்களை அழைத்தல்.
15. தூதுவர் வரவு.
16. தூதுவர்களை அரசன், செகதனையாளி மன்னனிடம் சென்று பெண்கேட்டு வரத் தூதனுப்புதல்.
17. தூதுவர்கள் நாகபுரத்துக்குச் செல்லுதல்.
18. தூதுவர்கள் செகதனையாளியிடம் தூது சொல்லி அலங்காரரூபியை பெண்கேட்டல், செகதனையாளி எள்ளி நகையாடி தூதுவரை அவ மானப்படுத்தி துரத்துதல்.
19. தூதுவர்கள் அவமானத்துடன் திரும்புதல்
20. தூதுவர் அதிவீரசூரனிடம் வந்து நடந்ததைக் கூறுதல் கோபங்கொண்ட மன்னன் தளபதியை அழைத்தல்.
21. தளபதி வரவு
22. அதிவீரசூரன் சேனாதிபதிக்கு வரலாற்றை எடுத்துக்கூறி சண்டையா, சமாதானமா எனக் கேட்டுவர தூது அனுப்புதல்.
23. சேனாதிபதி செகதனையாளி மன்னனைக் கண்டு தூது சொல்ல அவன் முடிவு சண் டையே எனக்கூறுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. செகதனையாளி மந்திரி மூலமாக சேனாதிபதியை அழைத்தல்.
25. செகதனையாளியின் சேனாதிபதி வரவு.
26. செகதனையாளியை சேனாதிபதி சந்தித்தல், மன்னன் வரலாற்றை கூறி அவனை போர் நடத்தப்பணித்தல்.
27. போர் நடத்தல், இரண்டு சேனாதிபதிக்கும், இரண்டு மன்னர்களுக்கும் இடையே போர் நடைபெறுதல்.
28. போரில் அதிவீரசூரன் இறத்தல் - செகதனையாளி அலங்காரரூபனை சிறைப்பிடிக்க கட்டளை இடுதல்
29. செதனையாளியின் சேனாதிபதி அலங்காரரூபனை கைது செய்து வருதல். அலங்காரரூபன் வருந்துதல்.
30. செகதனையாளி, அலங்காரரூபனின் கைகளில் ஒன்றினை வெட்டி, கால் விலங்கிடுமாறு பணித்தல்.
31. அலங்காரரூபனின் கை வெட்டப்படுதலும் அவன் துயரத்தோடு வாடுதலும்
32. செகதனையாளி சேனாதிபதியிடம் அழகவல்லியை அழைத்து வரப்பணித்தல்.
33. அழகவல்லி கணவனின் நிலையறியாது வருந்தி நிற்றல், சேனாதிபதி அவன் இறப்பைக் கூறி அவளை மன்னன் சமூகத்திற்கு கொண்டு வருதல்.
34. செகதனையாளி அவளை குப்பை கூட்டுதல் போன்ற அடிமைத்தொழில்களைச் செய்யப் பணித்தல். அதை மறுக்கும் அழகவல்லி மகனையும் தன்னையும் விடுதலை செய்யுமாறும் மறுத்தால் பெண்பழி இடுவதாகவும் கூறுதல்.
35. செகதனையாளி இருவரையும் விடுதலை செய்து மீண்டும் வரக்கூடாது என எச்சரித் தனுப்புவதுடன் சேனாதிபதியிடம் அழகாபுரியை ஒப்படைத்துவிட்டு நாகதேசம் செல்லுதல்.
36. அலங்காரரூபனும், தாய் அழகவல்லியும் காட்டில் துன்பப்பட்டு வருந்துதல். முருகப் பெருமானை வேண்டும்.
37. விசுவாமித்திர முனிவர் தோன்றுதல், அலங்காரரூபனின் கையை வளரப்பண்ணுதல். மீண்டும் தோன்றுவதாக வாக்களித்தல்.
38. அலங்காரரூபனும் அழகவல்லியும் அடுத்த ஊருக்குச் செல்லுதல்
39. காய்கறி விற்கும் கிழவி தோன்றுதல் காய்கறி விற்றல்.
40. கிழவியைக் கண்டு உரையாடி கிழவியுடன் சென்று இருவரும் வாழுதல்.
41. அலங்காரரூபி ஆற்றிலே குளிப்பதற்கு தாயிடம் அனுமதி கோரல். தாய் மறுத்து பின்னர் அனுமதித்தல்.
42. அலங்காரரூபி தனது தோழிகளுடன் ஆற்றிலே குளித்தல்.
43. அலங்காரரூபன் பசியினால் வாடுதல், அழகவல்லி பிச்சை எடுத்து காப்பாற்றுவதாக கூற, அவன் மறுத்து விறகு வெட்டி வியாபாரம் செய்ய அனுமதிகோரல் தாய் கவலையுடன் அனுமதி அளித்தல்.
44. அலங்காரரூபன் விறகுதலையனாக தோன்றுதல்.
45. அலங்காரரூபி தோழிகளுடன் பூவெடுத்து விளையாடி மாளிகை செல்ல ஆயத்தமாதல்.
46. அலங்காரரூபனை விறகு தலையனாக கண்டு அவன் அழகில் மயங்கும் அலங்காரரூபி அவனை அழைத்துவருமாறு தோழிகளை அனுப்புதல்.
47. தோழிகளின் அழைப்புக்கு மறுக்கும் அலங்காரரூபன் நச்சரிப்பினால் உடன்படுதல்
48. அலங்காரரூபன் அலங்காரரூபியை சந்தித்தல், அலங்காரரூபி அவன் வரலாற்றை அறிந்து, அரசகுமாரன் என்பதை உணர்ந்து, ஆறுதல் கூறுவதுடன், தான் தோழிகள் மூலம் அனுப்பும் பொருட்களை கொண்டு செட்டிவேட மிட்டு மாளிகைக்கு வருமாறு அழைப்பு விடுத்து செல்லுதல்.
49. அலங்காரரூபன் அவள் மேல் காதல் கொண்டு காதல் நோயால் வாடுதல்.
50. அலங்காரரூபியும் அவன் மேல் காதல் கொண்டு காதல் நோயால் வாடுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

51. அலங்காரரூபன் செட்டி வேடத்துடன் தோன்றுதல்.

52. செட்டியான அலங்காரரூபன், அவன் நண்பன் சொக்கனுடன் தன் காதலியைப் பற்றி எடுத்துரைத்தவாறு வியாபாரம் செய்தல்.

53. அலங்காரரூபி அவன் குரல் கேட்டு அவனை அழைத்து வரக்கூறுதல்

54. அலங்காரரூபன் மாளிகையில் புகுந்து அலங் காரரூபியுடன் காதல் கொண்டு இன்புற்றிருத் தல். அவள் தனது கணையாளியை கொடுத்தல்.

55. செகதனையாளி மன்னன், தனது கிளியொன் றினை திருடன் பிடிக்க கனவு கண்டு, மந்திரியை அழைத்து பாதுகாப்பைப் பலப் படுத்துமாறு கோருதல். மந்திரி தலையாரி மாரை அழைத்தல்.

56. தலையாரிமார் தோன்றுதல்

57. தலையாரிமார் மன்னரைச் சந்தித்தலும், பாதுகாப்பினை பலப்படுத்துமாறு கட்டளை இடுதலும்.

58. தலையாரிமார் பாதுகாப்பில் ஈடுபடுதல்.

59. அலங்காரரூபன் கள்வனைப் போல தோன்று தல், அலங்காரரூபியை நினைத்து மகிழ்தல்.

60. தலையாரிமார் அவனைப் பிடித்து விசாரணை செய்தல். அவன் தான் யாத்திரை செல்லவந்த வனென பொய் கூறுதல். தலையாரிமார் நம்பாமல் மன்னனிடம் ஒப்படைத்தல்.

61. செகதனையாளி, அலங்காரரூபனை விசாரித் தல். அவன் வளையல்கள், கணையாளி என்பன அரச உடமை எனக் கண்டு வினவ, அவன் மௌனமாதலும் அரசன் அவனை துலங்கு மரத்தில் பூட்டி காவல் கொள்ளுமாறு கூறி, மந்திரியிடம் ரணபாதகர், குண போதகரை அழைத்து வரப்பணிதலும்

62. தலையாரிமார் அலங்காரரூபனை துலங்கில் மாட்டி காவல் செய்தல். அலங்காரரூபன் வருந்துதல்.

63. ரணபாதகர், குணபோதகர் வரவு.

64. ரணபாதகரும், குணபோதகரும் செகதனை யாளி மன்னனை பணிய அவன் அலங்கா ரரூபனை தெருவெங்கும் அழைத்துச் சென்று திருடன் எனக் காட்டியபின், தூக்கு மரத்தில் தூக்கிலிட்டு கொல்லுமாறு பணித்தல்.

65. ரணபாதகரும், குணபோதகரும் அலங்கார ரூபனை தெருவெங்கும் இழுத்துச்சென்று தூக்கு மரத்திலே மாட்டுதல்.

66. ரணபாதகர், அலங்காரரூபனை தூக்கிலிடும் போது மரம் உடைந்து விடுதல், விசுவாமித் திரமுனி தோன்றி அவனை விடுவித்து மாளிகைக்கு அழைத்துச்செல்லுதல்.

67. விசுவாமித்திர முனிவர், செகதனையாளி மன்னனிடம் உண்மைகளை கூறி, அலங் காரரூபனுக்கும் அலங்காரரூபிக்கும் திரு மணம் செய்து வைக்குமாறு பணித்தல், செக தனையாளி ஏற்றுக் கொண்டு அலங்கார ரூபனுடன் பரிவுடன் உரையாடுதல். அவனது சொந்த நாட்டினை அவனுக்கே அளிப்பதாக வாக்களித்தல், மந்திரி மூலம் திருமண அழைப்பினை விடுதலுடன் பறையனை அழைத்தல்.

68. பறையன் வரவு (வள்ளுவன்)

69. பறையன் மன்னனை சந்தித்து வணங்க மன்னன் திருமண செய்தியை நாடெங்கும் அறிவிக்கப்பணித்தல்.

70. பறையன் பறையறைந்து செய்தி சொல்லல்.

71. அலங்காரரூபனுக்கும், அலங்காரரூபிக்கும் திருமணம் நடைபெறுதல். இருவரும் மகிழ்ந் திருக்க விசுவாமித்திர முனிவர் வாழ்த்துக் கூறுதல்.

72. வாழிபாடுத்தல்

**கூத்தின் பாடல்கள்**

கூத்துவடிவத்தின் இன்றியமையாத உரை யாடல் முறையாக பாடல்கள் காணப்படுகின்றன. அலங்கார ரூபன் நாடகத்தில் பல்வேறு பாவினங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன.

காப்புப்பாடலானது 'விருந்தப்பாவில்' அமைந் துள்ளது. வினாயகருக்கான காப்புப்பாடலாக அது அமைந்துள்ளது. இதனைவிட பல்வேறு விருத் தங்களும், கொச்சகம், தாழிசை, உலா, வண்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ணத்து கொச்சகதரு, கழிநெடில் ஆசிரியத்தரு, சிந்து, வெண்பா, அகவல், போன்ற பாவினங்களும் 20க்கு மேற்பட்ட தருப்பாடல்களும், தர்க்கத் தருக்களும் இக்கூத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளன.

பயன்படுத்தப்பட்ட பாவினங்களும், தரு வகைகளும், நாடகத்தின் உணர்வு வெளிப்பாட்டோடும், உரையாடல் தேவையோடும் இணைந்தவையாக பொருத்தமுறப்பயன்படுத்தப்பட்டுள்ளன. உதாரணமாக, அதீவீர சூரனின் தளபதி கோபங்கொண்டு பாடுகின்றான்.

"இப்படியும் வரலாச்சுதோ – சமர்புரிய
இப்படியும் வரலாச்சுதோ"

என்ற சிந்து வீரத்தையும், கோபத்தையும் வெளிப்படுத்த வல்லதாக பயன்படுத்தப்பட்டுள்ளது. அவ்வாறே 'வண்ணத்தரு' என அழைக்கப்படும் தருவகை, தென்மோடியில் சோகத்தினை வெளிப்படுத்துவதற்கு பயன்படுத்தப்படுவது. இங்கு கைகள் வெட்டப்பட்ட அலங்கார ரூபனால் பாடப்படுகிறது. இவ்வாறு பாவகைகள் பொருத்தமுற பயன்படுத்தப்பட்டுள்ளன.

## முடிவுரை

எனவே அலங்காரரூபன் நாடகமானது 'கூத்து' வடிவத்தினூடாக கதைசொல்லுகின்ற வடிவமாகும். கூத்துக்கென ஒரு அழகியல் பண்பு காணப்படுகின்றது. அது எழுத்துரு நிலையில் இருந்து அளிக்கையாக களரியில் உயிர் பெறும் போதே முழுமை அடைகின்றது. அந்த முழுமைக்குள் கூத்தின் கதை சொல்லப்படும் முறைமையானது மிகப்பிரதானமானதாக அமைந்துள்ளது. அந்தவகையில் அலங்காரரூபன் நாடகத்தின் கதை சொல்லப்படும் முறைமையானது எடுத்துரைப்புத் தன்மையானதாக, கட்டியகாரன் சபையோர் போன்ற உத்திகளினூடாகவும், பாத்திர உரையாடல்கள் செயல்களினூடாகவும் நகர்த்தப்படுவதாக அமைந்துள்ளது. அத்துடன், நாடகத்துக்குரிய கதை, கரு, முரண், பாத்திரம் கதைப் பின்னல், கட்டமைப்பு, மொழி போன்ற ஒவ்வொரு விடயங்களும் கூத்துவடிவத்தில் தனித்துவமானதாக வேறுபட்டதாக காணப்படுகின்றது. அதனை அலங்காரரூபன் எழுத்துப்பிரதியிலும் ஆழமான வாசிப்பில் கண்டு கொள்ள முடியும்.

## உதவிய நூல்கள்

1. அலங்காரரூபன் - பேரா.சு.வித்தியானந்தன்
2. மட்டக்களப்பு தமிழகம் - வி.சி.கந்தையா
3. மட்டக்களப்பு மரபுவழி நாடகங்கள் பேரா.சி.மௌனகுரு
4. அலங்காரரூபன் - கையெழுத்துப் பிரதிகள்

> **"எங்கு அனுபவங்கள் உள்ளதோ அங்கு கலையும் இருத்தல் கூடும். அழகுடன் சேர்ந்த அனுபவமே கலையாக மாறுகின்றது. செய்யுள் இயற்றுவதும் ஒரு கலை, செப்பமாய் நெய்யிட்டு முடி சீவுவதும் ஒரு கலை, கல்லினை செதுக்கி உருவாக்குவதும் ஒரு கலை, பென்சிலைச் சீவுவதும் ஒரு கலை ஓவியம் எழுதுவதும் கலை, ஒப்பாரி பாடுவதும் ஒரு கலை, இசை பாடுவதும் ஒரு கலை, வசை பேசுவதும் ஒரு கலை, யாழினை மீட்டுவதும் ஒரு கலை, யாழ்ப்பாணக் கறிகள் சமைப்பதும் ஒரு கலை, நடனம் ஆடுவதும் ஒரு கலை, நகைச்சுவை வளர்ப்பதும் ஒரு கலை, கோயில் அமைப்பதும் ஒரு கலை, கோனார் பால் கறப்பதும் ஒரு கலை"**
>
> **- தனிநாயகம் அடிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனமும் அதன் பயன்களும்

அன்ரனி சிந்துசா
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

இன்றைய உலகில் மனிதனுக்கு ஏற்படும் பிரச்சினைகளுள் நோயும் ஒரு காரணியாக அமைகின்றது. மனிதனுடைய அன்றாட தேவைகளை நிறைவேற்றுவதற்கே நேரம் போதாமல் உள்ளது. இதில் அவர்கள் தங்கள் நலங்களை கவனிக்க முடியாமல் நோயுற்றுக் காணப்படுகின்றனர். இதனால் மனிதனின் ஆயுள் ஆனது குறைந்த காணப்படுகின்றது. மனிதன் தன் உடலத்திற்காக நாளில் 2 மணி நேரம் மட்டும் யோகாசனம் செய்வதன் மூலம் மனிதனுக்கு ஏற்படும் நோயில் இருந்து விடுபடுகின்றான்.

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் இந்த உலகத்தைப்பற்றி மகாகவி பாரதியார் கூறுவது "எத்தனை கோடி இன்பம் வைத்தாய் இறைவா" என்பதாகும். இவ்வளவு இன்பங்களை வைத்த உலகில் இன்றைய மனிதர்கள் நோயிலிருந்து மீள முடியாமலும், வேதனைகளை ஏற்றும் துன்பப்படுகின்றார்களே, இதற்கு காரணம் யாது? அறிவியல் துறையிலே முன்னேறிக் கொண்டிருக்கும் இக் காலத்தில் பண்டைய காலத்து மனித வாழ்க்கையைக் கூறுவது பொருந்துமா? விஞ்ஞானமும் மெஞ்ஞானமும் ஒன்று என்பதை சிந்தித்தால் நம்மால் பதில் கூறமுடியும்.

நாம் அன்றாடம் சூரியனைக் பார்க்கிறோம். சூரியன் 625 கோடி மைல்களுக்கப்பால் இருக்கும் மிகப் பழமையான கோள நெருப்பு என்பதில் ஐயம் இல்லை. இறைவன் சகல ஜீவராசிகளுக்கும் மனிதர்களுக்கும் காற்று மண்டலத்தைப் படைத்துள்ளார். மனித வாழ்க்கைக்கு தூதர்கள் மூலம் வேதங்களைப் பரப்பியுள்ளார். மனிதனைப் படைத்து மனித உடலுக்குள் உணவு உண்டு கழிவுப் பொருளை வெளியேற்றும்வரை ஜீரண சக்தி என்ற விஞ்ஞானத்தைப் புகுத்திக் கொடுத்துள்ளார். அதன் வாயிலாக உயிரனுக்களையும் உயிர் சக்தி மின்காந்த நிலையமான சூரியனையும் உண்டாக்கி அனைத்து உயிரனுக்களையும் சூரியன் மூலமாகவே உயர் சக்தியான மின்காந்த அலைகளை அனுப்பி யாவற்றையும் உயிருடன் வாழச் செய்து கொண்டிருக்கிறார். அவரவர் வினைகளின் அமைப்பிற்குத் தக்கவாறு பந்தபாசம் விருப்பு வெறுப்பு கோபங்கள் இவைகளை கண்களால் பார்க்கமுடியாது. மூளையில் உள்ள நரம்புகள் மூலம் மனித வாழ்க்கையை உணர்ந்து செல்லும் சக்தியாக செயல்புரிகின்றது.

பண்டைய கால யோகிகள் ரிஷிகள் ஆகியோர் இல்லற வாழ்க்கை துறவற வாழ்க்கை வாழ்ந்து கொண்டிருந்த காலங்களில் நோய் நொடிகளி லிருந்து காப்பாற்றிடவும், புலனடக்கம், பிரம்மச்சாரியம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்கவும் யோகா சித்த வைத்தியங்கள், இயற்கை உணவு முறைகளை பின்பற்றி செல்வ சிறப்புடன் வாழ்ந்து காட்டிச் சென்றுள்ள பாதையை நாம் கடைப்பிடிக்கவில்லை. இதனால் இன்றைய நாளில் ஏராளமான நோய்களால் துன்பப்பட்டு வருகிறோம். நோய்களில் ஒருசிலவற்றை மட்டும் ஆராய்வோம்.

இன்றைய மருத்துவ வல்லுநர்களே உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் யோகா தியானம் ஆகியவைகளே மூல மருந்து என தெரிவித்து வரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். இதய நோய்களுக்கு யோகா எவ்வாறு உதவிசெய்து நோயிலிருந்து காப்பாற்றித் தருகின்றது என்பதனை விளக்கமாகப் பார்ப்போம். மனித இதயங்களின் செயல் திறனை மேம்படுத்தும் மாபெரும் ஆற்றல் பெற்ற யோகப் பயிற்சி மூலம் இதய நோய்களை தவிர்த்து நிவாரணம் பெற முடியும். இன்றைய மருத்துவ வல்லுநர்கள் இதயத்தை ஆராய்வதிலும் நிவாரணம் அளிப்பதிலும் பெரிதும் ஈடுபட்டு வருகிறார்கள். பெரும்பாலான இதய நோய்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கும் "அஞ்சியோ பிளாஸ்டிரி பைபாஸ் ஓர்ஜரி" எனும் அறுவை சிகிச்சைகளை செய்வதாலும், மார்பில் வலி ரத்த ஓட்டம் இவைகளுக்கு மருத்துவம் செய்வதாலும் பூரண குணங்கள் அடைவது இல்லை. நோய்கள் மீண்டும் மீண்டும் தாக்கவே செய்கின்றன. ஆனால் யோகப்பயிற்சி செய்யத் தொடங்கிய நாளிலிருந்தே நோய் பரவுவது தடுக்கப்படுகிறது.

ஆங்கில மருத்துவமானது நோயின் வேகத்தை குறைக்கின்றது. அமெரிக்கா பிரித்தானியா போன்ற நாடுகளில் இருதய நோயாளிகளும், ரத்த அழுத்தம் உள்ளவர்களும் யோகாவை கற்று வருகின்றார்கள். இருதய நோய்கள் அறவே ஒழிக்கப்படுகின்றன. தசைகளுக்கு அதிக சக்தி அளித்தும் ஆஸ்துமா போன்ற நோய்களின் கடுமையை குறைத்தும் 'அரேபிக்' போன்ற பயிற்சிகளை விட மூச்சு பயிற்சியினால் நுரையீரலின் செயற்பாடுகள் அதிகரித்து உடலை ஆரோக்கியமாகவும் சீராகவும் வைக்க முடிகிறது. ரத்த அழுத்தத்தை மட்டுமின்றி ரத்தத்தில் உள்ள சர்க்கரையின் அளவையும் குறைக்கமுடியும் கழுத்து மற்றும் இருதயப் பகுதிகளின் அனைத்து தசைகளின் இறுக்கங்களையும் மணிக்கட்டு பகுதியில் தேன்றும் வலிகளையும் நீக்குகிறது.

யோகப் பயிற்சி செய்பவர்கள் தன்னையே உணர்வதால் உடலிலிருந்து நேர்மறையான ஆற்றல் வெளிப்படுத்தப்படுகின்றது. யோகா என்பது உள் சிகிச்சை அல்லது உடற்சிகிச்சை ஆகியவற்றின் ஒருங்கிணைப்பே ஆகும். உடலின் முன்பகுதியை நீட்டினால் இதயத்தை சீராக இயங்க வைக்கும் ஆற்றலை அது தருகிறது.

இதுமட்டும் மின்றி கால் மூட்டுகளும் இணைப்புகளும் இப் பயிற்சியினால் மென்மையாகவும் எளிதாகவும் அசையக்கூடியதாகவும் அமைகின்றது. இதயத்தின் திறனை அதிகரிக்கவும் இதயக் குறைவுகளை நீக்கிக் கொள்ளவும் முடியும் மேலும் இதய வால்பு ஒருவருக்கு அடைத்துக்கொண்டிருக்கும் கட்டத்தில் யோகா பயிற்சியை மிக கவனத்தோடு செய்வது மிகவும் அவசியமாகும்.

இதய நோயில் இருந்து விடுபட வேண்டுமெனில் யோகாசனங்களில் புஜங்காசனம், பிறையாசனம், பாதஹஸ்த ஆசனம் விபரீத கரணி நின்ற தனுராசனம், மச்சாசனம் நாடிசுத்தி தியானம் பத்மாசனம் போன்ற ஆசனங்கள் செய்வதன் மூலம் இதய நோயில் இருந்து விடுபடலாம்.


இன்றைய நாளில் பெண்களுக்கு சில நோய்கள் ஏற்படுகின்றன. அவற்றுள் மார்பக புற்றுநோய் இன்றியமையாதது. பெண்களுக்கு ஏற்படும் நோயில் இதுவும் ஒன்றாகும். இந்நோயை குணப்படுத்தும் பொழுது பெரும் பாலான பெண்கள் சுலபமான உடல் அசைவு களை இழப்பதோடு உடல் வலிமையையும் இழந்து விடுவது மிகப்பரிதாபகரமான ஒரு முடிவு என கூறலாம். மார்பகப்புற்று நோய் கதிரியக்கம் மூலம் குணம் அடைந்தாலும் பிரச்சினை ஓய்வதில்லை மார்பகங்களை பழைய வடிவத்தில் கொண்டு வருவதற்கு அறுவைசிகிச்சை செய்ய வேண்டி இருக்கும் ஹர்மோன் என்ற சம்பந்தப்பட்ட நோயும் உண்டாகும். இம் மாதிரியான நோய்கள் மனதில் கலக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன. சிலர் வாய்விட்டு அழுகின்ற சூழ்நிலையை உருவாக்கி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


விடுகின்றது. இதற்கெல்லாம் ஒரே விடை மிக எளிதாக இன்றைய விஞ்ஞான யுகம் கண்டு பிடித்துவிட்டது என்று கூறலாம் யோக சூத்தரா யோக ஆத்ராவினல் கூறப்படுவது ஒரு நோயாளி உடல் ரீதியான நோயிலிருந்து விடுபடுவதற்கு முன்னரே அவருடைய உள்ளத்தில் ஒரு புதிய உணர்ச்சியை நம்பிக்கையை அச்சமின்மையை ஏற்படுத்தி மனதில் திடமான நம்பிக்கைகளை ஊட்ட வேண்டும். அவரிடம் மன ரீதியான மாற்றத்தை ஏற்படுத்திவிட்டால் உடல் ரீதியான நோயினை வென்று விடலாம்.

மார்பு, கழுத்து, மற்றும் தோள் பகுதிகளில் ஒரு புதிய வலிமையை ஏற்படுத்தும் பதஞ்சலி அவர்கள் வகுத்துள்ள ஆசன தியானப் பயிற்சிகள் பெருமளவில் மார்பகப் புற்றுநோயினால் பாதிக்கப் பட்டுள்ள பெண்கள் மறுவாழ்வு பெற கிடைக்கப் பெற்ற வரப்பிரசாதம் இந்த யோகாசனம் எனலாம். புஜங்காணம், பிறையாசனம், விபரீதகரணி, நாடிசுத்தி, பிராணாயாமம் பயிற்சிகள் தியானம் பதமாசனம் ஹலாசனம் போன்றவைகளை செய்து வந்தாலே அனைத்து நோய்களும் பறந்தோடிவிடும். ஆகவே இப்பயிற்சிகளை முறை யாக அறிந்து தொடர்ந்து செய்து வந்தால் இதய நோய்கள், மார்பக நோய்கள் மற்றும் ஏனைய அனைத்து நோய்களையும் குணமாக்கிவிட முடியும். நாமும் யோகாசனம் செய்து எமது உடலில் ஏற்படும் நோய்களை அகற்றி முறையான யோகாசனங்களை பயின்று வீறுநடை போடுவோம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரதநாட்டியம் - ஓர் அறிமுகம்

பு.டிலக்ஷனி
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

மனித வரலாற்றிலே கலைகள் ஒரு முக்கிய மான இடத்தினை வகித்து வந்துள்ளன. அவை மக்கள் வாழ்வினை வளம்படுத்தியும், செம்மைப் படுத்தியும் வந்துள்ளன. ஆதிகாலம் தொட்டுத் தமிழர் வாழ்விலே கலைகள் ஒன்றிணைந்து வழங்கி வந்துள்ளன. அவை பாரம்பரியமாகப் பேணப்பட்டும் வளர்க்கப்பட்டும் வந்துள்ளன. மனிதர்கள், மிருகங்களாக அலைந்து திரிந்த மிகப் புராதன காலத்திற்கூட ஒருவகையான நடனக் கலை நிலவிற்று. பேச்சுக்கலை எழுத்துக்கலை தோன்றுமுன்பே நடனக்கலை தோன்றிவிட்டது. புராதன மனிதனின் அசைவு நெளிவுகளிலிருந்து நடனம் ஏற்பட்டுவிட்டது. தனது கருத்தை மற்றவர் களுக்கு வெளிப்படுத்த அவன் பாவனை செய்ய வேண்டியிருந்தது.

இசை நடனம் ஆகிய கலைகளின் தோற்றம் தொன்மையில் மறைந்துள்ளது. ஆதிகால மனிதன் இயற்கையோடு ஒன்றிணைந்து வாழ்ந்ததால் அவன் இயற்கையின் பிள்ளையாய் வாழ்ந்தான். தன்னையும், தன்னைச் சூழ்ந் துள்ள இயற்கையையும் பற்றிச் சிந்திக்கவும் தொடங்கினான். இயற்கையில் எழும் பிற ஒலி அசைவுகளை தனது ஒலி அசைவுகளுடன் ஒப்பிட்டு ஒருமைப்படுத்த முற்பட்டான். இந்நிலை யில் தான் கலைகள் தோன்றின.

## நடனத்தின் வரலாறு

பரத நாட்டியம் தென்னிந்தியாவுக்குரிய சிறப் பாகத் தமிழ்நாட்டுக்குரிய நடனமாகும். இது மிகத் தொன்மை வாய்ந்ததும் இந்தியாவிலும், இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பிரபலமானது மாகும். புராணவியல் ரீதியாக பரதமுனிவரால் உண்டாக்கப்பட்டதாகவும் அதனாலேயே பரதம் என்ற பெயர் வந்ததாகவும் கூறுவர். அதேவேளை பரதம் என்ற சொல், ப-பாவம், ர-ராகம், த-தாளம் என்ற மூன்றையும் குறித்து நிற்பதாகவும் சொல் லப்படுகிறது. இதில் பாவம் உணர்ச்சியையும், ராகம் இசையையும் குறிக்கும். இவற்றுடன் தாளம் சேர்ந்த நடனம் தான் பரத நாட்டியம் வரலாற்று நோக்கில், இந்தியாவின் செவ்விய ஆடல் வகைகளில் ஒன்று பரதநாட்டியம். இக் கலை வடிவம் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் தமிழகத்தில் உருவாகியது. கூத்து, ஆடல், நாட்டியம், தாசி ஆட்டம், சின்ன மேளம், சதிர் எனப் பல பெயர்களில் இக்கலை வடிவம் அழைக்கப் பட்டது. ஏறக்குறைய கடந்த 70 ஆண்டுகளாக இது 'பரதநாட்டியம்' என்ற பெயரில் அழைக்கப்படுகிறது. பரதநாட்டியம் தமிழ் நாட்டுக் கோவில்களில் தேவதாசிப் பெண்கள் ஆடிய சதிராட்டத்தின் நெறிமுறைப்படுத்தப்பட்ட வடிவமே ஆகும். நன்கு தேர்ச்சி பெற்றதொரு நாட்டியக் கலைஞரின் முகபாவனையில் நவரசங்களின் பாவனை களையும் வெளிக்கொணரலைக் காணலாம்.

இந்த நடனத்தை ஆடுபவர்கள் மிகப் பெரும் பான்மையோர் பெண்களேயென்றாலும், ஆண் களும் இதனை ஆடுவதுண்டு. சைவ சமயத்தவர் களின் முழுமுதற் கடவுளான சிவன்கூட, நடராஜர் வடிவத்தில் இந்த நடனத்தை ஆடியுள்ளார். சிவ பெருமான் ஆடும் நடனம் "தாண்டவம்" என்று சொல்லப்படுகிறது. மகிழ்ச்சியின் உச்சத்தில் அவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆடும் நடனம் 'ஆனந்தத் தாண்டவம் என்றும், அழிக்கும் கடவுளாக அவர் ஆடும் நடனம் 'ருத்ர' தாண்டவம் என்றும் அழைக்கப்படுகிறது. மென் மையான அசைவுகள் மற்றும் பதங்களுடன் பார்வதி தேவி ஆடுவது "லாஸ்யம்" என்று அழைக் கப்படுகிறது.

உடல் அசைவுகளையும், கை முத்திரை களையும் சேர்த்து. 'அடவு' என்று அழைக்கப் படும். பல அடவுகள் சேர்ந்தது 'ஜதி' எனப்படும். அடவுகள் சுமார் 120 உள்ளன. அவற்றில் கிட்டத்தட்ட எண்பது வரைதான் தற்போது பயன் பாட்டில் உள்ளது. சிதம்பரம் மற்றும் மேலக்கடம் பூர் ஆலயத்தில் உள்ள சிற்பங்களில் இவை செதுக் கப்பட்டுள்ளன. பரத நாட்டியத்திற்கு பாடல், நட்டு வாங்கம், மற்றும் இசைக்கருவிகளின் துணை தேவை. வீணை புல்லாங்குழல், வயலின், மிருதங்கம் ஆகிய இசைக்கருவிகள் இவற்றில் பயன்படுத்தப்படும் சில இசைக்கலைஞர்கள் மேடையின் ஒரு புறமாக அமர்ந்து இசைக்க. நடனம் ஆடுபவர் மேடையின் மையப்பகுதியில் ஆடுவார். நடனம் ஆடுபவர் நாட்டியத்திற்காக பிரத்தியேகமாக தைக்கப்பட்ட ஆடையை (Costum) அணிந்து ஆடுவர். மேலும் பரத நாட்டியத்திற்கான நகைகளையும், காலில் சலங்கையும் அணிந்திருப்பார்.

பரதநாட்டியம் பயிற்றுவிப்பதில் பல்வேறு பாணிகள் உள்ளன. அவற்றில் சில, 'பந்தநல்லூர் பாணி', 'வழுவூர் பாணி', 'தஞ்சாவூர் பாணி', 'மைசூர் பாணி', 'காஞ்சிபுரம் பாணி', ஆகியவை ஆகும். இக்கலையின் ஆசிரியர்களில் 'வழுவூர் ராமையா பிள்ளை 'திருவாளப்புத்தூர் சுவாமிநாத பிள்ளை தனஞ்சயன், அடையார் லஷ்மணன். கலாநிதி நாராயணன்' ஆகியோர் குறிப்பிடத் தக்கவர் ஆவர்.

பரத நாட்டியம் என்ற சொல் வழக்கு, பிற்காலத்தில் வந்தது. ஆனால் இக்கலை வடிவம் மிகப் பழமையானது. பழந்தமிழ் மக்கள் இக்கலை வடிவத்தை "கூத்து" என்று அழைத்தனர். ஆடல், நாட்டியம், நாடகம் என்றும் அழைத்தனர். இது பற்றிச் சங்க இலக்கியங்களில் பல குறிப்புக்கள் உள்ளன. கூத்துக் கலையை வாழ்க்கைத் தொழி லாகக் கொண்டவர் "கூத்தர்" அவர் தம் பெண்பாலர் "கூத்தியர்" இவர்களில் சிலர், விறலியர் என்றும் அழைக்கப்படுவர். இவர்கள் ஆடிப்பாடி அபிநயங் கள் செய்து பழந்தமிழக மன்னரையும் மக்களை யும் மகிழ்வித்தார்கள். பரிசாகப் பொன்னும் பொருளும் பெற்று வாழ்ந்தனர். இவர்களது வாழ்க் கையைப்பற்றி சங்க இலக்கியங்கள் தெரி விக்கின்றன.

**ஆலயங்களும் பரதநாட்டியமும்**

கோயில்களில் ஆடலும் பாடலும் நடை பெறுவது தமிழர் சமய மரபு. கி.பி 11ம் நூற்றாண்டில் முதலாம் இராஜ இராஜசோழன் தஞ்சையில் "ஸ்ரீராஜ ராஜேஸ்வரம்" என்னும் பெரிய கோயிலைக் கட்டினான். இக் கோயிலில் ஆடலும் பாடலும் சிறப்பாக நிகழ ஏற்பாடு செய்தான். தமிழகமெங்கும் ஆங்காங்கிருந்த கோயில்களில் மகளிர் ஆடல் தொண்டு செய்தனர். அவர்களில் சிறந்த நானூறு ஆடல் மகளிரைத் தஞ்சைப் பெரிய கோயிலில் ஆடற்பணி செய்ய வைத்தான். கோயில் சுற்று வீதியில் அவர்களுக்குத் தனித்தனி வீட்டைக் கொடுத்துப் பொருளையும் கொடுத்தான். அத்துடன் உணவையும் அளிக்க ஏற்பாடு செய்தான். இவர்களை முறையாகப் பயிற்றுவிக்க நாட்டிய ஆசான்கள் இருந்தனர். பக்க இசை பாடவும் கருவி இசை வழங்கவும் கலைஞர்கள் இருந்தனர். கோயில்களில் கலைத் தொண்டு சிறப்பாக வளர்ந்தது. இத்தகைய கோயில் பணி. காலம் காலமாகத் தொடர்ந்து நடைபெற. மன்னன் தேவையான ஏற்பாடுகளைச் செய்தான் இதனால் தமிழகத்தில் நாட்டியப் பரம்பரை முறையாகத் தொடர்ந்தது. காலப்போக்கில் இக்கலை வடிவம் தாசி ஆட்டம், சின்னமேளம், சதிர் பரதநாட்டியம் என்று அழைக்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரம்

## (சிறுகதை)



திருமதி.ஸ்ரீகந்தராஜா

கண்ணன் ஏழாந்தரத்தில் படிக்கும் மாண வன். ஆசிரியர் வகுப்பறையில் பாடம் நடத்திக் கொண்டிருந்தார். பாடவேளை நிறைவில்,

"நாளைக்கு கூண்டுக் கிளியின் சுயசரிதை படிக்கப் போறம். யாராவது ஒருவர் கூண்டுக்குள்ள கிளி இருக்கிற மாதிரி ஒரு படம் கீறிக் கொண்டு வாங்கோ..." கண்ணன் முந்திக் கொண்டு "நான் உண்மையான கிளியே கொண்டு வாறன்" என்றான்.

அதற்காகத்தான் வீட்டின் பின்புறம் இருந்த மாந்தோப்பிற்கு இப்போது செல்கிறான் அங்கு ஏராளமான கிளிகள் இருப்பதை ஏற்கெனவே கண்டுள்ளான். கூண்டின் கதவைத் திறந்து, இரண்டு கனிந்த மாம்பழங்களை அதனுள் வைத்துவிட்டு ஒழித்திருந்தான். ஒரு மணி நேரத் தின் பின் ஒரு சிறிய கிளி கூண்டினுள் இருந்த பழத்தை தன் அலகினால் கொத்தியது. அதன் சுவையைக் கண்மூடி இரசித்தது. ஓடிச் சென்ற கண்ணன் கூண்டின் கதவை அடைத்து விட்டான்.

திடுக்குற்ற கிளிக்குஞ்சு தன் சின்னஞ்சிறிய சிறகினை அசைத்து கூண்டிற்குள்ளேயே சுற்றிச் சுற்றிப் பறந்தது. கூண்டிற்கு வெளியே செல்ல வழிதேடி அலைந்தது. கத்திக் கதறியது. சத்தம் கேட்டுப் பறந்து வந்ததாய்க் கிளி கூண்டினைச் சுற்றிச் சுற்றி வந்து கத்தியது.

கண்ணன் சிறிய கல் ஒன்றினை எடுத்து அதன் மீது விட்டெறிந்தான் தூரமாய் பறந்த படி தன் கத்தலை தொடர்ந்தது. கண்ணன் கூண்டு கிளியோடு வீட்டிற்குச் சென்றான். தாய்க்கிளியும் அவன் பின்னாலேயே பறந்து சென்றது. கண்ணன் முற்றத்தில் பாதுகாப்பாக கூண்டை வைத்தான். தாய்க்கிளி மாமரத்தில் இருந்து கத்திக் கொண்டே இருந்தது. கிளிக்குஞ்சு கத்திக் கத்தி களைத்துவிட்டது.

கண்ணன் மாலையில் தந்தையோடு அத்தை வீட்டிற்கு சென்றான். வழியில் ஒரு பெரிய கட்டிடம். ஆங்கில எழுத்துக்களில் ஏதோதோ எழுதி இருந்தது. வாசலில் ஏராளமானோர் கவலை தோய்ந்த முகங்களோடு நின்றார்கள். பெரும்பாலானோர் வயது முதிர்ந்த பெண்கள்.

"யாரப்பா இவை! ஏன் நிக்கினம்?"

"இவை காணாமற் போன பிள்ளையளின்ர பெற்றோரும் உறவினரும். தங்கட பிள்ளை களைக் கண்டு பிடிச்சுத்தரச் சொல்லி நெடுக இங்க நிப்பினம். ஒவ்வொரு நாளும் நான் இவையளைக் காணுறனான். பிள்ளையளின்ர போட்டோவை வைச்சுக் கொண்டு நிப்பினம்" என்றார் தந்தை.

கண்ணனுக்கு நினைவு எங்கோ சென்றது. கூண்டில் அடைபட்ட கிளியின் கத்தலும் தாய்க்கிளி யின் கதறலும் அவனை என்னவோ செய்தது. வீட்டிற்கு வந்ததும் ஓடிச்சென்று கூண்டைத் திறந்து விட்டான். தாய்க்கிளி குஞ்சை தன் சிறகுகளால் வருடியது. சட்டென்று இரண்டும் பறந்து சென்றன. கண்ணன் வீட்டினுள் சென்று பாடப்புத்தகத்தை எடுத்து வாசிக்கத் தொடங்கினான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாடக விமர்சனம்

# 'நிற்க கற்க'

ஜெ.கபில்ஸ்ரா
கலைப்பிரிவு உயர்தரம் 2015



யாழ் திருக்குடும்ப கன்னியர்மட நாடகமும் அரங்கியலும், கற்கும் மாணவிகளினால் மேடையேற்றப்பட்ட "நிற்க கற்க" என்ற நவீன நாடகம் பற்றிய கருத்துக்களை இக்கட்டுரை வெளிப்படுத்த முயல்கின்றது.

கடந்த வருடம், 'டவர் ஹோல்' நாடக மன்றம் கலாசார அமைச்சின் அனுசரணையோடு நடத்திய நாடகப் போட்டிக்காக தயாரிக்கப்பட்ட மேற்படி நாடகமானது, அரங்கியல் ஆசிரியர் யோ.யோண்சன் ராஜ்குமார், அவர்களினால் எழுத்துருவாக்கப்பட்டு நெறியாள்கை செய்யப்பட்டது. மேற்படி நாடகப் போட்டியின் மாவட்ட சுற்றிலே வெற்றிபெற்று தேசிய நிலைப்போட்டிக்குத் தெரிவாகி, தேசியப் போட்டியிலும் பங்கு கொண்டது. இன்னமும் அதற்கான முடிவுகள் வெளியிடப்படாத சூழலிலும் இந்நாடகம், மாவட்டப் போட்டி, விஞ்ஞானதின நிகழ்வு, தேசியமட்ட போட்டி, திருமறைக் கலாமன்றத்தின் நாடகவிழா போன்றவற்றில் மேடையேற்றப்பட்டு பலராலும் பாராட்டுப் பெற்றது.

மோடியுற்ற அளிக்கைப் பண்பினைக் கொண்டிருந்த இந்நாடகம் வெளிப்படுத்திய செய்தியும், வெளிப்படுத்திய முறையும் பலரையும் கவர்ந்தது. 'நிற்க கற்க' என்ற நாடகத்தின் பெயரே நாடகத்தின் மையக்கருத்தினை புலப்படுத்தி இருந்தது. அதாவது "வாழ்வதற்காக கல்" இன்று பட்டதாரிகளாக பலர் இருந்தும் அவர்களுக்கு வேலை இல்லை என்பதே நாடகத்தின் பிரதான பிரச்சனையாக முன்வைக்கப்பட்டது. வேலையில்லாத பட்டதாரி இளைஞன் ஒருவன் "தற்கொலைக்கு முயற்சிக்கின்றான்" அவனை தடுக்கும் உரைஞர்கள் அவனுக்கு புத்தி புகட்டுவதனூடாக நாடகத்தினை நகர்த்திச் செல்லுகின்றனர். பல்வேறு கல்விப்பிரச்சனைகள், நகைச்சுவையோடும், எள்ளல் தன்மையோடும் அரங்கில் விளக்கப்படுகின்றன.

❖ போட்டி நிறைந்த கல்வியினால், சுமை சுமக்கின்ற மாணவர்கள் படுகின்ற துன்பம், ரீயூசன், பாடசாலை என தமது நேரங்களை முழுவதுமாக செலவளிக்கும் மாணவர்களின் அவலம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கல்வியை வியாபாரமாக்கிக் கொண்டு போட்டிகளை விதைத்துவிடும் ரியூசன் கலாசாரம்.
- மாணவர்களின் விருப்பமின்றி, பெற்றோரின் விருப்புக்காக தெரிவுசெய்யப்படும்பாடத்துறைகள்.
- தொழில்ரீதியாக சமுகத்தில் காணப்படும் ஏற்றத் தாழ்வும், உழைப்புக்கு மதிப்புக் கொடுக்காத போலிச் சமூக கௌரவமும்.
- தகுதியற்ற, பட்டங்களை உருவாக்கி விடும் பல்கலைக்கழகங்கள்.
- உற்பத்திக்கு உதவாத கல்வித்துறைகள்
- நாட்டின் வளங்களுக்கும், கல்விக்கும் தொடர்பு இல்லாத தன்மை.

என்று பல விடயங்களை வெவ்வேறு படிமங்களினூடாக நாடகம் பேசியது. "இங்கே படித்தவர்கள் உண்டு அவர்க்கோ வேலை இல்லை இங்கு வேலைகள் உண்டு ஆனால் செய்வதற்கோ ஆட்களில்லை" என்ற முரண்பாட்டினையே பிரதான பிரச்சனையாக கையாண்ட ஆசிரியர் நாடகத்திற் கூடாக பலரையும் சிந்திக்க வைத்தார் என்றுதான் சொல்ல வேண்டும். "எங்கள் மண்ணில் எங்கள் கால்களில் நிற்கக் கற்போம்" என்ற கோசத்துடன் நிறைவடைந்த நாடகம் கல்வி சார்ந்து ஆழமான விடயங்களைப் பேசியது.

நாடகத்தின் வெற்றிக்கு பல்வேறு அரங்கியல் நுட்பங்களும் காரணமாக அமைந்திருந்தன. இருபதுக்கும் மேற்பட்ட நடிகர்கள், 'பொது ஆடையில்" காட்சிகள் செய்து காட்டும் பண்புடன் நிகழ்வுகளை நிகழ்த்தியிருந்தனர். ஆடல்கள், பாடல்கள், எடுத்துரைப்புகள், நகைச்சுவைகள், மோடியுற்ற அசைவுகள், காட்சிப் படிமங்கள் போன்ற பலவும் நாடகத்தில் பயன்படுத்தப்பட்டன.

இவ்வாறான மோடியுற்ற உத்திகள், நாடகத்தின் பெரும் பலமாக காணப்பட்டன. புகையிரதம் போன்று ஓடிவருதல், ஊர்வலம், கோசங்கள், பள்ளிக்கூடம், ரீசன் என்று மாணவர்கள் ஓடி ஒடித் திரிவது, வேலைவாய்ப்பு என்றவுடன் விழுந்தடித்து ஓடுதல், என நாடகம் முழுவதும் அசைவுகளின் தொகுதியாக இருந்தது. அதனால் யாரும் கண்வெட்டாது நாடகத்தோடு இணைந்து நின்றமையை அவதானிக்கமுடிந்தது. அத்துடன் பல மாணவர்களின் நடிப்பு சபையை அதிகம் கவர்ந்தது. அவர்கள் பேசிய முறைமையும் மோடியுற்ற வகையில் பாத்திரங்களை சித்திரித்தமையும் பலரையும் கவர்ந்தது. பொது ஆடையை பயன்படுத்தினாலும் அதிலே மேற்கொண்ட சிறிய, சிறிய மாற்றங்கள், குறியீடாக பாத்திரங்களை இனங் காட்டியதுடன் கற்பனா பூர்வமாக இருந்தது.

நாடகத்திற்கு பயன்படுத்தப்பட்ட இசை குறிப்பாக ஜதிக் கோர்வைகளுக்குள் அசைவுகளை வடிவமைத்தமை, (உதாரணமாக "தாங்கு தக்கிட தக்கிட தக்கிட" என பேராசிரியர் வருவதனை குறிப்பிடலாம்) பாராட்டப்படத்தக்கதாக அமைந்திருந்தது.

நாடகத்தின் கருப்பொருளை விளக்கத்தக்க வகையிலான, காட்சிப்பின்புலம், உயரப்படிமங்கள் போன்றவையும், காண்பியரீதியாக நாடகத்திற்கு முழுமை சேர்த்திருந்தன. திருமறைக்கலா மன்றத்தின் நாடகவிழாவில் மேடையேற்றப்பட்ட போது பயன்படுத்திய ஒளிவிதானிப்பு நாடகத்தினை மற்றொரு தளத்திற்கு கொண்டு சென்றது என்று தான் கூறவேண்டும்.

ஒட்டுமொத்தமாக நோக்கும் போது காலத்துக்கு ஏற்ற செய்தியை வழங்கியது மட்டுமன்றி நாடக எழுத்துரு, நடிப்பு, அசைவுகள், இசை, ஒளி, காட்சிகள் என ஒவ்வொரு விடயங்களும், சிறப்பான நெறியாள்கைக்குட்பட்டிருந்தன. சில மாணவர்களின் பக்குவமற்ற நடிப்பு வெளிப்பாடு, சில இடங்களில் குறையாக இருந்த போதிலும் பாடசாலை நாடகமென்றவகையில் 'நிற்க கற்க' நாடகம் ஒரு வெற்றிகரமான நாடகத்தயாரிப்பு எனலாம். அந்த வகையில், இதனை எழுதி நெறிப்படுத்திய ஆசிரியர் யோண்சன் ராஜ்குமார், காட்சி விதானிப்பை மேற்கொண்ட ஆசிரியர் தனுஷாந், இசையமைப்பை மேற்கொண்ட ஆசிரியை திருமதி.மாிஸ்ரெலா அல்பின் ஆகியோரை பாராட்ட வேண்டும். மொத்தத்தில் "நிற்க கற்க" மெச்சத்தக்க படைப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கையடக்கத் தொலைபேசியின் முக்கியத்துவமும் அதன் சாதக பாதகங்களும்

வ.நிஜந்தினி
கலைப்பிரிவு உயர்தரம் (2016)

காலத்திற்குக் காலம் ஏற்படுகின்ற விஞ்ஞான வளர்ச்சிக்கேற்ப தொலைத்தொடர்புத் துறையில் புரட்சிகரமான மாற்றங்கள் ஏற்படுகின்றன. ஆரம்ப காலத்திலே சைகைகள், குறியீடுகள், முரசறைதல் போன்றவற்றின் மூலம் கருத்துக் களைப் பரிமாறிக்கொண்ட மனிதன் பின்னர் வளர்ச்சி கண்டுள்ளான். இதன் பயனாக ஒருவரோடு ஒருவர் கருத்துக்களைப் பரிமாற்றிக் கொள்ளக் கண்டுபிடிக்கப்பட்ட சாதனமே தொலை பேசி ஆகும்.

விஞ்ஞானமும் தொழிநுட்பமும் ஒரு நாண யத்தின் இரு பக்கங்கள் போன்றன. அவை ஒன் றுடன் ஒன்று பின்னிப்பிணைந்து வளர்ச்சியடைந் துள்ளன. இந்த வளர்ச்சி காரணமாக வானொலி, தொலைக்காட்சி, தொலைநகல், கணினி, இணையம், மின்னஞ்சல், செல்லிடத் தொலை பேசி எனப் பல நவீன தொலைத்தொடர்பு சாதனங் கள் நாளும் உலகை வலம் வருகின்றன, வானொலி, தொலைக்காட்சி என்பன பொழுது போக்குச் சாதனங்களாக இருப்பதாலும் கணினி, இணையம், என்பன கல்விக்குரிய சாதனங்களாக இருப்பதாலும் இவற்றின் வருகை நன்மை, தீமை இரண்டையும் தருவதாகவே அமைகின்றது.

மாட்டின் கூப்பர், என்பவரால் கண்டுபிடிக்கப் பட்ட கையடக்கத் தொலைபேசியானது முன்னைய காலத்தில் பலருக்கு அறிமுகமில்லாத சாதனமாக இருந்தாலும் இன்றைய உலகில் இளைஞர் மத்தியில் பெரும் வரவேற்புமிக்க சாதனமாக மாறியுள்ளமை கண்கூடாகும். இச் சாதனத்தின் சாதக, பாதகங்கள் பற்றி நோக்கும் போது,

கைத்தொலைபேசியின் மூலம் ஒருவரோ டொருவர் சென்ற இடத்திலிருந்தும் உரையாடிக் கொள்ள முடியும். செய்திகளை அனுப்ப முடியும். புகைப்படம் எடுத்துக்கொள்ளவும் வானொலியைக் கேட்டுக்கொள்ளவும் தொலைக் காட்சியைப் பார்த்துக்கொள்ளவும் கூட முடியும். மேலும் இதன் மூலம் தேர்வு முடிவுகள், பங்குச் சந்தை நிலை வரங்கள் போன்றவற்றையும் அறிந்து கொள்ள முடியும். கைத்தொலைபேசியின் மூலம் இணை யத்தளங்களைப் பார்க்க முடிவதோடு முகம் பார்த்துக் கதைக்கவும் முடியும். இவ்வாறான வழிகளில் இக் கைத்தொலைபேசி யானது பயன்மிக்க சாதனமாக விளங்குகின்றது.

இவ்வாறு பலப்பல நன்மைகளைத் தருகின்ற சாதனமாக அமைகின்ற போதிலும் இளைஞர், யுவதிகளின் மத்தியில் இச்சாதனத்தின் வருகை யானது பல பாதக விளைவுகளையும் ஏற்படுத்தி யுள்ளது எனலாம். தொலைபேசியானது சிலருக் குத் தொல்லைதரும் பேசியாக அமைவதோடு அவர்களைத் தீமையான செயல்களுக்கு வித்திட வைக்கிறது. கல்வியில் நேரத்தைச் செலுத்த வேண்டிய இவர்கள் அதை விடுத்துத் தேவையற்ற செயல்களில் ஈடுபடுவதுடன் கல்வியையும் இழக்கின்றனர்.

சகபாடிகளின் பயனற்ற சிநேகிதத்தால் பெற் றோரை மதிக்காமை, ஆசிரியரை மதிக்காமை, நெறி பிறழ்வான நடத்தைகளில் ஈடுபடுதல், ஆபாசப் படங்களைப் பார்த்து அச் செயல்களில்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈடுபட முனைதல் போன்றவற்றால் இவர்கள் சமூக அந்தஸ்த்தை இழப்பதோடு கல்வியிலும் வீழ்ச்சியடைகின்றனர். இதனால் இவர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகுகின்றது. இதனால் இக் கைத்தொலைபேசியின் பயன்பாடானது இவர்கள் மத்தியில் அறிவை வளர்க்கிறதா? இல்லை அழிவை வளர்கிறதா? என்ற கேள்வி எழுகின்றது.

ஆகவே கையடக்கத் தொலைபேசியை இளைஞர்கள் தமது ஆக்கபூர்வமான விடயங்களுக்கு மட்டுமே பயன்படுத்திவருவார்களானால் அவர்களும் அவர்கள் சார்ந்த சமுதாயமும் அதனால் உலகமும் நன்மையடையும். எனவே இச் சாதனத்தைப் பயனுள்ள வகையில் பயன்படுத்தி வாழ்வில் உயர்வோமாக.

# உயிரைக் குடிக்கும் மது

எம் எதிர்கால இளையோர் சமூகமே
ஏன் குடிபோதையில் மாண்டு போகிறாய்
கடினமாய் உழைத்த காசைக் கொண்டு
இலகுவாய் நோயை வாங்கிக் கொள்கிறாய்
வீணாய் குடும்பத்திலே சிறு சிறு
சச்சரவுக்குள்ளே சரிந்து போகிறாய்
உன்னை நீ மறந்து போகிறாய்
சிக்கலுக்குள்ளே சிக்கித் தவிக்கிறாய்
கவலைகள் பஞ்சாய்ப் பறக்கும் என்று
உயிரையே பறக்க விடுகிறாயே
துன்பம் மறக்கக் குடிப்பவர்கள் உண்டு
ஆனால் நீயோ வாழ்வை மறக்கக் குடிக்கிறாய்
நொடிப்பொழுது கழிப்புக்காக
கணப்பொழுது இன்பத்தையும் இழந்துவிடுகிறாய்
பல நாட்களாய் வாழ காத்திருப்பவர்கள் இருக்கையிலே
ஒரு நாளில் உயிர் துறக்க நிற்கிறாய்



**நிதுஷா யேசுதாஸ்**
கலைப்பிரிவு உயர்தரம் (2016)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆறாது எம் துயரம்

ஜெயரூபன் சயானா
கலைப்பிரிவு உயர்தரம் (2016)



போர் அவலம் கண்டு பயந்தே ஓடினோம்
புதை குழியில் இறங்கி உயிரை காத்தோம்
பசி பட்டினியால் அவலப்பட்டோம்
குண்டு வீச்சினால் உறவை விட்டோம்

வானத்தில் பருந்தாய் எச்சங்கள் வீசின
ஏவுகணைகளால் குண்டுகளை பாச்சின
இத்தனை அவலங்களையும் கண்டோமே நாங்கள்
எட்டுத்திசையாலும் சென்றோமே எங்கோ

தாய் வேறு பிள்ளை வேறாய் அலைந்து திரிந்தோம்
தலை வேறு கால் வேறாய் பிணமாய் கண்டோம்
பால்மா வேண்டும் என்று வரிசையில் நின்றோம்
பாதியில் ஓடி உயிரைக் காத்தோம்

மக்களின் பசிக்கு கஞ்சியினை வார்த்தனர்
குண்டுகளின் வீச்சால் இரத்தமே பாய்ந்தன
கப்பலில் உணவை அனுப்பினர் எம் உறவுகள்
உணவுக்காய் நின்று உயிரையே மாய்த்தனர்

துப்பாக்கிச் சூட்டினால் மருத்துவமனை சென்றோம்
குண்டு வீச்சுத் தாக்கத்தால் தகர்ந்ததே மருத்துவமனை
கைகால்களை இழந்து ஊனமுற்றோர் ஆனோம்
சாகும் நிலையில் இருந்து உயிரைக்காத்தோம்

செல் தாக்குதலினால் தனியேயானோம்
ஊரை இழந்து உடமை இழந்து தெரிவில் நின்றோம்
அனைத்தையும் விட்டு அகதிகளானோம்
எத்தனை வருடமாய் முகாம்களில் இருந்தோம்

முகாமினை விட்டு ஊருக்கு திரும்பினோம்
பாதையே தெரியாமல் காடாக இருந்தன
புல்லுகளும் பற்றைகளும் வீடுகளில் வளர்ந்தன
உறவுகளின் முகமே கண்களில் தெரிந்தன

இத்தனை காட்சிகளையும் கண்டதே கண்கள்
எப்படி மறக்க முடியும் முள்ளிவாய்க்காலை
ஆறாது எம் துயரங்கள்
அழியாது எம் நினைவுகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாதா பிதா தெய்வம்

பெரிலோ மேரிகளிஸ்ரா
கலைப்பிரிவு உயர்தரம் (2016)

இறைவன் தந்தது எமக்கொரு வாழ்வு
நாம் பெறுவது இறைவன் தந்த வாழ்வு
பத்து மாதம் வயிற்றில் சுமந்தாள் அன்னை
சாகும்வரை எம்மை சுமக்கின்றாள் எம் பூமித்தாய்

வாழ்க்கை என்பது ஓர் சவால்
தடைக்கல்லைத் தாண்டி ஏறிவிடு
படிக்கட்டில்லாப் பாறையானாலும் ஏறிவிட்டோமேயானால்
இறங்குவது எளிது என்பதை உணர்

நாம் எம் வாழ்வில் தாயை ஓர்
நாயாகப் பேணுகின்றோமா - இல்லை
நாம் எம் கைகளில் ஏந்தி போற்றுகின்றோமோ
யாம் செய்ததை நாமே பெறுவோம்

உன் வாழ்வை நீயே திட்டமிடு
உன் பிறப்பில் உன் அன்னை உடனிருந்தாள்
உன் இறப்புவரினும் அவளோடிரு
உன்னை பெற்றெடுத்த தாயை நேசி



அம்மா என்று அழைத்துப் பார்
அதனில் தெரியும் ஓர் அன்பு
அப்பா என்று மதித்துப் பார்
அதனில் தெரியும் ஓர் பாசம்
இறைவா என்று அழைத்துப் பார்
அதனில் தெரியும் ஓர் இறை அழைத்தல்

பார்த்தவுடன் பழகாதே
பழகியவுடன் இணையாதே
பிறப்பிலும் இறப்பிலும் உன் அன்னையே உன்னோடு இருப்பாள்
அன்னை உன்னைக் கடந்தவுடன் இறைவனை நேசி
இறைவன் உன்னை நேசிப்பார்

அன்பு என்ற வார்த்தைக்கு யாரையும் ஈடாக்காதே
பாசம் என்ற சொல்லிற்கு யாரையும் ஒப்புக்கொள்ளாதே
எல்லாமே உன் அன்னையும் உன் அப்பாவும்
அவர்களில்லை எனில் இறைவனைத் தேடு
மாதா பிதா தெய்வம் மறவாதே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலங்களும் காயங்களும்

செபமாலை மேரிகயசிந்து
கலைப்பிரிவு உயர்தரம் (2016)

தார்மீக தாயகம் என்று கூறி
நீர் மழை பொழியும் நாட்டிலே
தீ மழை பொழிய வைத்தாய் – கண்
நீர் மழை வடிய வைத்தாய்

எங்கிருந்தோ ஒரு காற்று வந்தது
காலங்களும் மாறிச் சென்றது
காலங்கள் மாறினாலும் காயங்கள் மாறவில்லை
கண்ணில் நீர் மழை மறையவில்லை

சொந்த இடம்விட்டு சென்றவர்கள்
மீண்டும் வந்து இங்கு வாழ்ந்தாலும்
பால் போன்று இருந்த மண்ணில்
இரத்தக் கறை மட்டும் மாறவில்லை

கண்முன்னே ஓடி விளையாடிய
கண்ணான பிள்ளை ஊனமானாலும் – அந்தக்
காட்சி இன்னும் மறையவில்லை
மீட்சி இன்னும் கிடைக்கவில்லை

காலங்கள் ஓடி மறைந்தாலும்
சமுதாயம் மாறிச் சென்றாலும்
கண்முன் நடந்த காட்சியும் காயமும்
என்றுமே மாறாது மறையாது

# கருமை

கருமை என்று
கலங்கினேன்
ஒதுக்கப்பட்டேன்

கண்ணீர்
பெருக்கெடுத்தது
ஆறுதல் சொன்னாள்
அவள்

அன்றிலிருந்து
எனக்குப் பிடித்த
நிறம்
கறுப்புத்தான்

தே.அலெக்சாந்திரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லதோர் வீணை செய்தே ..

## (குறு நாடகம்)

அ.ஆன் மக்ஷிகா

கலைப்பிரிவு உயர்தரம் (2015)

பாத்திரங்கள்

| | | |
|---|---|---|
| வைஷ்ணவி | - | (பகீரதியின் மகள்) |
| நளாயினி | - | (நடன ஆசிரியை) |
| சத்தியபாமா | - | (நளாயினியின், நண்பி ஆசிரியை) |
| அனந்திகா<br>டிலுக்ஷி<br>சில்வியா | } | நடன மாணவிகள் |

### காட்சி 1

*('தாம் தரிகிட தீம்... என நடனத்துக்கான தாளக்கட்டும் சலங்கை ஒலியும் கேட்க, திரைவிலகுகின்றது. ஒரு தொகுதி மாணவர்களுக்கு ஆசிரியை நளாயினி நடனம் கற்பித்துக் கொண்டிருக்கின்றாள்)*

**நளாயினி** :- தக்கிட கிடதாக தக்கிட கிடதக தக்கிட கிடதக தாம் தாம்... சில்வியா கையை வடிவாப்பிடி... இஞ்ச வைஷ்ணவியை பார்த்து ஆடுங்கபாப்பம்... உங்களப்போலதானே அவளும், அவள் உடன பிடிக்கிறாள் எண்டால் ஏன் உங்களால ஏலாது

**டிலுக்சி** :- மூண்டாம் காலம் சரியான கஷ்டமாக இருக்கு மிஸ்

**நளாயினி** :- பிள்ளை எதையும் கஸ்டமாக நினைக்கப்படாது நடனம் ஒரு தெய்வீககலை. ஆர்வமும் விருப்பமும் மனதில இருக்கவேணும், அவதானமும் முயற்சியும் இருக்கவேணும். நடராஜப் பெருமானை நினைச்சுக் கொண்டு ஆடேக்க அதில வாற பக்தியும், உடம்பில ஏற்படுகின்ற தெம்பும் எவ்வளவு நேரத்துக்கும் ஆடவைக்கும். நான் வைஷ்ணவியை பாராட்டுறன் எண்டு மற்ற ஆக்கள் குறைவிளங்ககூடாது. நான் முந்தி எப்படி இருந்தனோ அதே ஆர்வம் அவளிட்ட இருக்கு!

**அனந்திகா** :- ஓம் மிஸ்... வைஸ்ணவி ஆடுறதைப்பார்த்தா சரியா நீங்கள் ஆடுறது போலவே இருக்கு மிஸ்.

**வைஷ்னவி** :- ஏன் நீங்களும் மனம் வைச்சு ஆடினால், உங்களாலையும் ஆட ஏலும்.

**நளாயினி** :- வாற கிழமை 'நாட்டியமயில்' நடனப் போட்டி வருகுது விரும்பிற ஆக்கள் பேரைத்தாங்கோ. அதுக்கு ஒவ்வொருநாளும் பிரைக்றிஸ் வைக்க வேணும். போட்டியில வெல்ல வேணுமெண்ட ஆசையும் இருக்கவேணும்.

**வைஷ்ணவி** :- நான் வாறன் மிஸ்.

**அனந்திகா** :- என்ர பேரையும் போடுங்கோ... மிஸ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| டிலுக்சி | :- | நானும்... வாறன் மிஸ். |
| நளாயினி | :- | சரி... அப்ப நாளைக்கு பின்னேரம் நாலுமணிக்கு பிரைக்றிஸ்... வாங்கோ... ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு உருப்படி பழக்க வேணும். |
| எல்லோரும் | :- | ஓம் மிஸ் நாளைக்கு வாறம் |
| நளாயினி | :- | வைஷ்ணவி... கொஞ்சம் நில்லும்... உமக்கு நான் தில்லானா பழக்குவம் எண்டு யோசிககிறன். அது கொஞ்சம் கஸ்டம். |
| வைஷ்ணவி | :- | இல்லை மிஸ்... நான் பழகுவன்... நீங்க பழக்குங்கோ மிஸ். |
| நளாயினி | :- | சரி நாளைக்கு வாரும்... |
| | | *(மாணவர்கள் வெளியேற... நளாயினியின் நண்பி சத்திய பாமா நுழைதல்)* |
| பாமா | :- | என்ன நளாயினி பள்ளிக்கூடத்தில் கத்திறது காணாதெண்டு வீட்டிலையும் நல்லா முறியிறாய் போல் இருக்குது. |
| நளாயினி | :- | ஓமோம்... டான்ஸ் எனக்கு இலட்சியம் எண்டு உனக்குத்தெரியும் தானே... |
| பாமா | :- | என்ன லட்சியம்... படிக்ககேக்க எவ்வளவு ஆர்வத்தோட படிச்சம். இப்ப குடும்பம் எண்டு வந்ததுக்குப்பிறகு எல்லாம் போச்சுது. சில பிள்ளைகள், என்னையும் வந்து வீட்டில வகுப்பு எடுங்கோ மிஸ் எண்டு கேக்குதுகள். எனக்கும் விருப்பம்தான். ஆனால் நான் தட்டுக்கழியைத் தூக்கினாலே என்ர மனிசன் பாம்பைக்கண்ட கீரி போல மாறிவிடும் அதால... |
| நளாயினி | :- | நீ உடன் ஆடுபாம்பே விளையாடு பாம்பே... எண்டு ஆட வேண்டியதுதானே. |
| பாமா | :- | போடி உனக்குப் பகிடியாக்கிடக்குது. உனக்கென்ன நீ குடுத்துவைச்சவள் உன்ர மனிசன் உனக்கு நல்ல ஆதரவு. நீ முழங்கித் தள்ளுறாய்... போனவருஷம் நாட்டிய மயில் போட்டியில் உன்ர பிள்ளைகள் தானே முழுப்பிறைசையும் தட்டிக்கொண்டு வந்ததுகள். |
| நளாயினி | :- | இந்தமுறையும் விடமாட்டன்... எனக்கு நல்லொரு பிள்ளையிருக்கிறாள்... இப்ப கடைசியாப் போனாளே வைஷ்ணவி... அவள் உண்மையில் டான்சுக்கெண்டு பிறந்தவளெடி, ஒரு அட்ச்சரம் பிசகாமல் ஆடுவாள் பார்த்தனிதானே முகத்தை கண்பேசும்... |
| பாமா | :- | ஓமடி... சாயல்ல உன்னைப் போலவே இருந்தாள். |
| நளாயினி | :- | அவள் என்ர நம்பிக்கை நட்சத்திரம் பாமா, அவளுக்கு அரங்கேற்றம் செய்து பார்க்கவேணும் |
| பாமா | :- | இப்பிடி எத்தின பிள்ளைகளை நாங்கள் கற்பனை பண்ணுறம்... பொம்பிளைப் பிள்ளைகளை நம்பி ஒண்டும் செய்ய ஏலாது... எல்லாம் கொஞ்ச நாளைக்குத்தான். |
| நளாயினி | :- | அவள் கொஞ்சம் கஸ்டப்பட்டவள்தான்... ஆனால் நான் என்ர செலவில் எண்டாலும் அரங்கேற்றம் செய்வன்... அதோட அவளை எப்பிடியும் கம்பசுக்கு அனுப்பவேணும். எனக்குப்பிறகு என்ர சாயலை அவள் கொண்டுபோவாள் எண்டு நம்புறன். |
| பாமா | :- | அப்ப இப்பவே... உன்ர வாரிசைக்கண்டு பிடிச்சிற்றாய் எண்டு சொல்லு... நீ இவ்வளவு சொல்லுறாய்... அந்தப்பிள்ளை ஆடுறதை நான் ஒருக்கா பார்க்கத்தான் வேணும்... சரி... நான் வந்தது,உன்னட்ட டான்ஸ் உடுப்பு வாங்க. ரெண்டு டான்ஸ் கொஸ்ரியூம் தாவன்... நாளைக்கு பள்ளிக்கூடத்தில தமிழ் விழா... |
| நளாயினி | :- | ம்... சரி இரு எடுத்துக்கொண்டு வாறான். |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காட்சி – 2

(நளாயினி வீட்டில் நிற்க மாணவிகள் ஆரவாரத்துடன் வருதல்)

அனந்திகா :- மிஸ்... வைஷ்ணவிதான் முதலாம் இடம்

டிலுக்சி :- சுப்பராக இருந்தது மிஸ்...

அனந்திகா :- சரியா நீங்கள் ஆடினமாதிரி இருந்தது.

டிலுக்சி :- எல்லாரும் பாராட்டிச்சினம் மிஸ்

சில்வியா :- பிரதம விருந்தினர் பேசேக்க... தான் இப்பிடி ஒரு தில்லானவைப் பார்க்க இல்லை எண்டு சொன்னார் மிஸ்.

*(வைஷ்ணவி நளாயினியின் காலில் விழுந்து ஆசி பெற்றவாறு தனது பரிசுக் கேடயத்தை வழங்குதல்)*

வைஷ்ணவி :- எல்லாத்துக்கும் நீங்கள் தான் மிஸ் காரணம் நீங்கள தாற உற்சாகமும் பயிற்சியும், எவரையும் ஆடப்பண்ணும் மிஸ்

நளாயினி :- ஆடேக்குள்ள களைக்கேல்லையோ...?

வைஷ்ணவி :- இல்லை மிஸ் நீங்கள் சொன்னமாதிரி, நாங்கள் பக்தியா ஆடினால், உடம்பில இருக்கிற சக்தியெல்லாம் வெளியேறினாலும் ஐம்பூதங்களின்ர சக்தி உடம்பில வந்து செயல் புரியும் எண்டது தான் எனக்கு நினைவுக்கு வந்தது... நானா ஆடுறன் எண்டு எனக்கு சந்தேகமே வந்தது மிஸ்.

*(நளாயினி கண்களில் நீர்மின்ன தன் தோளோடு அணைத்து)*

நளாயினி :- வெறி குட்... உனக்குள்ள நடனம் கிடக்குது

அனந்திகா :- கேக்கப் புல்லரிக்குது மிஸ்...

நளாயினி :- நான் நெடுக சொல்லுவன் நடனம் தெய்வீகக் கலை அது எங்கட பண்பாடு. அடையாளம். அதை விருப்பத்தோட படிக்க வேணும்.

அனந்திகா :- நாங்களும் விரும்பித்தான் படிக்கிறம் மிஸ், ஆனால் வைஷ்ணவி மாதிரி வருகுதில்லையே.

நளாயினி :- ம்... கலை ஒரு கொடையும் தான்... ஆனால் முயற்சி திருவினையாக்கும்... சரி... வாற கிழமையில் இருந்து வடஇலங்கை சங்கீதசபை சோதனைக்கு உங்களை ஆயத்தப்படுத்தப் போறன் எல்லாரும் ஒழுங்கா வகுப்புகளுக்கு வரவேணும்...

எல்லோரும் :- ஓம் மிஸ்...

நளாயினி :- சரி எல்லாரும் போயிற்றுவாங்கோ, வைஷ்ணவி கொஞ்சம் நில்லும்...

*(ஏனைய மாணவர்கள் வெளியேறிய பின்)*

வைஷ்ணவி... நான் உமக்கு அரங்கேற்றம் செய்து பாக்க விரும்புறன்...

வைஷ்ணவி :- உண்மையாவா... மிஸ்... அதுக்கு நிறைய காசுவேணும் மிஸ்... எங்கட வீட்டில...

நளாயினி :- காசைப்பற்றி நீ கவலைப்படாத நான் எல்லாம் செய்வன், உனக்கு கடவுள் நடனத்தைக் கொடையா தந்திருக்கிறார். நீ அதுக்கு விசுவாசமாக வாழ்ந்தால் சரி... நீர் எதுக்கும் உம்மட அம்மாவை என்ன வந்து காணச் சொல்லும்.

வைஷ்ணவி :- *(மகிழ்வுடன்)* ஓம் மிஸ்... நான் பேற்றுவாறன்

*(மிகுந்த உற்சாகத்துடன் ஓடிச் செல்லுதல்)*

*(நளாயினியின் ரெலிபோன் ஒலித்தல்)*

நளாயினி :- ஹலோ பாமாவா... ஆ சொல்லும்... ஓமோம் வைஷ்ணவிதான் முதலாம் இடம் இப்பதான் வந்திற்றுப் போறாள்...ஓ... அவள் நல்ல பண்பு, ஆசிரியரை மதிக்கிறது,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கட சொல்லக் கேக்கிறது. எல்லாத்திரையும் அந்தப்பிள்ளை உச்சம்... பாமா... நான் சொன்னமாதிரி அவளை அரங்கேற்றம் செய்யப்போறன். முடிவெடுத்திட்டன்... ஒமோம் நன்றி... நான் பிறகு எடுக்கிறன்.

## காட்சி 3

***(நளாயினி வகுப்பு எடுப்பதற்கு தயாராக நிற்கின்றாள் மாணவர்கள் வந்து கொண்டிருக்கின்றனர்)***

**நளாயினி** :- என்ன இன்னும் கனபேரைக்காண இல்லை... வைஷ்ணவி தான் முதல் வாறவள் எங்க காண இல்லை...

**அனந்திகா** :- மிஸ்... வைஷ்ணவி இனி வரமாட்டாவா...

**நளாயினி** :- *(அதிர்ச்சியுடன்)* ஏன்...?

**சில்வியா** :- அவவுக்கு...

**டிலுக்ஷி** :- சொல்லன்...

**சில்வியா** :- அவவுக்கு மிஸ், அவவின்ர அப்பா, வெளிநாட்டில ஏதோ புறப்போசலாம்... அவ பள்ளிக் கூடத்துக்கும் இனி வரமாட்டாவாம்...

**டிலுக்சி** :- அவாவின்ர அம்மா உங்களோட வந்து கதைக்கிறாவாம் மிஸ்.

**நளாயினி** :- உண்மையா வா...! *(அதிர்ச்சியுடன்)* ஏன் அதுகளுக்கென்ன விசரா...

***(வைஷ்ணவி அழுத விழிகளோடு வருதல்... பின்னால் தாயார் பகீரதி வருதல்)***

**வைஷ்ணவி** :- *(அழுதபடி)* ரீச்சர்... என்னை டான்ஸ் படிக்க வேணாமாம் எனக்கிப்ப என்ன வயது... நான் படிக்கவேணும் அம்மாட்ட சொல்லுங்க மிஸ்...

**பகீரதி** :- பிள்ள... உனக்கு எல்லாம் சொல்லித்தானே கூட்டிக்கொண்டு வந்தனான்... பிறகேன் அழுது வடிக்கிறாய். ரீச்சர் நான் உங்களோட தனிய கதைக்கவேணும்.

**நளாயினி** :- பிள்ளைகள் நீங்க போயிற்று அடுத்த வகுப்புக்கு வாங்கோ...

***(மாணவர்கள் வெளியேறுதல்)***

**பகீரதி** :- ரீச்சர்... நீங்கள் என்ர மகளில் எடுக்கிற அக்கறைக்கு நான் நன்றி சொல்லவேணும். அவளை அரங்கேற்றம் செய்விக்க வேணுமெண்டு சொன்னீங்களாம்... எங்களுக்கும் சந்தோசம். ஆனால்... இப்ப ஒரு வெளிநாட்டு சம்மந்தம் வந்திருக்குது...

**நளாயினி** :- அம்மா... உங்களுக்கென்ன விசரே... அவள் படிக்கிற பிள்ளை, அதவிட அவள் டான்சில ஒரு காலத்தில பெரிய ஆளா வரக்கூடியவள். அவளின்ர வாழ்க்கையை நாசமாக்கப் போறியளா...

**பகீரதி** :- டான்ஸ் ஆடினால் போதுமா ரீச்சர்? டான்ஸ் சோறு போடாது. நாங்கள் கஸ்டப் பட்டனாங்கள் இவள் மூத்தவள், இவளுக்குப் பிறகு மூண்டு பேர் இருக்கினம். இவளை ஒரு நல்ல ஒரு இடத்தில இறக்கி, வெளிநாட்டுக்கு அனுப்பினால் மற்றப்பிள்ளைகளுக்கும் அவள் உதவுவாள்.

**வைஷ்ணவி** :- அதுக்காக என்ர இலட்சியத்தை சாகடிக்கச் சொல்லுறீங்களா...

**நளாயினி** :- அம்மா... நான் வேணுமெண்டால் அவளின்ர படிப்புச் செலவெல்லாம் பொறுக்கிறன்... தயவுசெய்து படிப்பை நிப்பாட்டாதேங்கோ...

**பகீரதி** :- ஐயோ ரீச்சர் குழப்பிப்போடாதேங்கோ... பெடியன் நல்ல பெடியன் சீதனமில்லாமல் வெளிநாட்டுக்கு கொண்டு போறன் எண்டு கேக்கிறான்... இப்பிடி ஒரு சம்மந்தம் வராது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைஷ்ணவி :- அம்மா பிளீஸ்... அப்பாட்ட சொல்லுங்க...

நளாயினி :- அம்மா தயவு செய்து நான் சொல்லுறதைக் கேளுங்கோ படிக்கிறவயசில இப்ப என்ன அவசரம்.

பகீரதி :- மன்னிச்சுக் கொள்ளுங்கோ ரீச்சா... எங்கட குடும்ப நிலவரம் உங்களுக்கு விளங்கும்... நீவா... போவம்

*(வைஷ்ணவியை இழுத்துக்கொண்டு செல்லுதல்)*

வைஷ்ணவி :- ரீச்சா... அம்மாட்ட சொல்லுங்க ரீச்சா...

*(அழுதழுது செல்லும் வைஷ்ணவியை பார்த்து கண்கள் கசிய அதிர்ச்சியுடன் நாளாயினி நிற்க பாடல்வரி பின்னணியில் ஒலிக்கும்)*

(பாடல்)

நல்லதோர் வீணை செய்தே – அதை
நலங்கெடப் புழுதியில் எறிவதுண்டோ
சொல்லடி சிவசக்தி – என்னை
சுடர்மிகும் அறிவுடன் படைத்துவிட்டாய்...

(பாரதி பாடல்)


# கடந்தகால பள்ளிப் பருவம்

மேசையில் அமர்ந்து எழுத ஆரம்பிக்கின்றேன்
பேனாவுக்கும் பேப்பருக்கும்
இடையில் வந்து போகின்றது
பள்ளிப் பருவம்

ஆறுவயதில் பள்ளியில்
கால்பதித்தேன்
எட்டிப்பார்த்தேன்
எட்டுவருடமாகிவிட்டது

கல்வியிலே கவனமின்றி
விளையாட்டுக்களில் ஆர்வத்துடன்
வெண்ணிற ஆடை அணிந்து
துள்ளித் திரிந்த பள்ளிப் பருவமது

ஆசிரியர்களின் வழிகாட்டலுடன்
நண்பர்களின் குறும்பு தனங்களிலும்
மணி மணியாய் கதைகள்
சொரிந்த காலமது



பரீட்சை தேர்வுகளில் தோல்விகண்டு
விளையாட்டுக்களில் வெற்றி கண்டு
ஆசிரியர்களினால் தண்டிக்கப்பட்டு
வெற்றிகளை தேடிச் சென்ற காலமது

நதி ஓடியது கடலை நோக்கி
பறவைகள் பறந்தன வானத்தை நோக்கி
எனக்கோ விரைந்து
வந்தது தோல்வியே

ஆனாலும் அன்பு நண்பர்கள் தூண்டினார்கள்
முயலென்றார்கள்
வெற்றி கிடைக்கும் என்று
கிடைத்ததே பெரிய வெற்றி
அது தான் சிறந்த பெறுபேறு

**அ.அலோஸ்ரிக்கா**
கலைப்பிரிவு உயர்தரம் (2016)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நவீன ஓவியக் கலைக்கொள்கைகள்

**திருமதி.பப்சி மரியதாசன்**
விரிவுரையாளர்,
யாழ் தேசிய கல்வியியல் கல்லூரி

மனித குலத்தின் வளர்ச்சியோடு இணைந்ததே கலை வளர்ச்சியுமாகும். மனிதனிடத்தில் அறிவுப் பாய்ச்சல் நிகழும் காலங்கள் தோறும், புதிய கற்றலும், அதன்வழி புதிய கொள்கைகளும் எழுந்து அறிவுக் கருவூலங்களாக சேமிக்கப்பட்டு வருகின் றன. இவ்வகையில் கைத்தொழிற் புரட்சி யுகத்தில் ஏற்பட்ட அறிவுப் பாய்ச்சலின் காரணமாக, அதன் பின்னணியில் தோற்றம் பெற்றவையே நவீன கலைக்கொள்கைகளாகும். தொழில்நுட்பக் கருவி களின் கண்டுபிடிப்பால் இதுவரை இருந்து வந்த பல கற்பிதங்கள் கேள்விக்குள்ளாக்கப் பட்டது. அத்துடன் இதுவரை இருந்த சமூகக் கட்டுமான அமைப்புக்கள் மீதும், அவற்றின் தேவைப்பாடுகள் மீதும் சர்ச்சை கள் உருவாகின. இதனால் அவற்றிற்குப் புறம்பான மாற்றங்கள் கருக்கொள்ளத் தொடங்கின.

ஓவியன் என்றால் யார்? ஓவியத்தின் தேவைப் பாடு யாது? எதை ஓவியமாக வரைவது? என்ன முறைகளைப் பயன்படுத்தி ஓவியங்களை வரைவது? என்பது போன்ற வினாக்கள் ஓவியர்களின் சிந்தனையைக் கிளறியமையால் புதிய மாற்றங்கள் உள்வாங்கப்படுவதன் சாத்தியம் ஓவியத் துறையி லும் உருவாயிற்று. இதுவரை காலமும் இருந்த முடியாட்சி முடிவுக்கு வந்தமை, மத நிறுவனங்களின் அதிகார முறைமை மாற்றம் அடைந்தமை, பிரபுத்துவ தலைமைகளுக்கான முக்கியத்துவம் குறைந்தமை போன்ற காரணிகள் ஓவியர்களை சுதந்திரப் பறவைகளாக ஆக்கின. இதுவரை வேறொருவரின் தேவைக்காக அல்லது கட்டளைக்காக ஓவியம் வரைந்தவர்கள் தற்போது தமது சுய விருப்புக்காக ஓவியம் வரையவும், புதிய நுட்பமுறைகளைப் பயன் படுத்தவும் முற்பட்டனர். ஓவியத்துறையில் எழுந்த பல்வேறு பரீட்சார்த்த முயற்சிகளின் விளைவாக இதுவரை கடைப்பிடிக்கப்பட்டுவந்த ஓவிய மரபுகள் உடைக்கப்பட புதியவை தோற்றம் பெற்றன.

19ம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலும் 20ம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் நடாத்தப்பட்ட ஓவியக் கண்காட்சிகள், ஓவியங்கள் உள்வாங்கி கொண்ட மாற்றங்களை உலகிற்கு புலப்படுத்தி யது. புறக்கண்ணால் பார்த்ததை மட்டுமே வரைதல் எனும் நிலைக்குப் புறம்பாக மன உணர்வுகளை வெளிப்படுத்தும் களமாக ஓவியர்கள் மாறத் தொடங்கினர். இயற்கையில் கலைஞன் அவதானித்த காட்சிகளையும், யதார்த்தமாக அன்றாட வாழ்வில் நிகழும் சம்பங்களையும் அகமன உணர்வுகளினால் உள் வாங்கி உள்ளத்தில் ஏற்படுத்திய மனப்பதிவுகளை ஓவியமாக வரைந்தனர். மனப்பதிவு வாதம் எனும் கலைக் கோட்பாடு இவ்வாறே உருவாயிற்று. 'போல் எசசான்' எனும் ஓவியர் இக் கோட்பாட்டை முன்வைத்த நவீன ஓவியத்தின் பிதாமகன் ஆவார். இவரே நவீன ஓவியத்தின் ஆரம்பப் புள்ளியும் எனலாம்.

நவீன ஓவியக்கலை வரலாற்றில் 1907ம் ஆண்டு முக்கியமானதாகும். இவ் ஆண்டு பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் நகரில் ஓவியர் போல் செசான் அவர்களால் ஓர் ஓவியக் கண்காட்சி நடாத்தப்பட்டது. இதுவே நவீன ஓவியத்திற்கான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலாவது அறிமுகமாக அமைந்தது. இயற்கையின் புறத்தோற்றத்தைவிட்டு அகநிலைப்பட்ட மன உணர்வுகளாக மாற்றம் பெற்றது. 'மொனே' 'பிசாரோ', போல் கிளீ, வான்கோ போன்ற ஓவியர்கள் இக்காலப் பகுதியில் நவீன மாற்றங்களைப் பதிவுசெய்த ஓவியர்களுள் முதன்மையானோராகக் காணப்படுகின்றனர்.

காட்சிப்புலத்தின் எல்லைகளுக்கு அப்பால் உள்ளடங்கியிருக்கும் சாராம்சத்தை வெளிக்கொண்டுவரும் நோக்கில் புதிய மாற்றங்கள் வெளிப்படுத்தப்பட்டன. ஓவியம் ஓர் தொடர்பு சாதனமாகவும் சிந்தனை அல்லது உணர்வுகளின் வெளிப்பாட்டு வடிவமாகவும் கொள்ளப்பட்ட நிலையில் "வெளிப்பாட்டு வாதக் கொள்கை' ஓவியர்களால் முன்வைக்கப்பட்டது. உணர்வுகளை வெளிப்படுத்துவதை அடிப்படையாக கொண்ட வெளிப்பாட்டுவாத ஓவியங்களில் எட்வேட் முன்ஞ்' என்பாரின் 'அலறல்' எனும் ஓவியம் பிரபல்யம் பெற்றுள்ளது. ஓவியத்தில் வரையப்பட்டுள்ள மெலிந்த மனித உருவம், அதன் அகன்று விரிந்த கண்கள், ஒடுங்கிய கன்னம், வளைந்த அலையலையான கோடுகளால் நிறைந்து காணப்படும் பின்புலம் எல்லாம் ஓர் ஏகாந்தத் தன்மையையும் பய உணர்வையும் ஏற்படுத்துவதை அவதானிக்கலாம். அலறலின் ஓசை ஓவியம் எங்கும் வியாபித்து பார்வையினையும் தொற்றிக்கொள்கிறது.

நவீன ஓவியக் கொள்கைகளில் ஓவியர்கள் உணர்வுகளை வெளிப்படுத்த பல்வேறு முறைகளைக் கையாண்டனர். 'மொடிலியானி' எனும் வெளிப்பாட்டுவாத ஓவியர் உருவங்களை விகாரப்படுத்தினார். இவரது ஓவியங்களில் நீட்டப்பட்ட மனித உருவங்கள், சரிந்த தலைகள், நீண்ட பாதி மூடிய கண்கள், சோக உணர்வைக் கிளர்ந்தெழச் செய்கின்றன. கொகெய்ன் என்பாரின் ஓவியங்களில் நிறங்கள் விகாரமாக கையாளப்பட்டுள்ளன. எதிர் வர்ணங்களின் சேர்க்கைகளூடாக ஓவியர் கூறவந்த கருப்பொருளை உணர்வுகளை வெளிப்படுத்த முனைகிறார். 'வான்கோ எனும் ஓவியரின் ஓவியங்களில் தூரிகை அசைவுகளும் அடையாளங்களும், அவற்றில் காணப்படும் சீரான அசைவுகளும், மேலோங்கி நிற்கும் மஞ்சள் வர்ணப் பாவனையும் பார்வையாளனின் மன உணர்வுகளை தட்டியெழுப்பும் சக்தியைக் கொண்டுள்ளன.

20ம் நூற்றாண்டின் முற்பகுதியில் மிகப்பிரபலமடைந்த வெளிப்பாட்டுவாதம் எனும் ஓவிய இயக்கம் மனப்பதிவுவாதம் பிற்பட்ட மனப்பதிவாதம், சோசலிசம், டாடா இசம், சர்ரியலிசம், நியோ பிரி மிடி இசம் போன்ற ஓவியக் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டிருந்தது. இதே போன்று அரூபவாதம் எனும் ஓவிய இயக்கமும் முக்கியமானதாக இனங்காணப்பட்டுள்ளது. வெளிப்பாட்டு வாதிகளால் கவரப்பட்டு அவற்றிலிருந்து வேறுபட்டு எழுந்தவைதான் அரூபவாத ஓவியங்கள் ஆகும். பிரதானமாக பிக்காசோ எனும் நவீன ஓவியர் அறிமுகப்படுத்திய கியூபிச ஓவியங்கள் இதற்குச் சிறந்த உதாரணமாகும். அவிக்னோவின் மங்கையர், வயலும் திராட்சைப் பழமும் போன்ற ஓவியங்கள் அரூபத் தன்மையை வெளிப்படுத்துகின்றன.

யுத்தத்தின் கொடுமையை சித்திரிக்கும் 'குவார்ணிகா' போன்ற ஓவியங்கள் உருவச் சிதைப்பிற்குள்ளாக வெவ்வேறு உணர்வுகளை வெளிப்படுத்தும் வெளிப்பாட்டுவாத ஓவியமாக பரிணமித்தது. 'மாசல் டூகம்' எனும் ஓவியரின் 'படிக்கட்டில் இறங்கும் பெண்' எனும் ஓவியம் 'ஜக்சன் பொலக்' எனும் ஓவியரால் அரூபவெளிப்பாட்டுவாத பின்னணியில் வரையப்பட்டது. வலைப்பின்னல் வடிவிலான பல்வேறு நிறங்களைக் கொண்ட பிரமாண்டமான ஓவியங்கள் அரூபவாத ஓவியங்களாக பிரபல்யமாகி உள்ளன. அகவய யதார்த்தவாதம் அல்லது சர்ரியலிஸம் எனக் கூறப்படக்கூடிய கனவு நிலை ஓவியங்களை வரைந்த 'சல்வடோர் டாலி' எனும் ஓவியர் நவீன ஓவியக்கலை வளர்ச்சியில் குறிப்பிடக்கூடிய மற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மொரு முக்கிய ஓவியராவார். இவரது 'வழிந்தோடும் கடிகாரம், உள்நாட்டு கலகத்திற்கான அபாய அறிகுறி போன்ற ஓவியங்களும் பல்வேறு வகையான யதார்த்தத்திற்குப் புறம்பான காட்சிகளைச் சித்திரிக்கின்றன.

நவீன ஓவியக் கலையின் உயர் பரிமாணாங்களைப் புரிந்து கொள்வதற்கான சிறப்பான பயிற்சியும் விளக்கத் தெளிவும், அறிவு விசாலிப்பும் இன்னமும் ஈழத்தமிழர் மரபில் வளர்த்தெடுக்கப் படவில்லை. ஆதலால் இதன் கலைப்பெறுமானங்களைப் புரிந்துகொள்ளப் பலர் தவறிவிடுகின்றனர். பல்வேறு ஓவியங்களைப் பார்வையிடுவதிலும் இரசனை பயிற்சியை வழங்குவதிலும் அதிக அக்கறை கொள்வதனூடாகவே நவீன சித்திரக்கலை எமது மண்ணில் நிலைபெறும் எனலாம்.



எமது முத்தமிழ் மன்றத்தினால் இவ்வருடம் தமிழ்மொழித் தினப்போட்டியின் நாட்டுக்கூத்து போட்டியில் வடமோடிக் கூத்துப் பிரிவில் 'வீரன் தாவீதன்' எனும் வடமோடி கூத்து மாகாண மட்டத்தில் முதலிடத்தைப் பெற்றுக் கொண்டது. இதனை எமது அரங்கியல் ஆசிரியர் யோ.யோண்சன் ராஜ்குமார் எழுதி நெறிப்படுத்தினார்.




**எமது முத்தமிழ் மன்ற வெளியீடு**

| | | |
|---|---|---|
| நூல் | :- | அமைதிப் பூங்கா |
| விடயம் | :- | சிறுவர் நாடகங்கள் |
| ஆசிரியர் | :- | யோ.யோண்சன் ராஜ்குமார் |
| வெளியீடு | :- | தனிநாயகம் முத்தமிழ் மன்றம் |
| விலை | :- | 250/= |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழின் சிறப்பு

சா.மேரிவிதுஷா
கலைப்பிரிவு உயர்தரம் (2015)

"கல்தோன்றி மண்தோன்றாக் காலத்து முன் தோன்றிய மூத்தமொழி நம் தமிழ்மொழி" எனத் தமிழின் தொன்மை பற்றி நாம் பல விடயங்களிலும் கேள்விப்பட்டிருக்கின்றோம். உலகின் பல பாகங்களிலும் பல மொழிகள் பேசப்படுகின்றன. ஆனால் இவ் அனைத்து மொழிகளும் ஆதியிற் தோன்றியவை அல்ல. என்பதை நீங்கள் அறிவீர்கள் ஆம் கிரேக்கம், சீனம், தமிழ் முதலான ஒரு சில மொழிகளே ஆதிமொழிகளாக இன்று அடையாளம் காணப்பட்டுள்ளதோடு அவை செம்மொழியாகவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. அவ்வகையில் கடந்த சகாப்தத்தில் தமிழ்மொழியும் செம்மொழியாக பிரகடனப்படுத்தப்பட்டதை நாம் பெருமையுடன் நினைத்துக்கொள்ள வேண்டும்.

யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவது எங்கும் காணோம்" என்றான் புரட்சிக் கவிஞன் பாரதி ஆம்! உலகில் எத்தனை ஆயிரம் மொழிகள் இருந்தாலும் தமிழ்மொழியைப் போல அவை தித்திப்பதில்லை. இதனை வெறுமனே கூறுவதைவிட ஆதாரம் ஒன்றின் மூலம் முன்வைப்பது சிறப்பானது அதாவது வீரமாமுனிவர் எனும் தமிழ் பெரியாரை அறியாதவர்கள் இருக்கிறார்களா? வீரமாமுனிவர் தமிழிற்கு அளப்பெரிய தொண்டுகள் புரிந்தவர். இலக்கணம், இலக்கியம், உரைநடை என பல துறைகளில் தொண்டாற்றியவர் ஓர் தமிழர் அல்ல என்றால் நீங்கள் நம்புவீர்களா? ஆம் அதுதான் உண்மை இத்தாலியிருந்து கத்தோலிக்க மதத்தை பரப்புவதற்காக வந்த ஜோசப் பெஸ்கியே தமிழ் கற்று தமிழ்மீது கொண்ட விருப்பால் வீரமாமுனிவர் எனும் நாமம் சூடி தமிழன்னைக்கு தன்னாலியன்ற பணி செய்துள்ளார். என்றால் தமிழின் இனிமைதான் என்னே? அதனை வெறும் வார்த்தைகளாலும் எழுத்துவரிகளாலும் கூறத்தான் முடியுமோ?

தமிழ் எப்போது தோன்றியது என திட்டவட்டமாக கூறமுடியாதபோதிலும் இற்றைக்கு 2000ம் ஆண்டுகளுக்கு முன்பே அது சீரிய வளர்ச்சியடைந்திருந்தமையை சங்க இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. தமிழைக்கடைந்து நெய் பெற்றது போல் திகழும் திருக்குறள் உலகப் பொதுமறை என அழைக்கப்படுவதோடு உலகின் எல்லா மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளமையையும் காணலாம். தமிழ்மொழியின் இலக்கண இலக்கியங்கள் தான் எத்தனை அவற்றுள் சிலவற்றை நாம் நோக்கலாம்.

தொல்காப்பியம், சிலப்பதிகாரம், மணிமேகலை, கம்பராமாயாணம், நளவெண்பா, சீறாப்புராணம், தேம்பாவணி, பாஞ்சாலிசபதம் என அடுக்கிக்கொண்டே போகலாம். ஜாதி, மத பேதங்களை மறந்து தமிழர் என்ற ஒரே குடையின் நிழலில் ஒதுங்கி இந்துக்கள், பௌத்தர்கள் கத்தோலிக்கர்கள், இஸ்லாமியர்கள் என எல்லா சமயத்தவர்களும் தமிழின் வளர்ச்சியை நோக்காகக் கொண்டிருந்தமையை தமிழ் இலக்கியங்கள் வாயிலாக அறியமுடிகிறது. "சென்றிடுவீர் திக்குகள் எட்டும் கலைச்செல்வங்கள் கொணர்ந்திங்கு சேர்த்திடுவீர்" என்ற புதுமைக்கவிஞரின் வேண்டுகோளுக்கிணங்க தமிழன்னையை மெருகூட்டி வருகின்றனர். அவ்வகையில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை, நாவல், விமர்சனம் நேரடி மொழி பெயர்ப்பு இலக்கியம் என தமிழின் பரப்பு விரிந்து கொண்டே செல்கின்றது. "யாதும் ஊரே யாவரும் கேளீர்" என்ற சங்கத் தமிழனின் கூற்றை மனதிற் கொண்டு நாமனை வரும் உறவினராக ஓரணி யில் நின்று எம் மொழியாம் தமிழ் மொழியை அழிவடையாது பாதுகாப்பதோடு அதன் அருமை பெருமைகளையும் உலகறியச் செய்யவேண்டும்.

எனினும் தமிழ்மொழியின் சிறப்பு எனும் தீபம் உலகில் ஏற்றப்பட்ட அன்றுதொட்டு இன்று வரை அதனை அணையவிடாது நெய்யிட்டு ஒளி காலச் செய்த பெருமை தமிழ் அறிஞர்களையே சாரும். இன்றுள்ள நிலையில் தமிழ் எழுத்துக்கள் ஒவ் வொன்றையும் ஒன்றுவிடாது எரி ஊட்டியோ, கடலில் இட்டோ அழித்துவிட்டால் என்ன நிகழும் என்பதைக் கண்கொண்டுகூட விரும்பாத அளவிற்கு அவை மக்கள் வாழ்வோடு இணைந்து விட்டன. காலத்திற்குக்காலம் உலகிலே தோன் றிய அறிஞர்களின் சிந்தனைகள், தத்துவங்கள், அறிவியல் முடிவுகள், ஆய்வுகள் என்பவற்றை இன்றும் நாம் நூல்கள் மூலம் இலகுவாக அறிய தமிழ் மொழியே பெரிதும் உதவுகிறது. உலகப் பேரிலக்கியங்கள் யாவும் தமிழில் அமைந்து, கால வெள்ளத்தை கடந்த மக்களின் மன உணர்வை வளர்க்க காரணமாகின்றன.

சிந்தனைகள் வளர்ச்சி அடைந்த மனிதன் தன் சிந்தனைக் கூற்றுக்களை எழுத்தாணி கொண்டு எழுத்துக்களாக ஏடுகளிலே வடித்தான். இவை எல்லாவற்றையும் ஏடுகளிலே பொறிப்ப தற்கு மனிதவளத்திற்கு தமிழ்மொழி உறுதுணை யாக அமைந்தது என்றால் மிகையாகாது. இன்று நம் தமிழ்மொழியிலே சிறுகதை, நாவல் நாடகம், கவிதை, காவியம் முதலிய இலக்கிய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இலக்கியம் தமிழ்மொழி எனும் பொன்முலாம் பூசப்பட்டு மக்களுக்கு தமிழின் வலிமையை அல்லது வல்லமையை எடுத்துக்காட்டுகின்றன. விழுமிய கருத்துக்களை, நல்லுணர்வுகளை வெளிப்படுத் துவனவாய் எக்காலத்திலும் பயன்படுமாறு பாட் டாலோ, உரையாலோ செய்யப்படுவது செய்யுள் இவ்வாறு செய்யுள். சிறப்பானதாக அமைவதற்கு தமிழ்மொழி சிறந்த ஒரு கருவியாக உள்ளது.

இன்று சிறுதைகளும், நாவல்களும், கவிதை களும் புதுக்கவிதைகளும் நாடகங்களுமே பெரும் பான்மையோரால் இலக்கியங்கள் என்று எண் ணப்படுகின்றன. மனிதன் மனப்பலவீனம் உடையவன். அவனது பலவீனத்துக்கு இன்றைய இலக்கியங்கள் ஊக்கம் அளிக்கின்றனவா? என்று தமிழ்மொழி மூலமே புரிந்து பிரித்தறிய முடியும். தமிழ்மொழியை நாம் தெளிவுறக் கற்றோமானால் எல்லா இன மக்களுடனும் தயக்கமின்றி எம் கருத் துக்களை வெளிப்படுத்தவும், அவர்கள் கருத்துக் களை புரிந்து கொள்வதற்கும் மிகவும் இலகுவான தாக இருக்கும். "பலதையும் கற்பவன் பண்டிதனா வன்" என்ற முதுமொழிக்கிணங்க தமிழிலக்கியங் களை வாசிப்பதால் ஒருவர் திருவள்ளுவர் தனது குறளில் கூறியுள்ள திட்பத்தையும், உரையாடுவ தால் ஒட்பத்தையும் எழுதுவதால் நுட்பத்தையும் எய்துவார். ஒருவனுடைய அறிவில் ஆழமும், அகலமும் இதனால் ஏற்படுகின்றது. இவற்றை நாம் பெறவேண்டுமானால் மொழியைத் திறம் படக் கற்றல் அவசியம்.

உலகிலுள்ள பேரிலக்கிய மொழிகளான கிரேக்கம், இலத்தீன், அரபு, சீனம் ஆகிய அனைத் தும் மொழிகளுடைய சிறப்பையும் ஒரு கூட்டினுள் அடங்கியிருப்பது தமிழ் மொழியே. இதனால் தான் தமிழ் இத்தனை சிறப்புப்பெற்றும், முக்கிய மொழி யாகவும், அவசியமொழியாகவும் விளங்கு கின்றது. திருவள்ளுவர்கூட அன்று கூறியுள்ளார். "உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பல கற்றும் கல்லார் அறிவிலார்" என்று உலக மக்களுடன் ஒன்றிப்பழ குவதற்கு மிக முக்கியம் மொழி. அன்றைய காலத் தில் இன்னும் மிக முக்கியமான ஒன்றாக காணப் பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய குழந்தையே நாளைய மனிதன் குழந்தையின் உளவியலை நன்கு விளங்கிக் கொண்டு அதை மனிதனாக வளர்த்து எடுப்பது தான் கல்வியின் முதன்மையான இலக்கு என்பதை எவரும் மறக்கார். அதேபோலவே. குழந்தை சிறந்த தமிழன் என்ற பட்டத்தைப் பெறுவதோடு தமிழின் சிறப்பையும் விளங்கிக் கொள்ளமுடியும். கல்வி, புதிய அறிவைப் பெறுவதற்கும், பெற்ற அறிவை வளர்ப்பதற்கும் வழி செய்கின்றது. ஆனால் தமிழ்மொழியானது ஒரு மனிதனையே தன்னை அறியுமளவிற்கு உதவி புரிகிறது. மொழியின் மீது அபிமானம் வைப்பது வேறு. அதனை பயன்படுத்துவது வேறு. அபிமானங்காரணமாக மொழி வெறிக்குப்பலியாகி விடாது பயன்பாடுபற்றி உலகப் பொது மொழியாகிய ஆங்கிலத்தைக்கற்பது அனைவருக்கும் பயன் அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

“தமிழன் என்று சொல்லடா தலைநிமிர்ந்து நில்லடா” என்று அன்று ஒரு கவிஞன் கூறினான். அதாவது தமிழனாக இருக்கும் ஒவ்வொரு மனிதனும் தான் தமிழன் என்று சொல்லுவதற்கு வெட்கப்படாமலும் பயப்படாமலும் சாவோ வாழ்வோ தமிழன் என்று சொல் தலைநிமிர்ந்து நிற்க வேண்டுமென கவிஞன் உணர்த்தி நிற்பதை நாம் காணலாம். தமிழின் சிறப்பை நாம் எடுத்துநோக்கும் போது அது முன்னைய காலத்தில் எவ்வாறு பரவியது என்பதை அறிகின்றோம். அதாவது நாணயத்திற்கு இரண்டு பக்கங்கள் இருப்பது போன்று முன்னைய காலத்தில் பரவிய தமிழ் தற்போதைய யுகத்தில் எவ்வாறான மரமாக நன்றாக நீர் ஊற்றப்பட்டு பசளை இடப்பட்டு வளர்ந்த மரமாகவுள்ளதா? அல்லது பட்டுப்போன மரமாக உள்ளதா? எனவும் அறிய வேண்டும்.

21ம் நூற்றாண்டு நவீனயுகத்திலே தமிழனையின் மேன்மை புரிந்து உணரப்பட்டு வளர்ந்துவருகின்றது. தற்போது நாம் தமிழை வளர்ப்பதற்கு பல்வேறு வழிகளில் நடந்து பாதைகளை சீராக்கவேண்டும். அதாவது நாம் பேச்சு மொழியை அதிகம் பயன்படுத்தாது எழுத்து மொழியை நாம் பயன்படுத்தும் போது எமது தமிழானது சிறப்புற விளங்கும். நாம் அன்றாடம் பேசும் வார்த்தைகளிலும் சரி எழுதும் எழுத்துக் களிலும் சரி எம் தமிழை வளர்க்கவேண்டும் என்ற தமிழ் உணர்வுடன் செயற்பட வேண்டும். அது மட்டுமா? முன்னைய காலங்களில் எழுத்தாளர்களை நாம் கைவிரல் இட்டு தான் எண்ணமுடியும் ஆனால் தற்போது மூலைமுடுக்கெல்லாம் எழுத்தாளனின் கைவண்ணங்களாகவே உள்ளன. தற்போது தமிழானது எழுத்தாளனின் கைவண்ணங்களாலும் மேலும் வளர்கிறது. அதாவது எழுத்தாளன் வாசகனை படைத்துள்ளான். இவ் வாறாக இருப்பதனால் தமிழானது தன் நிலையை விட்டு அகலாது நேரிய வழியில் முட்கள் இருந்தாலும் அதனையும் தாண்டி வளர்ந்து வருகின்றது என்றால் மிகையாகாது.


ஆகவே தமிழனாக பிறந்த எம் ஒவ்வொருவர் உடலிலும் ஓடுவது தமிழர் உணர்வு இரத்தமே. என்பதை புரிந்துகொண்டு தமிழன்னை சிறையில் அடைபடாமல் வாழ தமிழை முறையாகக் கற்று தமிழை வளர்ப்பதோடு மட்டும் நின்று விடாது தமிழன் அதனால் தமிழ் வளர்க்க உதவுகிறேன் என்றிராது தமிழன் என்பவன் மிகச்சிறந்த உணர்வாளன் என்பதை புரிந்து கொண்டு எம் தாய்மொழியாம் தமிழ்மொழியை உயிரினும் மேலான மொழியாக மதித்து அதனை வளர்க்க வேண்டும். தமிழன் சிறந்த மனிதன். ஆகவே கிரேக்கம், சீனம் போன்ற எல்லா மொழிகளிலுமே சிறந்ததாக விளங்குவது தமிழே! என்று புரிந்து கொள்வதனூடாக நாம் தாய்மொழியின் சிறப்பை நன்றாக எடுத்துரைக்க முடியும் என்பதில் ஐயமில்லை.


வாழ்க தமிழ்! வளர்க தமிழ்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரேசா தளபாடம்



தரமான தளபாடங்களுக்கு
நாடுங்கள்

137, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே:
021 222 7941

**SPEED LANKA EXPRESS**



# வெளிநாடுகளுக்கான
## தபால் பொதிகள் சேவை

உள்நாட்டு, வெளிநாட்டு துரித தபால் பொதிகள் சேவை
உங்கள் இல்லங்களில் இருந்தவாறே அனுப்பும் வசதி
நிர்ணயிக்கப்பட்ட குறைந்த கட்டணம்
அனுப்பும் பொதிகளுக்கான உத்தரவாதம்
சர்வதேச விமான பயண சீட்டுக்களை பெற்றுக் கொள்ளலாம்.

**ஸ்பீட் லங்கா எக்ஸ்பிரஸ் கொரியர் & ரவல்ஸ்**

135, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

தொ.பே: 0772931062, 0776217926
www.speedlanka.net



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருணையா

## வைத்தியசாலை

(சென் றொக் மைதானத்திற்கு முன்பாக



கர்ப்பிணிகளுக்கான ஸ்கானிங் சேவையும், ஆலோசனைகளும்
சிறுகுழந்தைகளுக்கான வைத்திய சேவைகள்
சிறு சத்திர சிகிச்சைகள், பொது வைத்திய சேவைகள்
ECG சேவைகள், அடிப்படை சிறுநீர், இரத்த பரிசோதனைகள்,
Sugar, Cholesterol (சுகர், கொலஸ்ரோல்)
வாகன மருத்துவ சான்றிதழ்

**யாழ் போதனா வைத்தியசாலை பிரபல வைத்தியர்**

**Dr.அல்பிறட் குரூஸ்,**
**MBBS, Sri Lanka.**

**இல.45, பாக்றோட்,**
**றெக்கிளமேசன், குருநகர்.**

**தொ.பே: 0773039606**



புதிய கட்டடத் தொகுதியில்

# ஸ்ரீ முருகன்
# நகை மாளிகை



**தங்கப்பவுண் நகை வியாபாரம்**

**கண்கவர் 22 Ct தங்க**
**நகைகளை பெற்றிட**
**நம்பகமான ஸ்தாபனம்**

80/2, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5965

**80/2, Kasthuriyar Road,**
**Jaffna.**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# RENY

## Dental & Opitical Services



பல் கட்டிக் கொடுக்கப்படும்.
மிதப்புப் பற்களுக்கு கிளிப் செய்து கொடுக்கப்படும்.
கணனி மூலம் (Computerised)
கண் பரிசோதித்து
கண்ணாடி வழங்கப்படும்.




இல.540, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

Branch:-
பருத்தித்துறை & சாவகச்சேரி

# கிளின்ரன்

அந்தியகால சேவை



*Clinton Funeral Services*

548, Hospital Road,
Jaffna

T.P: 021 222 3518


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MATHI COLOURS



உங்கள் இல்லங்களில் நடைபெற இருக்கும் மங்களகரமான நிகழ்வுகளுக்கு...

# மதி கலர்ஸ்

## திருமண அழைப்பிதழ் காட்சியறை







## WEDDING CARD SHOW ROOM

15/2, Murugesar Lane, Nallur,Jaffna.

T.P: 021 2229285, 077 7222259

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்தமிழ் விழா - 2013





















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

MATHI COLOURS
Nallur 021 2229285